N54·1·11
197205

அழகிற்கு
அழகு

மனதிற்கு
மகிழ்ச்சி

உயர்ந்த
உறுதியான
வேலைப்பாடுள்ள

வைரம்
தங்க
நகைகள்

வெள்ளி
பாத்திரங்களுக்கு

T. கோவிந்தராஜுலு நாயுடு

JEWELLERS & DIAMOND MERCHANTS

28. நேதாஜி
சுபாஷ் சந்தரபோஸ் ரோடு
மதராஸ் . 1

மார்ச் 3-ந் தேதி முதல் தமிழ் நாடெங்கும்

தமிழகத்தின் தலைசிறந்த நாடகம்
மூன்று வருட முயற்சியால்
முத்தமிழ்த் திரைக் காவியமாக-
உருவாகியுள்ளது...



மனோகர் பிக்சர்சாரின்
மனோகரா
(தமிழ்)

டைரக்ஷன்
பிரசாத்

கதை:
நாடகபேராசிரியர்
ராவ்பகதூர் சம்பந்த முதலியார்

தயாரிப்பு
எம். சோமசுந்தரம்

பூரண உரிமையாளர்கள்
ராதாகிருஷ்ணா பிலிம்ஸ் லிமிடெட் (தலைமை ஆபீஸ்: ஆலப்புழை.)
(சேர்மன், S. குமாரஸ்வாமி ரெட்டியார், ஜவுளி வியாபாரம், ஆலப்புழை, பாம்பே & கொல்லம்)
பிராஞ்சு கிரீன்வேஸ் ரோட் – சென்னை-28.

RKF LIMITED
திரைக் கதை வசனம் மு. கருணாநிதி... ஸ்டுடியோ நெப்டியூன்

ரூ. 1000 ரொக்க இனம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாய ஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாகிவிடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும் இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்டரி ஆட்டப்பந்தயம் சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள் பரீக்ஷையில் தேறுவீர்கள் வியாபாரத்தில் லாபம் உண்டாகும், துஷ்ட கிரஹம் சாந்தியடையும், தரித்திரம் விலகும். நல்லதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும், சந்தோஷமாகவும் கழியும்,

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0.0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம்மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படிப் பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிருபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனம்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விவரங்களுக்கு எழுதவும் :

Principal,

The Bengal Mesmerism House (U.M.)

JULLUNDUR CITY.

பிரிய சகோதரிகளே!

நான் ஒரு நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஒரு குடித்தனப்பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்றுவிட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது; இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக் கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஒரு சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டுவாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, ''அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?'' என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்கு போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத் தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI CHARAN PIARI

SANT NAGAR : (U. M.) JULLUNDUR CITY.

WHY FRET ABOUT YOUR FOUNTAIN PEN?

Fill it with PILOT

Used wherever good pens are used.

Manufactured for

THE PILOT PEN CO. (INDIA) LTD.

RED HILLS **MADRAS.**

EP

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

நிர்வாக ஆசிரியர்: ர. சண்முகம்

செடி 1 மலர் 11	மார்ச் 1954	விஜய ௵ மாசி ௴

பொருளடக்கம்

எழுத்தாளர் உலகம்!	தலையங்கம்	...	9
நாமும் நீங்களும்		...	11
எதிரொலி		...	12
எல்லையுடன் வாழ்!	'பதி'	...	14
சூடும் சுவையும்	நையாண்டி பாரதி	...	16
கானல் நீர்	கே. ஆர். கௌஸல்யா	...	19
வெற்றி ரகசியம்	(உலக இலக்கியம்) "மாலா"	....	28
உங்களால் மகிழ்ச்சியுடன் இருக்க முடிகிறதா?	ஜி. சுவாமிநாதன்	...	32
வாழ்வின் தளிர்	பூவை. எஸ். ஆறுமுகம்	....	35
பரதேசிக் குரல்	கி. கவிதை நேசன்	....	42
அழகும் அநுதாபமும்	தோ. ந. வீரராகவன்	....	45
ஞாபகச் சின்னம்	கோடங்குடி பாலு	....	53
நிலவே நீ வா	நாமக்கல். ரா. பாலசுப்பிரமணியன்	...	57
கிளிக் கூண்டு	ஜேசு	...	59
குறுக்குவழியில் செல்வம்	ர. சண்முகம்	....	67
கலை	செந்தில் வேலன்	....	71

உமா 'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



"அலை வர்றது டோய்!
ஓடிப் போயிடுவோமா...?"

1972

எழுத்தாளர் உலகம்!

தமிழ் எழுத்தாளர் மாநாட்டை ஆரம்பித்து வைத்த முதல மைச்சர் ராஜாஜி எழுத்தாளர்களுக்கு சில நல்ல அறிவுரைகள் கூறியிருக்கிருர். இவை ஆழ்ந்து கவனித்து சிந்திக்கப்பட வேண்டியவையாகும்.

இளம் வயதிலேயே எழுத்தாளனுகிவிட வேண்டுமென்ற துடிப்பு இப்பொழுது தமிழகத்தில் காணப்படுகிறது. ராஜாஜி கூறியது போல சின்னஞ்சிறு பெண்களெல்லாம் சிறு கதை எழுதத் தொடங்கியிருக்கின்றனர்.

இந்த நிலையை தமிழகத்தின் ஒரு முற்போக்கான அம்சம் என்று யாரும் வரவேற்றுவிட முடியாது.

கதை எழுதுவது—அதை அச்சில் பார்ப்பது ஒரு 'பாஷன்' என்ற மனே நிலையுடன்தான் இன்று எழுத்தாளர்கள் பெருகி வளருகின்றனர். பெண் குழந்தை என்ருல் அதற்கு நடனம் கற்றுக் கொடுத்தாக வேண்டும் என்று ஒரு பழக்கம் இப்பொழுது இருக்கிறதல்லவா! அதே ரீதியில்தான் எழுதத் தெரிந்தாலும், தெரியா விட்டாலும் 'எழுத்தாளன்' என்று பட்டப் பெயர் சூட்டிக் கொள்ளும் பழக்கம் இப்பொழுது நடுத்தரக் குடும்பக் குழந்தைகளுக்கு ஏற்பட்டு வருகிறது.

அனுபவம் தான் இலக்கியத்துக்கு மெருகு தரமுடியும் என்ற ராஜாஜியின் வாக்கு அனுபவத்தில் ஊறியெழுந்த பொன் மொழியாகும். எழுதுவதெல்லாம் அச்சில் வந்துவிட வேண்டும் என்ற ஆர்வம் அனுபவத்தை வளர்க்காது. நமது இளம் கதாசிரியர்—கதாசிரியைகளுக்கு இது விளங்குவதில்லை. அதன் பயனுக ஆழமற்ற, பொருளற்ற, உப்புச்சப்பற்ற சிறு கதைகளைத்தான் பத்திரிகைகளில் பார்க்க முடிகிறது. 'காதல், தாம்பத்திய வாழ்வு, குடும்பக் கஷ்டங்கள் ஆகிய இந்த விஷயங்கள் அனுபவசாலிகளைக் கூட திணறவைக்கும் பெரும் புதிர்களாகும். மேற்கண்ட பிரச்னைகளுக்கு ஒரு உருவம் குறிப்பிட்டுக் காட்டவே முடியாது. வாழ்க்கையில் அடிபட்டுத் தேறிய முதிர்ந்த எழுத்தாளர்களால் கூட மேற்கண்ட பிரச்னைகளை வைத்து வெற்றிகரமான இலக்கியங்களைச் சிருஷ்டிக்க முடியவில்லை என்ருல், கண்களை மூடிக்கொண்டு இருட்டில் நடக்கும் சின்னஞ்சிறு இதயங்களின் எழுத்துக்களில் எப்படி கருத்தாழம் இருக்க முடியும்? சில கதைகளைப் படிக்கும்போது 'காதல், அன்பு' என்ற சொற்களே அர்த்தமற்ற வீண் வார்த்தைகளோ என்ற ஐயங்கூட நமக்கு ஏற்பட்டுவிடுகிறது.

எழுத்து நடைக்கும், பேச்சு நடைக்கும் இடையே வித்தியாசம் இருக்க வேண்டும் என்ற ராஜாஜியின் வாக்கை நாம் வரவேற்கிறோம். கதைகளில், நாவல்களில், உரையாடல்களின் போது கூட கொச்சைப் பேச்சு நடையைக் கையாள்வதற்குப் பதில் மெருகுடன் கூடிய இலக்கிய நடையையே கையாள்வதுதான் இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரியும். ''கதாநாயகனே, நாயகியோ, வாழ்க்கையில் இலக்கண சுத்தமாகத்தான் பேசுவார்களா?'' என்ற மனோபாவம் இலக்கிய உலகத்தைக் குப்பையாக்கிவிடத்தான் பயன்படும். வாழ்க்கையின் விமரிசனமாகக் கலை அமைய வேண்டும் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் வாழ்க்கையை அப்படியே அப்பட்டமாகப் பிரதிபலிப்பது கலையாகாது என்பதையும் மறந்துவிடக் கூடாது.

எழுதுபவர்கள் தங்கள் கஷ்டங்களை சிறிது நேரமாவது மறந்துவிட்டு எழுத வேண்டும் என்ற ராஜாஜியின் அறிவுரை சற்று சிக்கலானது தான். குடும்பக் கஷ்டங்கள் சூழ்ந்து நின்று பேய்க் கூச்சல் போட்டு குழப்பும் போது அதை மறந்துவிட்டு எழுத நினைப்பது அசுரத்தனமான முயற்சிதான். அது சாத்தியம் என்று கூறவே முடியாது. எழுத்தாளர்களுக்கு பொருளாதாரத் துறையில் கடன் வசதி போன்று சில சௌகரியங்களை அளிக்க வழி தேட முடியுமா என்று அரசாங்கமே யோசிக்கலாம். எழுத்தாளர்களின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்த எழுத்தாளரான ராஜாஜியே முதலமைச்சராக இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், நிச்சயம் அரசாங்கம் தானே எழுத்தாளர் பக்கம் கண்களை ஓட்டி பொருளாதாரத் துறையில் அவர்கள் நிலையை உயர்த்த ஏதாவது முயற்சி யெடுக்கும் என்று நாம் உரிமையுடன் எதிர்பார்க்கிறோம்.



''தன்னுடைய கஷ்டங்களைக் கொஞ்ச நேரம் மறந்து விட்டு எழுத்தாளர்கள் எழுத வேண்டும்'' என்று முதலமைச்சர் ராஜாஜி எழுத்தாளர் மாநாட்டில் கூறினர்.

நாமும் நீங்களும்

புதிதாக பத்திரிகை ஆரம்பிக்கும் ஒரு நபரை ''பத்திரிகையை எப்பொழுது நிறுத்தப் போகிறீர்கள்'' என்று கேட்டு ஆசிர்வதிப்பதுதான் தற்கால வழக்கம்; அதாவது பத்திரிகைத் தொழில் அவ்வளவு பயங்கரமானது; எளிதில் வெற்றிபெற முடியாத தொழில் என்ற கருத்தை உள்ளடக்கித்தான் இப்படி நகைச்சுவையாகக் கேட்பார்கள்.

தமிழ் நாட்டில் பத்திரிகைப் பூங்காவில் தினம் தினம் எத்தனையோ புது மலர்கள் பூக்கின்றன. ஆனால் எதுவும் நிலைப்பதில்லை; விரைவில் அவை கருகிக் கருகி மாய்ந்து விடுவதை பார்த்துக் கொண்டே இருக்கிறோம். ஒரு சில மலர்கள் நிலைத்தாலும் அதன் வாழ்வு ''நித்திய கண்டம் பூரண ஆயுசு'' என்ற ரீதியில்தான் அமைகிறது. அதனால் பத்திரிகைத் தொழில் முள் முனையில் நின்று விளையாடுவது போன்ற ஒரு பயங்கரச் சாதனையே என்பதில் ஐயமில்லை.

ஆரம்ப காலத்தில் 'உமா'வின் வளர்ச்சி பற்றி பத்திரிகை உலகத்திலும், வாசகர்கள் வட்டாரத்திலும் சந்தேகமான அபிப்பிராயங்கள்தான் உலாவின. நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு மேல் 'உமா'வின் வாழ்வு நீளாது என்று கண்டம் வைத்துவிட்டு வழிமேல் விழி வைத்து எத்தனை பேர் கண் பூத்துப்போக பார்த்தனர்.

ஆனால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து அடுத்த மாதம் - அதாவது ஏப்ரலில் தன் ஓராண்டு நிறைவைக் கொண்டாடி, மே மாதம் முதல், புது வருடப் பாதையில் 'உமா' காலடி வைக்கிறாள்.

பத்திரிகை உலகத்தில் 'உமா'வின் தளராத நடை ஒரு அரிய சாதனைதான் என்பதைக் கூறிப் பெருமையடைய எங்களுக்கு நிச்சயம் உரிமை உண்டு.

இந்தப் பெருமை தனிப்பட எங்களுக்கு மட்டும் சொந்தமில்லை. 'உமா'வின் வளர்ச்சி தமிழ்ப் பத்திரிகை உலகத்தின் பெருமையை - தமிழ் நாட்டின் பெருமையை - தமிழ் வாசகர்களின் பெருமையை உலகுக்கு உணர்த்திக் காட்டுகிறது. அதனால் தமிழகமே குதூகலப்பட வேண்டிய விஷயம் இது.

'ஏப்ரல்' இதழ் ஆண்டு நிறைவின் விசேஷ இதழாக மலர இருக்கிறது. இந்த செய்தியைத் தவிர அதிகமாக நாங்கள் சொல்லிக்கொள்ள இப்பொழுது விரும்பவில்லை. 'உமா' மலர்களின் சிறப்பை நாங்கள் கூறித்தானா நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்?

புதுப் பகுதிகள் பற்றி பெரும்பான்மையோர் பாராட்டி எழுதியுள்ளனர். 'சூடும் சுவையும்' பகுதி பற்றி மட்டும் சில ஆட்சேபனைகள் எழும்பியுள்ளன. 'உமா'வில் கைத்தவறி விழுந்து விட்டிருக்கும் சிறு பிழைகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டி ''ஒரு முதல்தர பத்திரிகையான 'உமா'வில் அணுவளவு தவறு நிகழவும் சகியோம்'' என்று சிலர் அன்போடு கண்டித்து எழுதியுள்ளனர். 'உமா' மக்களின் சொந்தப் பத்திரிகையாக மாறிவிட்டது என்பதற்கு இந்தக் கண்டிப்பே சரியான காரணமாகும். அவர்கள் விரும்பும் வண்ணமே எதிர்காலத்தில் நடந்து கொள்வோம் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்.

எதிரொலி

பேனு மன்னர்கள் மாநாட்டில்...!

பேனு மன்னர்களின் மாநாட்டில் சில பேனுச் சக்கரவர்த்திகளுக்கு விருதுகள் அளித்து அவர்கள் சேவையைப்பெருமைபடுத்தியது இவ்வருடத்திய அதிசயம் என்றே குறிப்பிடலாம். கலைஞுகைப் பிறந்துவிட்ட ஆத்மாக்களுக்கு சாதாரணமாக ஒரு மனப்பண்பு உண்டு. ஒரு தட்டில் கோடி ரூபாய்களையும், இன்னொரு தட்டில் வெறும் புகழ் மாலைகளையும் வைத்து 'எது தேவை' என்று கேட்டால் கலைஞன் புகழ் மாலைகளையே கை நீட்டி எடுப்பான். அவன் அன்றுடங் காய்ச்சியாக இருந்தாலும் சரி, அடுத்த வேளையை பற்றி உறுதி கூற முடியாத நிலையில் இருப்பவனுயினும் சரி; உண்மைக் கலைஞன் முதலில் புகழையும், அடுத்தபடியாகத் தான் வயிற்றையும் கவனிப்பான்.

தமிழகத்தில் இந்தப் புகழ்ச்சிக்குக் கூட பஞ்சம் நிறைய இருக்கத்தான் செய்கிறது. நல்ல செயல் எதையாவது செய்தவனை வாய் திறந்து பாராட்டும் பண்பு, என்ன காரணத்தாலோ இங்கே மூலிகைச் சரக்காக மாறிவிட்டது.

இந்த விரும்பத்தகாத பண்பாட்டுக்கு முடிவு கட்டுவது போல சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் அரசியல் நூல் வல்லுநர் வெ. சாமிநாத சர்மா அவர்களையும், இலக்கியப் பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களையும், தமிழாராய்ச்சித் தலைவர் பெ. தூரன் அவர்களையும், பாரதியின் நினைவுச் சின்னங்களைத் தேடியெடுத்து நமக்கு காட்சி தரும் வண்ணம் அமைத்த ரா. அ. பத்மநாபன் அவர்களையும் தக்க முறையில் பாராட்டிப் போற்றியிருக்கின்றனர். இப்படிப்பட்ட அருமையான சாதனையின் மூலகர்த்தாவும் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவருமான 'கல்கி' ஆசிரியர் தமிழ் மக்களின் நன்றியுள்ள பாராட்டுக்கு உரியவர் என்பதில் ஐயமென்ன?

எழுத்தாளர் மாநாட்டில் சில புதுமைகளையும் நாம் பார்க்க முடிந்தது. இளம் எழுத்தாளரான கே. ஆர். கௌஸல்யா தன் சகோதரியுடன் மிக அழகாக, இனிய குரலில் பிரார்த்தனைக் கீதங்கள் பாடினர். விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதும் திரு நீ. ரா. ஸ்ரீனிவாசன், தனக்குத் தமிழில் சரியாகப் பேச வராது, என்று கூறிக்கொண்டே மணிக் கணக்கில் அருமையான ஒரு சொற்பொழிவு செய்தார். பேனு மன்னர்கள் கொஞ்சம் முயற்சி யெடுத்தால், எழுத்துத் துறையில் மட்டுமன்றி வேறு எந்தத்துறையிலும்கூட மன்னர்களாகத் திகழ முடியும் என்ற நம்பிக்கையை இந்த நிகழ்ச்சிகள் நமக்கு அளிக்கின்றன அல்லவா!

மாநாட்டை முதல் நாள் ஆரம்பித்து வைத்த நமது முதலமைச்சர் ராஜாஜியின் சொற்பொழிவு வழக்கம்போல கருத்தாழமும் நகைச்சுவையும் நிரம்பி யிருந்தது. அவர் கூறிய சில விஷயங்கள் பத்திரிகை ஆசிரியர்களாக உள்ளவர்களுக்கு பெரிய ஆச்சரியத்தை அளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

"பள்ளியில் படிக்கும் சிறு பெண்கள் படிப்பை முடித்ததும், கதை எழுத வேண்டும் என்று ஆசைப்படுகிருர்கள்; எழுதுகிருர்கள். அந்தக் கதைகளை தகப்பனர் தூக்கிக் கொண்டு பத்திரிகைக் காரியாலயங்களுக்குச் சென்று ஆசிரியர்களின் கழுத்தை அறுக்கிருர்.

ஆசிரியர் கதையைப் போட மறுத்தார் என்றால் அவர்களுக்கு (தகப்பனாருக்கு) கோபம் வந்து விடுகிறது....'' என்று ராஜாஜி கூறிக்கொண்டிருந்த போது என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர், ''அடடே! நேற்று எங்கள் காரியாலயத்தில் நடந்த இந்த விஷயம் ராஜாஜிக்கு எப்படித் தெரிந்தது'' என்று துள்ளிக் குதிக்க ஆரம்பித்து விட்டார். அரசாங்கத்தின் ஓயாத வேலைகளுக்கு நடுவே இதைப் பற்றியெல்லாம் அவரால் எப்படி சிந்திக்க முடிகிறது என்ற விஷயம் நமக்கு வியப்பைத்தானே அளிக்கிறது!

எழுத்தாளர் சங்கத்தின் பத்திரிகையான 'பாரதி'யின் அமைப்பும் கருத்துக்களும் பாராட்டக்கூடிய வகையிலே உள்ளன. திரு. வெ. சாமிநாத சர்மா அதன் ஆசிரியர் பொறுப்பு வகிக்கிறார் என்ற செய்தியே நமக்கு தேனாகக் காதில் பாய்கிறது. ஆனால் பத்திரிகையின் குறிக்கோளைக் கவனிக்கும்போது திரு. சர்மா அவர்களின் அபார அறிவுத் திறனை 'பாரதி'யில் எந்த உருவத்தில் எதிர்பார்க்க முடியும் என்று புரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

ரசிக மணியின் மறைவு!

ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் தமிழ் மொழியை விட்டுப் பிரிந்துவிட்டார். அதாவது அவரது உடல் பிரிந்தது; உள்ளம் தமிழை விட்டுப் பிரியுமா? தமிழுக்கு அவர் செய்த சேவையைப் பிரிக்க முடியுமா? ஆகவே டி. கே. சி. இன்னும் நம்மிடையே வாழ்கிறார் என்றுதான் மனதைத் தேற்றிக்கொள்ள வேண்டும்.

எழுபத்து மூன்றாவது வயதில் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடந்தபோது அவரது இறுதி நிலை எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால் அவர் வாழ்வு முடிந்துவிட்டது என்ற செய்தியைக் கேள்விபட்டபொழுது தமிழர்களின் இதயம் அதிர்ச்சியால் குலுங்கத்தான் செய்தது.

டி. கே. சி. என்றால் அவரைச் சூழ்ந்து நிற்கும் இலக்கியக் குழுதான் நினைவுக்கு வரும். சந்தர்ப்பம் நேரும் போதெல்லாம் இலக்கிய ரசிகர்களைக் கூட்டி அவர் நடத்திய பயனுள்ள இலக்கிய விவாதங்கள் நம் எண்ணத்தில் வட்டமிடும். கம்பராமாயணத்தில் அவருக்குள்ள ஈடுபாடு, கம்பர் காவியத்தின் மீதிருக்கும் பக்தியினால் அக்காவியத்தில் குப்பை கூளங்கள் படிந்து விட்டதாக எண்ணி அதைத் துடைக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஆகிய இவை, ஈடு சொல்லமுடியாத மகத்தான மனப்பண்புக்கு உதாரணம் என்றே கூறலாம்.

பண்புடைய ஒரு தமிழ் மகனின் இலக்கணமாக, பேரறிவு மிக்க பெருந்தகையின் சின்னமாக, இலக்கிய ரசனையின் உருவமாக, தமிழகத்தில் வாழ்ந்து காட்டினார் டி. கே. சி. அவர் மறைந்தாலும் அவர் விட்டுச் சென்ற மேற்கண்ட நற்பண்புகள் லட்சியக் குன்றாக நின்று நமக்கு வழிகாட்டத் தயாராக இருக்கின்றது.

ஆகவே எதிர்பாராமல் ஏற்பட்ட நஷ்டத்தில் மனதைச் செலுத்தி வேதனைப்பட்டு நிற்பதைவிட தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் டி. கே. சி.க்கள் தோன்ற வழி வகுக்க முயல்வோம்.

தக்கதோர் தலைவனை இழந்து தவிக்கும் குடும்பத்தார், உறவினர், நண்பர்களுடன் இணைந்து நின்று அவர்கள் துக்கத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.



எல்லையுடன் வாழ்!

அன்புடைய தம்பி,

சென்ற தடவை திருக்குறளிலிருந்து ஒரு குறளை எடுத்துக் காட்டி குறள் அன்றாட வாழ்வில் கடைப் பிடிக்க வேண்டிய அருமையான வழியாக விளங்குவதை விளக்கியிருந்தேன். இந்தத் தடவையும் சில குறள் மணிகளைக் கவனிக்கலாம். தம்பி, மனிதன் உயர்ந்து வாழ வேண்டுமென்று விரும்புவது இயற்கை. உயர்வு என்றால் அதற்கொரு எல்லை வேண்டும். மற்ற மக்களை விட்டு விலகி கண்ணை மூடிக்கொண்டு தன் சுய வசதிகளை மட்டும் பெருக்கிக் கொண்டு வாழ நினைத்தால் அந்த உயர்வு நமது வாழ்வையே இறுதி நிலைக்குக் கொண்டு வந்து விட்டு விடும்.

உயர்வு என்றால் தன் சூழ்நிலைகளில் குழப்பமற்ற நிம்மதியான ஒரு நிலை என்று தான் பொருள். பிறரிடம் கை நீட்டிக் கொண்டு நில்லாமல் தனது வாழ்க்கைத் தேவைகளைத் தானே பூர்த்தி செய்துக் கொண்டு வாழ்வது தான் உயர்ந்த நிலை.

வாழ முடியாத நிலையில் உள்ளவர்கள், அங்கக் குறைவுள்ளவர்கள் போன்றோர்க்கு அவர்கள் கேட்காதிருக்கும் போதே நாமே உதவும் ஒரு நல்ல நிலை தான் உயர்வுக்கு இலக்கணம்.

இதை மறந்து விட்டு தன் சூழ்நிலையில் உல்லாசத்தை மட்டும் பெருக்கிக் கொண்டே போக நினைப்பது மிகக் கீழ்த்தர மனப்பண்பாடே. நமது வாழ்வில் இன்னல் தழுவாத ஒரு நிம்மதி நிலை ஏற்பட்டுவிட்டதென்றால் அந்நிலையை தொடர்ந்து காப்பாற்றத்தான் பாடுபட வேண்டும். அந்த நிலையிலிருந்து நாம் கீழே இறங்கிவிடாமல் இருக்கத்தான் முயற்சி எடுக்க வேண்டும். இதை விடுத்து இருக்கும் நிலையை உறுதி படுத்தாமல் மேலும் மேலும் உயர நினைப்பது அபாயகரமானது தான்.

இதை ஒரு குறளில் வெகு சுருக்கமாகவும் விளக்குகிறார் திருவள்ளுவர்.

> நுனிக்கொம்பர் ஏறினார்
> அஃது இறந்து ஊக்கின்
> உயிர்க்கிறுதி யாகி விடும்

மரக் கிளையின் நுனியிலே ஏறி நிற்பவர்கள் அதற்கு மேலும் ஏற நினைத்தால் அவர்கள் நிலை என்ன ஆகும்? அந்த எண்ணம் அவர்கள் வாழ்வையே முடித்துவிடுமல்லவா! அதனால் எந்த ஒரு நிலைக்கும் ஒரு எல்லையுண்டு என்பதை உணர்ந்து அந்த எல்லையோடு நின்று தன்னை நிலைப்படுத்திக் கொள்பவன் தான் புத்திசாலியாக இருக்க முடியும் என்கிறார் திருவள்ளுவர்.

தன் சூழ்நிலையை பலப்படுத்திக் கொள்ள நினைக்கும் போது முக்கியமாக ஒரு விஷயத்தை மனதிலிருத்திக் கொள்ள வேண்டும். நாம் செய்யக் கூடிய செலவில் ஒரு கவனிப்பு இருக்க வேண்டும். பிறருக்கு உதவ வேண்டும் என்ற நல்லெண்

ணத்தில் கூட ஒரு கட்டுப்பாடு இருப்பது நல்லது.

நமது வாழ்வுக்குத் தேவையான செலவுகளைக் கூட ஒரேயடியாகக் குறைத்துக்கொண்டு லோபியாக வாழ்ந்து விடுவதும் தவறு. அதேபோல பிறருக்கு உதவாத பண்பும் நம்மிடையே நிலைத்துவிடக் கூடாது. எதற்கும் ஒரு எல்லை வேண்டும். எல்லை மீறி நாம் செய்யும் செலவும் நற்செயல்களும் நம் வாழ்வின் சுமையை அதிகப்படுத்தி நம்மையே அழித்து விடும். இதைக் குறிப்பிட்டு நமக்கு ஒரு உபமானம் கூறுகிறார் திருவள்ளுவர்.

பீலி பெய் சாகாடும்
அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்

அதாவது தாங்கும் அளவுக்கு அதிகமாக சுமத்தினால் மெல்லிய - கனமற்ற மயிலின் இறகு ஏற்றப்பட்ட வண்டி கூட அச்சு முறிந்து விழுந்துவிடும் என்கிறார் குறளாசிரியர். ஆகவே பார்க்கும் போதும், செயலாற்றும் போதும் மிகச் சாதாரணமாகத் தென்படும் எந்த ஒன்றும் அளவுக்கு மீறி சேரும்போது தாங்க முடியாத சுமையாகத்தான் ஆகிவிடும் என்பதை நீ மறந்துவிடாதே.

ஒருவனுடைய வருமானமே மிகக் குறைவாக இருக்கும் போது அவன் நிலையான வாழ்வைப் பற்றி எப்படி சிந்திக்க முடியும்? என்று சிலருக்கு சந்தேகம் ஏற்படலாம். இந்த கேள்விக்கு திருவள்ளுவரே வழி காட்டுகிறார்.

ஒருவர்க்கு பொருள் வருகின்ற வழி சிறிதாக இருக்கலாம். அது ஒரு குறையல்ல. ஆனால் செலவாகும் முறை அனுவசியமாகப் பெருகாதாயின் அதுவே போதும் என்கிறார் குறளாசிரியர்.

அதுமட்டுமின்றி தன்னுடைய செல்வத்தின் தன்மை, சூழ்நிலை இவைகளைக் கவனியாமல் அதற்கேற்ப வாழாவிட்டால் அவன் வாழ்வு செழிப்பாக இருப்பது போலத் தோன்றினாலும் பின்னர் தானாகவே அழிந்துவிடும் என்கிறார் வள்ளுவர். இதோ அவர் குறள்,

அளவறிந்து வாழாதான்
வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக்
கெடும்

என்பது குறள்.

தம்பி, நீ குறளைப் படிக்க முயற்சி செய். பின்னர் சந்திப்போம்.

உன் அன்பான தமையன்.

மேலட்டைச் சித்திரம்:

குழம்பிய உள்ளம்

பிரிந்து சென்ற காதலனின் நினைவால் அவனுடைய உருவப் படத்தை ஆவலுடன் எடுத்து நோக்குகிறாள் காதலி. அந்த நேரத்தில் தும்மல் வருவது போலத் தோன்றுகிறது. ஆனால் பின் நின்று விடுகிறது. காதலிக்கு ஒரு சந்தேகம். "என் காதலர் என்னை நினைக்கத் தொடங்கிய பின் மறந்து விட்டாரா? அல்லது ஏதாவது அபாயம் நேர்ந்திருக்குமா? ஒருக்கால் என்னை நினைக்கும் நேரத்தில் என்னை விட அழகியான வேறொருத்தி........" தோழி அருகிருந்து அவளது மனக் குழப்பத்தைப் போக்காதிருந்தால் இன்னும் என்னென்ன நினைவுகள், அவள் நெஞ்சில் வளர்ந்திருக்குமோ?

காதலியின் எண்ண அலைகள் ஒரு குறளில் தேங்கி நிற்பதைப் பாருங்கள்.

நினைப்பவர் போன்று நினையார்கொல்
தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

இந்தப் பகுதியைக் கண்டு சிலர் அர்த்தமின்றி அஞ்சுகின்றனர். இது தேவையில்லை. திரு. நையாண்டி பாரதி தன் சொந்த அபிப்பிராயத்தைக் கூறுகிறார். அது தவறு என்று பட்டால் கண்டிப்பதற்கு யாருக்கும் உரிமை யுண்டு. அந்தக் கண்டனத்தையும் நாங்கள் வெளியிடத் தயார். "அவர் அபிப்பிராயமே தேவையில்லை" என்பது ஜனநாயகப் பண்பல்ல என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.



சில எழுத்தாளர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்....

எழுத்தாளர்கள் எழுதுவதை விட பேசிப் பொழுது போக்குவதிலேயே தங்கள் முழுத் திறமையையும் அதிக உற்சாகத்தையும் காட்டுவது வழக்கம்.

இந்த எழுத்தாளர்கள், பிரசித்தி பெற்றுவிட்ட ஒரு சிறு கதையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருவர் அந்தக் கதையின் தலைப்பை மட்டுமே அறிந்திருந்தார். இன்னொரு பிரபல எழுத்தாளர் அந்தக் கதையைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாரே தவிர, விவரமாக எதுவும் அறிந்திருக்கவில்லை. அவர்களது நன்மைக்காக, விஷயம் அறிந்தவர் ஒருவர் கதைச் சுருக்கம் கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

ஒரு குரூபி. அவன் கல்யாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டான். ஒரு குருடியை மணந்து கொண்டான். அவளது குருட்டுத்தனத்தைப் போக்கி விடலாம் என்று ஒரு டாக்டர் கூறியும் அவன் மனம் துணியவில்லை. அவள் பார்வை பெற்று விட்டால், தனது விகார உருவைக் கண்டு தன் மீது வெறுப்புக் கொண்டுவிடுவாளே என்ற பயம் அவனுக்கு. அவள் குழந்தை பெற்றெடுக்கிறாள். ஒருநாள் – குழந்தை அழுகிறது. அவள் பரபரப்புடன் நடந்தாள். முன்னாலிருந்த பெரிய பாத்திரம் ஒன்று தடுக்கி விடவும், கீழே விழுந்து காயமுற்றாள். செத்துப் போகிறாள். பிறகு கணவன் வருந்துகிறான்.

இதைக் கேள்வியுற்ற எழுத்தாளர் அலட்சியமாகச் சிரித்தார். அவர் ஒரு மகாக் கதைஞர்.... கவியில் பெரியவர் மகாகவி. கதைக்காரர்களில் பெரியவர் மகாக் கதைஞர் எனக் கொள்க!........ சொன்னார்: "இது என்ன கதை! இதை ஏன் இப்படி எழுத வேண்டும்? அவன் ஏன் குரூபியாக இருக்க வேண்டும்? அவன் எதற்காக ஒரு குருடியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்? அவள் ஏன் பாத்திரம் தடுக்கி விழுந்து சாக வேண்டும்? அப்புறம் அவன் ஏன் மனக்குழப்பம் அடைய வேண்டும்?

உலக சிருஷ்டியைப் பற்றி வேதாந்த விசாரம் செய்கிறவர்கள் தோரணையிலே அவர் பேசியது மற்றவர்களுக்குச் சிரிப்பு உண்டாக்கியது.

"இப்படியும் ரசிக்கலாம் போலிருக்கிறதே! இது மகாக் கதைஞர்களின் பண்பாடாக அமைந்துள்ளதோ என்

னவோ!'' என்று நினைத்தேன் நான். ஸாமர் ஸெட் மாம் தன்னுடைய 'ரைட்டர்ஸ் நோட்புக்' என்னும் நூலில் சில கதைகளைப் பற்றி இவ்விதம் பிரித்துப் பிரித்து அளந்திருக்கிற விஷயம் எனது நினைவுப் பரப்பிலே எழுந்தது தான் காரணம்.

* * *

சுவையாகக் கதை சொல்கிறவர்களில் குறிப்பிடத் தகுந்த ஆசிரியர் ஸாமர் ஸெட் மாம் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். 'அவன் கதைக் கலைஞன் அல்ல. சிறு கதை சிருஷ்டிக்கும் இயந்திரம். அவ்வளவுதான்' என அடித்துப் பேசும் விமர்சகர்களும் உண்டு. இந்தப் பிரச்னை இப்போது நமக்கு முக்கியமில்லை.

மாம், ரஷ்ய நாவலாசிரியன் ஒருவனின் கதையைப் பற்றி எழுதியிருப்பது சுவையான குறிப்பாக உள்ளது. ''அந்தக் கதையில் சம்பவங்களே அதிகமில்லை. பார்க்கப்போனல், அதில் கதையே இல்லை. கதாநாயகி மாலை உலாப் போகிறபோது தலையிலே துணியைக் கட்டிக் கொள்ள மறந்துவிடுகிருள், அதனல் அவளுக்குக் கடுமையான நோய் வந்துவிடுகிறது. அப்புறம் கஷ்டப்படுகிருள். அவள் கஷ்டப்படுகிறதைப் பார்க்கிற போது, அவள் தலைக்கு முக்காடு கட்டிக் கொண்டு போயிருந்திருக்கலாமே; ஏன் மறந்து போய், சிக்கை வரவழைத்திருக்கவேண்டும் என்று நமக்குத் தோன்றுகிறது. அப்படி அவள் தலைக்குத் துணி கட்டிக்கொண்டு வெளியே கிளம்பி யிருந்தாளானல், இந்தக் கதை எழுதப்பட வேண்டிய அவசியமும் நேர்ந்திருக்காது தான்!''

(மகாக்கதைஞன், மாம் எழுதியுள்ளதன் சாரம்தான் இது. நேரடி மொழிபெயர்ப்பு அல்ல.)

* * *

கவிஞர் பாரதிதாசன், சில எழுத்தாளர்களின் முயற்சிகளைப் பற்றிக் குறிப்பிட ஒரு உதாரணம் சொல்லுவது வழக்கம். ரசமான கதை அது.

பெரிய பையன் ஒருவன் காற்ருடி கட்டி வானத்தில் பறக்கவிட்டான். அது சரியாக உயர்ந்து கிளம்பவில்லை. அதற்கு ஒரு வால் கட்ட வேண்டும் என்று பார்த்தான். துணி கிடைக்கவில்லை. பக்கத்தில் நின்ற சிறுவன் ஒருவன் தன்னுடைய கோவணத்தைக் கிழித்துக் கொடுத்தான். அது காற்ருடியின் வால் ஆயிற்று. அப்படிப் பறக்கிற போது, வால் கோயில் கோபுரத்துத் தங்கக் கலசத்தின் மேலே பட்டது. சின்னப் பையன் கை கொட்டிக் கூத்தாடினன். ''எனது கோவணம் தங்கக் கலசத்துக்கு மேலே; எனது கோவணம் தங்கக் கலசத்துக்கு மேலே!'' என்று உற்சாகமாகக் கூவி மகிழ்ந்து போனன் அவன்:

இதைச் சொல்லி விட்டுக் கவிஞர் குறிப்பிடுவார்: தமிழ் நாட்டில் பெயர் பெற்று விட்ட சில பெரிய ஆசிரியர்கள் செய்கிற வேலை இது மாதிரித் தான் இருக்கிறது. யார் யாரோ எழுதி வைத்த விஷயங்களை எடுத்து, அங்கே இங்கே ஏதாவது சேர்த்துப் பதிப்பித்து விட்டு, தாங்கள் பெரிய சாதனை செய்து விட்டது போல் பெருமைப்பட்டுக் கொள்கிருர்கள். இவர்களால் சொந்தமாக உயர முடியாது. பிறர் பெயர்களோடு தான் தங்கள் பெயரை வால் போல் ஒட்ட வேண்டி யிருக்கிறது.

வால் ஒட்டும் திருப்பணியில் ஈடுபடுகிறவர்கள் சுலபமாகப் புகழும் பாராட்டும் பெற்றுவிட முடிகிறது என்பதும் குறிப்பிட வேண்டிய விஷயம் தான்.

* * *

எழுதிப் பெயர் பெற வேண்டும் என்கிற ஆசை அநேகமாக எல்லோருக்கும் இருக்கிறது. எழுதுவது என்பது சுலபமான வேலை அல்ல என்பதை அவர்கள் உணர்வதில்லை. மிகச் சுலபமாகப் பெயர் பெற்றுவிடத் துடிக்கிருர்கள். அதற்குக் குறுக்கு வழிகள் ஏதாவது உள்ளனவா என்று தேடிக் கையாள்வதிலேயே காலத்தைப் பாழாக்கி விடுகிருர்கள்,

எழுத ஆரம்பித்த உடனேயே, புகழ் மட்டுமல்ல, பணமும் வந்து குவிய வேணும் என்று ஆசைப்படுகிறவர்களும் இருக்கிருர்கள். ஏசுவின் பாஷையிலே 'அவர்களுக்கு ஐயோ! அவர்கள் என்ன செய்கிருேம் என்பதை அறியாமலே முன்வந்து விடுகிருர்களே!' என்று அனுதாபப்படலாம். வேறு என்ன செய்வது?

எழுதிப் பெயர் பெற்றுவிட்ட எழுத்தாளர்கள் பலர் 'பெயர் ஏன் வந்து சேர்ந்தது? பணம் வரவில்லையே!' என்று வருத்தப்படும் நிலையில் இருக்கிருர்கள். பண வேட்டை ஆடுவோருக்குப் பணமும் கிடைப்பதில்லை; வேலையும் கிடைப்பதில்லை. இரண்டும் கிடைக்கத் துணைபுரியும் 'சாயாக் கடை' திறக்கலாமா என்று யோசிக்கும் எழுத்தாளர்கள் நாலைந்து பேரை எனக்குத் தெரியும்.

அவர்களில் ஒருவர் எனது ஆத்ம நண்பர். அவர் டீக் கடை திறந்ததும், அதில் ஒரு போர்டு எழுதித் தொங்கவிடப் போவதாக பயமுறுத்திக் கொண்டிருக்கிருர். 'எழுத்தாளர்களும் குஷ்டரோகிகளும் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை' 'எழுத்தாளர்கள் சமுதாயத்தின் தொத்து நோய்க்காரர்கள்' 'எழுத்து வேலை, செல்வந்தர்களின் பொழுதுபோக்கு; சோம்பேறிகளின் கலை; பிழைக்கத் தெரியாதவர்கள் ஏற்றுக்கொள்கிற உத்தியோகம்' என்ற மணிமொழிகளைத் தீட்டி வைக்கப் போகிருராம்!

* * *

புதிதாக எதிர்ப்பட்டார் ஒரு அன்பர், எழுத்தாளர் தான். "நமஸ்காரம், ஸார். நான் தான் ராணி பாய்" என்ருர்.

'கீழ்ப்பாக்கம்' போகவேண்டியவர் வழி தவறி வந்துவிட்டாரோ? என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது.

"என்ன ஐயா முழிக்கிறீர்? ராணிபாய் என்கிற பெயரில் கதை, கட்டுரைகள் எழுதி வருவது அடியேன் தான்" என்ருர்.

எழுத்துலகில் வெற்றிக்குக் குறுக்குப் பாதை பெண்கள் பெயரில் கதை கட்டுரைகள் எழுதுவது தான் என்பது உலகம் அறிந்த ரகசியம். அதாவது 'எழுத்துலகம்' என உணர்க.

எனக்கு ரொம்ப காலமாகவே ஒரு வருத்தம் உண்டு. என் மனைவி பெயர் அழகாக அமையவில்லையே என்று தான். 'சுப்பம்மா' என்கிற பெயரில் கதை எழுதி அனுப்பினல் எந்தப் பத்திரிகாசிரியராவது ஏறெடுத்துப் பார்ப்பாரா என்ன? கவர்ச்சிகரமான பெண் பெயர்களைப் பார்த்ததுமே வாசகர்கள் சொக்கிப் போவார்கள் என்ற எண்ணம் நீடிக்கிற பத்திரிகைக் காரியாலயங்களில் பத்தாம் பசலித்தனமான பெயர் எடுபடுமா என்ன? இரண்டு காரியங்கள் செய்யலாம்! என் மனைவியின் பெயரை மாற்றி அமைக்க வேண்டும். அல்லது, அவளுக்காக நான் ஜோரான புனைப் பெயர் ஒன்று கண்டு பிடிக்க வேண்டும். எதைச் செய்வது என்று நான் இன்னும் முடிவு செய்யவில்லை.

எழுதியவர்:
கே. ஆர். கௌஸல்யா

கானல் நீர்...?

"ஊர் பெண்களின் அந்தப் பேச்சு, தெரு விளக்கின் சமிக்ஞை, வனஜாவின் அறைக்குள் எழுந்த அந்தச் சிரிப்பொலி, தனக்கு முன்னால் அவள் விட்ட கண்ணீர், இவை ஒவ்வொரு அதிர் வேட்டுகளாக படீர், படீர் என வெடித்து அவன் இதயத்தைச் சிதற அடித்தன

அவனுடைய எதிர்கால இன்ப வாழ்வு வெறும் கானல் நீர் தானா?....

வனஜாவின் அந்தக் கடிதத்தைக் கண்டு அவன் ஏன் அப்படி மிரள வேண்டும்...?

வாசல் கேட்டைத் திறந்து கொண்டு ஸ்ரீதரன் தெருவிலிறங்கியபோது 'பட்' என்று தெரு விளக்குகளெல்லாம் அணைந்து ஒரு கணம் காரிருளைப் பாய்ச்சி விட்டு மீண்டும் பளீரென்று சுடர் விட்டன. ஸ்ரீதரனின் உள்ளத்தில் ஏதோ ஒருவித உணர்வு ஊசிபோல் பாய்ந்து சுரீரென்று உறைத்தது. பின்னலிட்டு நின்ற கால்களை ஒரு முறை உதறிவிட்டுக் கொண்டு வேகமாக நடந்து செல்ல ஆரம்பித்தான் அவன்.

நடையின் வேகத்தோடு இணைந்து அவன் உள்ளத்தில் குழப்பமான சிந்தனைகள் சுழன்றன. தெருவிளக்கின் அந்தச் சமிக்ஞை....வனஜாவின் அறைக்குள் எழுந்த அந்த சிரிப்பொலி; ....தனக்கு முன்னால் அவள்விட்ட கண்ணீர்.... இவை ஒவ்வொரு அதிர்வேட்டுகளாக 'படீர் படீர்' என வெடித்து அவன் இதயத்தைச் சிதற அடித்தன.

சற்று முன் ஸ்ரீதரன் அந்தவீட்டுக்குள் நுழைந்தபோது வீடே நிசப்தமாக இருந்தது. அந்த வீட்டுக்கு மரியாதைப் பட்ட மனிதனாகிய அவனை 'வா' என்று அழைக்கக்கூட அங்கு யாரும் இல்லை.

"திரும்பிவிடலாமா?" என்று நினைத்தான். அடுத்தவிநாடி பக்கத்து அறையிலிருந்து எழுந்த பலத்த சிரிப்பு ஒலி அவனை திகைக்க வைத்தது. இரண்டு பேர்கள் இணைந்து சிரித்தனர். ஒரு குரல் நிச்சயம் வனஜாவினுடையதுதான். அந்த மற்றொரு ஆண் குரல்.......

"வாருங்கள்..... வாருங்கள்.... என்று ஒரு வரவேற்புக் குரல் எழும்பவே திரும்பிப் பார்த்தான். வனஜாவின் தாய் பங்கஜம், மரியாதையுடன் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு விட்டு" "வனஜா.... வாயேன்.... இங்கே யார் வந்திருக்கா பார்" என்று தாயுள்ளத்தின் பெருமிதத்தோடு கூறி விட்டு, மாப்பிள்ளைக்கு சிற்றுண்டி தயாரிக்க உள்ளேபோய் விட்டாள்,

"யார்....?" என்று கேட்டுக் கொண்டே அறையை விட்டு வெளியே வந்த வனஜா ஸ்ரீதரனைக் கண்டு ஒரு கணம் திகைத்தாள். ஆனால் அடுத்த விநாடி அவள் முகம் மலர்ந்தது. "வர்றதா லெட்டர் கூட போடலியே" என்று அன்பொழுகக்

கேட்டுக் கொண்டே வெளியே வந்தாள்.

"ஹலோ.... மிஸ்டர் ஸ்ரீதர்.... என்ன........கடவுளைப் பார்க்கிற மாதிரி இருக்கே........!" என்று அறைக்குள்ளிருந்து வெளியே வந்த சந்துரு—வனஜாவின் அத்தான், ஸ்ரீதரனின் கையைப் பிடித்து குலுக்கி விட்டு" "வனஜா இங்கே ஏங்கி ஏங்கி மாய்ந்து போகிருள் ஸ்ரீதர். அங்கே ஊரில் அன்புக் கணவனை காக்காய் தூக்கிக் கொண்டு போயிடும்னு பயமோ என்னமோ...." என்று வனஜா வைப் பார்த்து பெரிய ஹாஸ் யம் பேசிவிட்டதுபோல உரக்க சத்தம் போட்டுச் சிரித்தான்.

ஸ்ரீதரன் சலனமற்று நின் றிருந்தான். உணர்ச்சிகள் மெல்ல தன் உடலை விட்டு நழுவு வது போல ஒரு பிரமை அவ னுக்கு ஏற்பட்டது, யாரையும் பார்க்காமல் சுவற்றில் மாட்டி யிருந்த ஏதோ ஒரு படத்தின் மீது பார்வையை ஓட்டினன்.

"என்ன வனஜா ....இப்படி நின்றிருந்தா?........ ஸ்ரீதருக்கு டிபன் கொண்டுவந்து கொடு.... ஓ.... ரொம்ப நாளைக்குப் பிறகு கணவன் — மனைவி சந்திக்கி றப்போ இடிச்ச புளியாட் டம் நான் குறுக்கே நிற் கிறேன்னு இரண்டு பேருக்கும் தோன்றுகிறதாக்கும்........ அப்போ சாவகாசமா மாப் பிள்ளையை வந்து சந்திக் கிறேன்.... குட்....பை..." என்று பரிகாசம் கலக்கக் கூறிவிட்டு ஒய்யாரமாக நடந்து சந்துரு போய்விட்டான்.

ஸ்ரீதரனின் அந்த மௌனம் வனஜாவின் உள்ளத்தை என் னவோ செய்தது. "இப்படியே நின்ருல்....? அறைக்குள் வாருங் கள்...." என்று உரிமையுடன் கணவன் கையைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்று உட்கார வைத்துவிட்டு, சமய லறைக்குச் சென்று பலகாரம் காபியுடன் திரும்பினுள்.

அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருந்த ஸ்ரீதரன் திடீரென தலை நிமிர்ந்து வனஜாவின் முகத்தை நோக்கினுன். வனஜா சட்டென தன் கண்களில் துளிர்த்திருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

கொஞ்சம் தயங்கி விட்டு "உன் மன நிலை எனக்குப் புரிந் தாக வேண்டும்...." என்ருன் ஸ்ரீதரன்.

வனஜா வியப்புடன் அவன் முகத்தைப பார்த்தாள். அவன் தொடர்ந்து பேசினுன். "என்னை மணந்ததன் மூலம் வாழ்க்கை யில் நீ ஒரு தவறு செய்து விட்ட தாகக் கருதினுல் அதை இப் பொழுது கூட நீ திருத்திக் கொள்ளலாம்...."

பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை இதயத்தில் சொருகி யது போலிருந்தது வனஜா வுக்கு. ஸ்ரீதரன் மேலும் தொடர்ந்தான்,

" 'விவாகரத்து' என்ற சொல்லே நம் நாட்டுப் பண் புக்கு களங்கம் விளைவிப்பது என்பதை நான் உணர்வேன். ஆனல் அது உன் வாழ்வுக்கு சுகத்தை அளிக்குமாயின் என் னைப் பொறுத்தவரை நான் தயார்...."

"ஐயோ... இதெல்லாம் என்ன" என்று அலறியடித்துக் கொண்டு அவன் பாதத்தடியில் விழுந்தாள் வனஜா. அவன் கால்களைக் கெட்டியாகப் பிடித் துக் கொண்டு "என்னென் னவோ சொல்கிறீர்களே...." என்று கதறினுள்.

ஸ்ரீதரன் ஆதரவோடு அவளைத் தூக்கி நிறுத்தினுன். சற்றுமுன் இருந்த வெறியுணர்ச்சி இப் பொழுது அவனிடம் இல்லை; தழதழத்த குரலில் பேசத் தொடங்கினுன். "நீ ஏன் என்

ஞேடு வந்து வாழ்க்கை நடத்தத் தயங்குகிருய்?''

''நாஞ....? தயங்குகிறேஞ?'' அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அவள் தேம்பிஞள்.

''சந்தர்ப்பங்கள் சதி செய்கின்றன. ஒன்றின் மேலொன்ருக ஏதாவது ஒன்று வந்து முட்டுக் கட்டை போடாவிட்டால் எனக்கு இங்கே என்ன வேலை? நீங்கள் இருக்குமிடந்தானே எனக்கு சுவர்க்கம்....''

இதைக் கூறும்போது அவள் இதயத்திலிருந்து மேலெழும்பும் அன்பை ஸ்ரீதரன் தெளிவாகக் கண்டான். சற்று முன் அவசரப்பட்டு தான் நடந்து கொண்ட விதத்தை எண்ணி மனதிற்குள் வருத்தப்பட்டான்.

''வனீ!....'' என்று மெதுவான குரலில் அன்புடன் அழைத்தான் ஸ்ரீதரன். வனஜா ஆவலுடன் அவன் முகத்தை நோக்கிஞள்.

''வனீ!.... அப்பாவிடம் அதைப் பற்றிப் பிரஸ்தாபித்தாயா?... என்ன சொல்லுகிருர் அவர்?.... இன்று முடிவாகக் கேட்டுக் கொண்டு போகலாம் என்றுதான் வந்தேன்...'' வனஜாவின் பூப்போன்ற கரத்தைப் பற்றியவாறே கேட்டான் அவன்.

வனஜா கவிழ்ந்திருந்த தலையை நிமிர்த்தி அவன் முகத்தை ஏறிட்டு நோக்கிஞள். அவள் முகம் ஒருகணம் பல தரப்பட்ட உணர்ச்சிகளை பிரதிபலித்தது.

''அடுத்தமாதம் நாள் பார்க்கப் போவதாகச் சொல்லியிருக்கிருர்....''

''இப்படியே எத்தனை அடுத்த மாதங்கள் ஓடிவிட்டன?...'' —ஸ்ரீதரனின் பார்வையில் ஏக்கம் சுழற்சியிட்டது.

'பார்த்து எழுதுதல்' என்பதைப்பற்றி ஒரு புத்தகம் எழுதப் போகிறேன்''.

''எதைப் பார்த்து அந்தப் புத்தகத்தை எழுதப் போகிருய்?''

''என்ன செய்வது?.... ஜகதாவின் விவாகத்திஞல் அப்பாவுக்கு ஏகப்பட்ட கடஞகியிருந்தது. அதையெல்லாம் எப்படியாவது சிரமப்பட்டு ஒரு வழியாக அடைத்துவிட்டு எங்கள் இரண்டு பேரையுமே கொண்டுவிட ஏற்பாடு செய்வதாக இருக்கிருர்... அவருடைய தற்போதைய கஷ்ட நிலைமையை நினைத்தால் என் நெஞ்சமே கலங்குகிறது. இதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவே வாய் கூசுகிறது. பரவாயில்லை.... இன்னும் ஒரு மாதம் என்ன, எவ்வளவு நாட்களாஞலும் காத்திருக்கலாம் என்று மனம் எண்ணுகிறது. இருந்தாலும் எப்படியாவது அடுத்த மாதம் கொண்டு விட்டுவிட வேண்டும் என்பது தான் அவருடைய தீர்மானம்...'',

மணி ஆறடித்தது. எங்கும் லேசாக இருள் படர ஆரம்பித்தது. இரவு அங்கேயே சாப்பிட்டுவிட்டுப் போகும்படியாக வனஜாவும் பங்கஜமும் எவ்வளவோ மன்ருடியும் ஆபீஸ் விஷயமாகத் தன் சிநேகிதன் ஒருவனைப் பார்க்க வருவதாக உறுதி கூறியிருப்பதால்உடனே கிளம்ப வேண்டுமென்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் ஸ்ரீதரன்.



வாசல்வரை அவனை வழியனுப்புவதற்காகத் தொடர்ந்து வந்தாள் வனஜா. ''வனஜா... முன்போலவே அடிக்கடி கடிதங்களாவது எழுதிக்கொண்டிரு!.... அவைகளாவது நீ வரும் வரை என் மனத்தைச் சாந்தப்படுத்திக் கொண்டிருக்கட்டும்....... இல்லை என்றால் என்னுள்ளம் சூன்யமயமாகிவிடும்....'' —ஸ்ரீதரனின் இதயத்தின் அடியில் புதைந்து கிடந்த ஏக்கச் சுமையைத் தாங்கிக் கொண்டு ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது.

* * *

பெரிய விஷயம் வெகு சாதாரணமாக—தெளிவாக முடிந்து விட்டது போலத் தோன்றினாலும் மனகுழப்பம் ஒரு முடிவுக்கு வரவில்லை. வனஜாவின் வீட்டுக்கு வருவதற்காக சற்று முன் பஸ்ஸைவிட்டு இறங்கி நடந்து வந்துக் கொண்டிருந்தபோது அவனுக்கு முன்னால் இரண்டு ஸ்திரீகள் பேசிக் கொண்டுபோன விஷயம் ஸ்ரீதரனின் காதில் விழுந்தது. வனஜாவின் பெயர் அவர்கள் பேச்சில் அடிபட்டதால் கொஞ்சம் கவனமாகக் கேட்டான்,

''யாரு... அந்த ராகவய்யாவின் பெண்ணைத் தானே சொல்றே...?''

''ஆமாம்.... சின்ன வயதிலேருந்து பழகிய தோஷம்....அவனையேத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு அது ஒரு பிடியா பிடிக்கறதாம்....அவா அப்பாவுக்கு அது இஷ்டமில்லையாம்....''

''ஏனாம்....?''

''அவரோட சிநேகிதன் பிள்ளை ஒருத்தன் இருந்தானாம்.... நல்ல சொத்து சுதந்திரங்களோட... அவனைத்தான் நீ பண்ணிக்கணும்னு ஒரே பிடிவாதமாகச் சொல்றாராம் அவர்.... இது எப்படி முடியும்னுதான் தெரியலை....''

''போறுமே!.........அந்தப் பெண்ணு இஷ்டப்படி அப்பா

நடக்கலேயானு அந்தக் கல்யாணம், ஜகதீசனின் பெண் வனஜாவோட கல்யாணம் மாதிரிதான் முடியும்....''

'' அது என்ன விஷயம்?...''

'' அந்த வனஜாவுக்குக் குழந்தையாயிருக்கையிலேருந்து அவள் அத்தை பிள்ளை சந்துரு மேலே அசாத்ய விசுவாசமாம். ...அவனோடே விளையாடி, ஆடிப்பாடிப் பழகிய தோஷம் வயசு வந்ததும் காதலாக மாறிடுத்தாம்..... அவனுக்குத்தான் அந்தப் பொண்ணைக் கொடுத்துக் கல்யாணம் பண்ணனுமங்கற தீர்மானத்திலே ஜாதகம் பார்த்தாளாம். 'ஐந்திலே ரெண்டு பழுதில்லாமே'ன்னு சொல்லுவாளே அந்த அளவுக்குக் கூட அவா ரெண்டு பேரோட ஜாதகமும் ஒத்துவரலேயாம். ஜகதீசன் ஒரு ஜாதகப்பித்து. கல்யாணம் பண்ணினப்புறம் ஏதாவது கெடுதல் நேர்ந்துடப் போறதென்னு வேறே விதியில்லாமே ஸ்ரீதரன்ங்கற பிள்ளைக்கு வனஜாவைக்கொடுத்து கல்யாணம் பண்ணிட்டாளாம். இப்போ அதனோடே விளைவு என்ன ஆயிருக்குத் தெரியுமா?.... ஜாதகத்தாலே, அவா ரெண்டு பேருக்கும் கல்யாணமாக வொட்டாம செய்ஞ்சு பிரிக்க முடிஞ்சதே தவிர அவாளோட உள்ளங்களைப் பிரிக்க முடியலே. சந்துருவுக்கும், வனஜாவுக்கும் ஒருத்தரை யொருத்தர் பிரிய துளிக் கூட இஷ்டமில்லேயாம். தன்னை யாருடைய சொத்து என்றுஅவ்வளவு நாட்களாக வனஜா நினைத்துக் கொண்டிருந்தாளோ அவனிடமிருந்து அவள் ஜாதகக் கோளாறினுல் பலாத்காரமாக பறிக்கப்பட்டுவிட்டதை எண்ணி எண்ணி கலங்குகிருளாம் அந்தப் பொண்ணு. எவ்வளவுக்கெவ்வளவு நாள் கணவனோடே குடித்தனம் பண்ணப் போகாம நாளைத் தள்ளிப் போட்டுண்டே வரோமோ அவ்வளவுக் கவ்வளவு நாள் தன் அத்தானோடே சுதந்திரமா பேசிப் பழகிண்டு இருக்கலாம்ங்கற எண்ணத்திலே அந்தப்பொண்ணு வனஜா கணவனோடே குடித்தனம் பண்ணப் போகாம பிறந்தகத்திலேயே உட்கார்ந்திருக்காம். பாவம்! அந்தப்பிள்ளை ஸ்ரீதரனை நினைச்சாத்தான் கஷ்டமாயிருக்கு. சின்னஞ் சிறு வயசு அவனுக்கு. இந்த விவரமெல்லாம் என்ன தெரியும்? இப்போ ஏன் இதை யெல்லாம் சொன்னேன்னு. அந்த ராகவய்யாவும் தன் பெண் இஷ்டப்படி நடக்காம பிடிவாதமாக, தான் நிச்சயம் பண்ணியிருக்கிற பிள்ளைக் குத் கொடுத்தாரானு, அந்தப் பெண்ணுக்கும் பூரண நிம்மதியில்லாமலும், அதைக் கல்யாணம் பண்ணிண்டவனுக்கும் பெரிய கழுத்தறுப்பாகவும் இப்படித்தான் முடியும்னு சொல்ல வந்தேன்.......''

ஸ்ரீதரனின் நெஞ்சு ஒருதடவை உலுக்கி எடுக்கப்பட்டது. அதற்கு மேலும் அந்த சம்பாஷணையைத் தொடர்ந்து கேட்க முடியாமல் அவன் தலை 'கிர்' ரென்று சுழன்றது.

ரயிலை விட்டு இறங்கும் பொழுது அவன் மனதில் குலுங்கி நின்ற மகிழ்ச்சியென்ன! வனஜாவை சந்தித்த உடன் அவள் முகத்தில் பரவி நிற்கும் ஆனந்தத்தை மனதிற்குள்ளாகவே கற்பனை செய்து குதூகலப்பட்டதென்ன! இப்பொழுது ஒரு விநாடியில் அந்த இன்ப நினைவுகள் எரிந்துக் கருகி சாம்பற் குவியலாகப் போய்விட்டதே!

அவர்கள் கூறியதைப் போல் தன் அத்தானைப் பிரிய மனமில்லாமையால்தான் அவள் அவ்வாறு தன்னுடன் குடித்தனம் செய்ய வருவதை ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லித் தள்ளிப் போடுகிருளா? அப்படியானல் தன் ஒவ்வொரு கடிதத்திலும் அவள் உதிர்க்கும் காதல்

"என் நாய் எங்கேயோ போய் விட்டது"

"பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்துப் பாருங்களேன்"

"என் நாய்க்கு படிக்கத் தெரியாதே. அதுதான் கவலையாக இருக்கிறது...."

மொழிகளும், எழுதும் தேறுதல் வார்த்தைகளும் என்னை ஏமாற்றுவதற்காகக்கையாளப் படும் தந்திரமோ? அவள் பெற்றோருக்குப் புத்தி எங்கே போயிற்று? விவாகமான ஒரு இளம் பெண்ணைக் காலாகாலத்தில் அவள் கணவனுடன் குடித்தனம் செய்ய அனுப்பாமல்விட்டிலேயே வைத்துக் கொண்டு அந்த சந்துருவுடன் அவள் கொஞ்சிக் குலாவுவதைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்களே! சிக்கிரத்தில் இதற்கு ஒரு முடிவு செய்துதான் தீர வேண்டும்! இனிமேலும் இந்த நிலைமையை நீடிக்க விடுவது தவறு. பெண்ணைக் கொண்டு விட செலவுக்குக் கையில் பணமில்லை என்ற சாக்கை இந்த முறை அவர்கள் சொல்லித் தட்டிக்கழிக்க முடியாதவாறு நாமே அந்த செலவுகளுக்கான பணத்தைக் கொடுத்தாவது அவளை உடனே கூட்டிக் கொண்டு வர வேண்டும்! அக்கினி சாட்சியாக நம் கைப்பிடித்த அவளை—நம் மனைவியை—அன்னிய புருஷன் ஒருவனுடன் சுதந்திரமாகப் பழக இனி மேலும் அனுமதிப்பது தவறு. நாமும்தான் இன்னும் எவ்வளவு நாட்கள் கல்யாணம் பண்ணியும் பிரம்ம சாரியாக இருப்பது? வனஜா நம்முடன் குடித்தனம் செய்ய வந்ததும் நம்முடைய அன்பு மொழிகளிலே, ஆசைப் பிரவாகத்திலே எப்படியும் மனம்மாறி சந்துருவை நாளடைவில் மறந்து விடுவாள் என்பது நிச்சயம்! அப்படியும் — நம்முடன் வாழ்க்கை என்று ஒன்று நடத்த வந்த பிறகும் — நியாயமாய்த் தன்னுடைய அன்பு முழுவதையும் இதய பூர்வமாக அர்ப்பணிக்க வேண்டிய நம்மைத் துரோகம் செய்து அவள் அந்தச் சந்துருவினுடைய நினைவாகவே இருப்பவளாக தெரிந்தால் பிறகு இருக்கவே இருக்கிறது அந்தவழி! 'நிரந்தரமாகப்பிறந்தகத்திலேயே இருந்துகொண்டு ஒரு தடங்கலுமின்றி உன் அத்தானுடன் ஆனந்த வாழ்க்கை நடத்து' என்று சொல்லி விடுவது...நாளாவட்டத்தில் 'வாழா வெட்டி' என்று நாலு பேர் இகழ்ச்சிக்கு உள்ளாகும்படி செய்து விடுவது......

இப்படிப்பட்ட எண்ணங்களோடுதான் ஸ்ரீதரன் வீட்டுக்குள் புகுந்தான். வனஜாவின் களங்கமற்ற அன்பைக் கண்டபோது அவன் எண்ணம் கலகலக்கத்தான் செய்தது. ஆனால் வீட்டை விட்டுக் கீழே இறங்கியபோது தெரு விளக்குகள் அணைந்து ஒளி வீசியது தன் ஏமாளித்தனத்தைச் சுட்டிக் காட்டுவதாக இருந்தது போல் அவன் மனம் குழம்பியது...

ஸ்ரீதரன் நடந்துகொண்டே இருந்தான். அவன் மனக் குழப்பமும் வளர்ந்து கொண்டே இருந்தது.

அப்போது ஸ்ரீதரனுக்கு வயது இருபத்தைந்து. பெரியதொழிற்சாலை யொன்றில் நல்ல உத்தியோகத்திலிருந்தான் அவன். கை நிறைய சம்பாதித்த காசை அவனுடன் பகிர்ந்தனுபவித்து அவன் இல்வாழ்க்கையை மலர வைத்துச் சோபிக்கச் செய்ய ஒரு பெண்ணை — வாழ்க்கைத்

துணைவியைத் தேடினன் அவன். அழகும், காம்பீர்யமும் ஒருங்கே அமையப் பெற்று வாலிபத்தின் மிடுக்குடன் நிமிர்ந்து நடந்த அந்தக் காளைக்கு — ஸ்ரீதரனுக்குத் தம் பெண்ணைக் கொடுத்து சம்பந்தம் செய்து கொள்ள பெரிய பெரிய செல்வந்தர்களெல்லாம் 'நான், நீ' என்று போட்டி போட்டனர். ஆனால் அவ்வளவு பேரும் பொருமைப்பட்டு வெம்பி வெடிக்கும் படியாக அவன் கைப்பற்றி அவனுடைய கரத்தால் புனிதமான திருமாங்கல்யம் கோர்க்கப்பட்ட மஞ்சள் கயிற்றைக் கட்டிக் கொள்ளும் பாக்கியம் ஒரு பள்ளிக்கூடத்தில் சாதாரண சம்பளத்தில் உபாத்தியாயராக இருந்த ஜகதீசனின் இரண்டாவது புத்திரி வனஜாவுக்குத்தான் கிடைத்தது.

அப்போதுதான் முதல் முதலாகக் கல்யாணம் ஒன்றைச் செய்கிறோம் என்ற மகிழ்ச்சியில் தம் கையில் அதுகாறும் சேர்த்து வைத்திருந்த ரொக்கத்தை யெல்லாம் கொட்டிக் கண்ணை மூடிக்கொண்டு செலவழித்துத் தம் மூத்த பெண்ணின் திருமணத்தை நடத்தி விட்ட ஜகதீசன் அடுத்த இரு வருஷங்களுக்கெல்லாம் மளமளவென்று வளர்ந்து நின்ற தன் பெண்கள் வனஜா, ஜகதாவைப் பார்த்தபோதுதான் தன்னுடைய அவசர புத்தியை, தவறை உணர்ந்தார்.

ஆனல் வனஜாவை முதல் முதலாக வந்து பார்த்தபோதே அவளுடைய அழகாலும், அடக்கவொடுக்கமான சுபாவத்தாலும் கவரப்பட்ட ஸ்ரீதரன், தன் அழகு, அந்தஸ்து எல்லாவற்றையும் மறந்துவிட்டு ஜகதீசனிடமிருந்து பிரமாதமான வரதக்ஷிணை, சீர் வரிசைகள் முதலியவற்றை எதிர்பார்க்காமல் அவளைத் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டு அவளுடைய பெற்றோரின் உள்ளங்களில் மகிழ்ச்சியை உதயமாக்கினன். கொள்ளைகொள்ளையாய்ப் பணம் சம்பாதித்தும் தனக்கென ஒரு இடம், வகையான சாப்பாடு என்று வசதியாக வாழாமல் இனியும் ஒரு ஹோட்டலில் அறையெடுத்துக் கொண்டு சங்கட வாழ்க்கை நடத்த விரும்பாத ஸ்ரீதரன் விவாகமான மறுமாதம் வனஜாவைத் தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்புவதாகக் கடிதம் எழுதினன்.

அன்று காலை தன்பெயருக்கு வந்திருந்த அந்தக் கவரை ஆவலும் பரபரப்பும் உந்தித்தள்ளப் பிரித்துப் படித்தான் ஸ்ரீதரன். வனஜா தான் தன் முத்துக் கோர்த்தாற் போன்ற அழகிய கையெழுத்தில் எழுதியிருந்தாள். தன் தாயாருக்கு உடம்பு சௌகரியமில்லாமையால் படுத்த படுக்கையாய்க் கிடப்பதாகவும், சகாயத்திற்கு அவளை வைத்துக்கொண்டுவிட்டு, இன்னும் சில நாட்கள் கழித்து அவளைக் கொண்டுவிட அவள் தந்தை தீர்மானித்திருப்பதாகவும், அவன் எழுதியவுடனே கீழ்ப்படியாமைக்கு மன்னிக்கும் படியாக மிகவும் வணக்கத்துடன் எழுதியிருந்தாள்.

தன் அந்தஸ்திற்கும், சௌகரியத்திற்கும் ஏற்றபடி வசதிகள் நிறைந்த அழகிய வீடு ஒன்றை வாடகைக்கு ஏற்பாடு செய்து விட்டு, அந்த இல்லத்தில் வனஜாவுடன் தான் நடத்தப் போகும் ஆனந்த வாழ்க்கையைப்பற்றி என்ன வெல்லாமோ கற்பனை செய்து மகிழ்ந்துக்கொண்டிருந்த ஸ்ரீதரனுக்கு வனஜாவின் கடிதம் அளவற்ற ஏமாற்றத்தையும் துயரத்தையும் அளித்தது.

நாட்கள் நகர்ந்து கொண்டேயிருந்தன. அடிக்கடி வனஜாவுக்குக் கடிதங்கள் எழுதி அவற்றின் மூலம் அவளைப் பிரிந்திருப்



பதால் தன் உள்ளம் அடைந்திருக்கும் துயரச் சுமையை அவ்வப்போது குறைத்துக்கொண்டு வந்தான் ஸ்ரீதரன். வனஜாவும் அவைகளுக்குத் தவருமல் தன் அன்பைக் கொட்டி எழுதிவந்த பதில்கள் ஸ்ரீதரனின் பதறும் உள்ளத்தை ஆசுவாசப்படுத்தி அமிருதக் கடலில் ஆழ்த்தி இன்ப மூட்டிவந்தன. அத்துடன் அவனுடைய வேட்டகம் பக்கத்து ஊரிலேயே இருந்தபடியால் அடிக்கடி வனஜாவை நேரில் பார்த்தும் பேசிவிட்டு வந்தான்.

வனஜாவின் தாயாருக்கு நன்ருக உடம்பு தேறி அவளுக்குப் பழையபடி எழுந்து நடமாடக் கூடிய தெம்பு வந்தாலும் வனஜாவைக் கொண்டு விடுவதைப் பற்றி ஞாபகப்படுத்தி மீண்டும் ஒரு கடிதம் எழுதினுன் ஸ்ரீதரன்.

இம்முறை வனஜாவின் தகப்பனுரிடமிருந்து பதில் வந்திருந்தது. தம்முடைய கடைசிப் பெண் ஜகதாவுக்குக் கல்யாணம் நிச்சயமாகி யிருப்பதாகவும், அதையும் முடித்து விட்டு இரண்டு பெண்களையுமே ஒன்ருக ஒரு மொத்தமாகச் செலவு போட்டுக் கொண்டுவிட ஏற்பாடு செய்வதாக வினயமும், கெஞ்சுதலும் தொனிக்க எழுதியிருந்தார் ஜகதீசன்.

அறிவும், அடக்கமும் நிறைந்த அழகிய இளம் மனைவி ஒருத்தியுடன் இன்ப வாழ்க்கையைத் தொடங்கி ஆனந்த வெள்ளத்தில் மிதக்க வேண்டும் என்றெல்லாம் கனவு கண்டுகொண்டிருந்த ஸ்ரீதரனுக்கு அவனுடைய கனவுக்கிளியாக வந்து வாய்த்த வனஜா அவன் ஆசைக்கு நேர்மாருகப் பெருத்த ஏமாற்றத்தையும், ஏக்கத்தையும் தான் அளித்தாள். பெற்ருேருடைய செளகரியங்களுக்காகவும், செலவுகளுக்காகவும் பார்த்துக் கொண்டு தன்னை ஏங்க வைப்பதை நினைத்து மனம் வெம்பினுன் ஸ்ரீதரன்.

'வனஜாவைப் பற்றி எண்ணி எண்ணி அவனுடைய மனம் உருகுவதைப் போல அவளுக்கு மட்டும் தன்னைப் பற்றிய நினைப்பு இருக்காதா? இருந்திருந்து இன்னும் பதினெட்டு

வயது கூட பூர்த்தியாகவில்லை வனஜாவுக்கு. புதிதாக மணமான ஒரு இளம் பெண்ணைன அவளுக்கு மட்டும் எப்போது தன் கணவனுடன் மண வாழ்க்கையைத் தொடங்கி அந்த விநோத உலகத்தின் அதிசயங்களைக் கண்டு ஆனந்திக்கப் போகிறோம் என்ற துடிப்பு இருக்காதா? அல்லது ஸ்ரீதரனின் மன நிலைமை தான் புரியாதா? பின் ஏன் தன் தந்தையிடம் தன்னைக் கொண்டுவிட ஏற்பாடுகளை செய்யச் சொல்லித் தூண்டாமல், தன் வாழ்க்கையை வீணுக்கிக் கொண்டு இருக்கிறுள்? ஒருவேளை அவனை அவளுக்குப் பிடிக்க வில்லையா? ஸ்ரீதரனுடைய மனக்குழப்பத்தின் காரணம் இதுதான்.

எவ்வளவு ஆத்திரத்துடனும் படபடப்புடனும் வனஜாவின் வீட்டுக்கு வந்தானே அந்த வேகம் அடியோடு இல்லாமல் அவன் ஸ்டேஷனை நோக்கி நடந்துக் கொண்டிருந்தான். ஆனல் மனதில் அமைதியில்லை. வீட்டுக்குச் சென்றதும் இது சம்பந்தமாக உடனடியாக தீவிர நடவடிக்கை எடுத்தே தீருவது என்று மட்டும் உறுதி செய்து கொண்டான்.

* * *

மறுநாள் காலை எழுந்ததும், ''முதல் வேலையாக வனஜாவைக் கொண்டு விடுவதற்கான ஏற்பாடுகளை உடனே செய்ய வேண்டும்'' என்று அதிகாரமும் கண்டிப்பும் தொனிக்கத் தன் மாமனுர் ஜகதீசனுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினன் ஸ்ரீதரன். இந்தக் கடிதத்துக்கு தக்க முறையில் பதில் இல்லையென்ருல் அப்புறம் வனஜா நிரந்தரமாக அங்கேயே தங்கி வேண்டியதுதான் என்றும் குறிப்பிட்டான். அப்போது தான் அவன் மனத்தில் சிறிது நிம்மதி பிறந்தது. அந்தக் கடிதத்திற்கு உடனே அவனுடைய மாமனுரிடமிருந்து பதில் வந்துவிட்டது. அடுத்த வாரத்தில் ஒரு நல்ல நாள் பார்த்திருப்பதாகவும், அன்று வனஜாவைக் கட்டாயம் கொண்டு விடுவதாகவும் மிகவும் வணக்கத்துடன் எழுதியிருந்தார்.

* * *

அடுத்த நாள்தான் வனஜாவை ஜகதீசன் கொண்டு விடப் போகும் தினம். அதற்கு முந்திய நாள், வாயிற்புற வராண்டாவில் ஒரு ஈஸிசேரில்சாய்ந்து படுத்தவாறு ஏதேதோ இன்பக் கனவுகளில் லயித்துத் தன்னை மறந்து சிந்தனையில் மூழ்கியிருந்த ஸ்ரீதரன் ''போஸ்ட்!'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினன். அவனுடைய கையில் ஒரு கவரைக் கொடுத்து விட்டுச்சென்ருன் தபால்காரன். கவரின் மேலுள்ள கையெழுத்தைப் பார்த்த போது ஸ்ரீதரனின் நெஞ்சு 'திக்' 'திக்'கென்று அடித்துக் கொண்டது. மறுநாள் வனஜாஅங்கு வரப்போவதாக இருக்கும்போது அந்த கடிதம் எதற்கு? தாங்க முடியாத திகைப்பிலும், ஆவலிலும் விண்டு விரியும் தன் உள்ளத்தைச் சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டு கவரைக் கிழித்துக் கடிதத்தை எடுத்தான் ஸ்ரீதரன்.

அவன் கண்கள் பரபரப்புடன் கடிதத்தில் படிந்து நின்றன. கடிதத்தைப் படித்து முடித்த ஸ்ரீதரன் தன்னை மீறி எழுந்த திகைப்பில் 'ஓ'வென்று கத்தி விட்டான், வனஜா எழுதிய கடிதமா இது? எவ்வளவு பயங்கரம்! திரும்பத் திரும்ப அந்தக் கடிதத்தைப் படித்தான். ஒவ்வொரு தடவையும் திகிலும், பரபரப்பும் அவன் மனதில் குவிந்து அவனை அலைக்கழித்தது. இந்தக் கடிதம் ஒரு கனவாகி மறைந்துவிடக் கூடாதா என்று ஸ்ரீதரன் ஏங்கினன்.

(அடுத்த இதழில் முடியும்)

வெற்றி

ரூபர்ட் ஆஷ்லி, குதிரைப் பந்தய மோகம் பிடித்தவன். நல்ல சிவந்த நிறத்தைக் கொண்ட இவனை, குதிரைப் பந்தயம் நடக்கும் நாட்களில் ரேஸ் கோர்ஸில்தான் சந்திக்க முடியும். வார் போட்ட 'பைனாகுலர்ஸை' தோளில் மாட்டியபடி, வலது கையில் ரேஸ் புத்தகமும், இடது கையில் புகையும் சிகரட்டுமாக காட்சியளிப்பவன் நம் ரூபர்ட் ஆஷ்லிதான். மற்ற நண்பர்களுடன் அவன் அளவளாவும்போது, அவன் குரல்தான் அந்தக் கூட்டத்திலேயே கம்பீரமாக இருக்கும். ரூபர்ட் ஆஷ்லியைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கு முன்னால், குதிரைப் பந்தயத்தில் நிறைய பணம் சம்பாதிக்கும் முறையையும் வாசகர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒருவன் அன்றைய தினம் நடைபெற இருக்கும் ஆறு பந்தயங்களிலும், ஒவ்வொரு குதிரையைத் தேர்ந்தெடுத்து, பணம் கட்டவேண்டும். முதல் பந்தயத்தில் அவன் தேர்ந்தெடுத்த குதிரை ஜயித்தால், அவன் கட்டிய பணம் பெருகும். அந்தப் பணம் இரண்டாவது பந்தயத்தில் அவன் குறிப்பிட்டிருக்கும் குதிரைக்குப் போய்ச் சேரும். அந்தக் குதிரையும் பந்தயத்தில் வெற்றி கண்டால், மேலும் அந்தப் பணம் பெருகி, மூன்றாவது பந்தயத்தில் அவன் எழுதியிருக்கும் குதிரைக்குப் போய்ச் சேரும். இப்படியே ஆறு பந்தயங்களிலும் அவன் தேர்ந்தெடுத்துள்ள குதிரைகள் ஜெயித்தால் அவன் கட்டிய பணத்தைவிட பல மடங்கு பணம் குவியும். இந்த ஆறு குதிரைகளிலும், ஏதேனும் ஒன்று தோற்றாலும், அவன் பணம் பறிபோகும். ஆனால் ஐந்து குதிரைகள் ஜெயித்து, ஆறாவது பந்தயத்தில் அவன் குறிப்பிட்டிருக்கும் குதிரை, ஓடாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால், அவன் ஜெயித்தவனாகவே கருதப்படுவான்.

இனி, ரூபர்ட் ஆஷ்லியைத் தொடருவோம்.

அன்று சனிக்கிழமை. டப்ளின் குதிரைப் பந்தய சிஸனின் கடைசி நாள். படுக்கையைவிட்டு சோம்பலை முறித்தபடியே எழுந்த ரூபர்ட் ஆஷ்லியின் கைகள், அருகே மேஜையின் மேல் கிடந்த ரேஸ் புத்தகத்தை துழாவின.



ரகசியம்

மூலக் கதை : மாரிஸ் ரிச்சர்ஸ்டீன்
மொழி பெயர்ப்பு : ''மாலா''

படுக்கையை விட்டு எழுந்ததும், ரேஸ்புத்தகமும் கையுமாக உட்கார்ந்துவிட்டான். அவன் கண்கள் புத்தகத்தின் குதிரைப் பட்டியலில் மேய்ந்தன. ஒவ்வொரு குதிரையையும், அவன் உள்ளத் தராசில் எடைபோட்ட வண்ணம் இருந்தான்.

கடைசியில் ஒருவாறாக, அன்றைய தினம் நடைபெறும் ஆறு பந்தயங்களிலும் ஒவ்வொரு குதிரையை தேர்ந்தெடுத்து விட்டான். பகல் பொழுது நெருங்கி விட்டதை உணர்ந்ததும், பகல் உணவை அருந்தி மீண்டும் ஒரு முறை தான் தேர்ந்தெடுத்துள்ளவைகளை கண்ணோட்டம் விட்டான். அவனது தேர்தல் அவனுக்குப் பெருத்த மகிழ்ச்சியை உண்டாக்கியது. ஆறு குதிரைகளையும் அயன் குறிப்பெடுத்து 5 பௌன் கட்டி, அவனது லண்டன் புக்கிங்கிற்கு தந்தி கொடுத்துவிட்டான்.

அவன் தேர்ந்தெடுத்த குதிரைகள் பின் வருமாறு:— பெய்ரி ஹவுஸ் 6-1; ஜிந்தாபார் 5-1; புஸ் புஸ் ப்ளவர் 8-1; ரெட் லேடி 4-1; எஸ்தர் வில்லியம்ஸ் 8-1; டைரன் பவர் 2-1; ஆகியவைகளாகும். இவைகள் எல்லாம் உண்மையிலேயே முதன்மையாக வந்தால், ரூபர்ட் ஆஷ்லி அடுத்த நிமிஷம் 84000 பௌனுக்கு சொந்தக்காரனாக இருப்பான்.

போனிக்ஸ் பார்க், ஒரே ஜனத் திரளாய் இருந்தது. ரூபர்ட் ஆஷ்லி, தன் சகாக்களோடு, பைனகுலர்ஸ் மார்பில் புரள, அளவளாவிக் கொண்டிருந்தான். அவன், உள்ளம் சந்தோஷத்தால் விம்மி வெடித்துவிடும் அளவுக்கு பூரித்திருந்தான்.

முதல் பந்தயம் துவக்குவதற்கான வேட்டுச் சப்தம் ஒலித்தது. ரூபர்ட் ஆஷ்லி மூச்சை அடக்கிக் கொண்டு, ஓடும் குதிரைகளை தன் பைனகுலரின் மூலம் பார்த்தபடி நின்றான். கண் இமைக்கும் நேரத்தில் பெய்ரி ஹவுஸ், வெற்றிக் கம்பை நெருங்கி, ரூபர்ட் ஆஷ்லியின் உள்ளத்தை குளிர்வித்தது. கொஞ்சம் சிரம பரிகாரம் செய்து கொண்டதும், இரண்டாவது ரேஸ் தொடங்கியது, இந்தத் தடவை ஜிந்தா பார் ஜெயமடைந்து, ரூபர்ட் ஆஷ்லியை மகிழ்வித்தது. மூன்றாவது பந்தயத்தில் புஸ் புஸ் ப்ளவர் எதிர் பாராத வண்ணம் வெற்றியடைந்து, ஆஷ்லியை எல்லையில்லா இன்பத்தில் ஆழ்த்தியது.

இடைவேளை வந்தது. ரூபர்ட் ஆஷ்லி ரேஸ் கோர்ஸ் கிளப்பில்

உட்கார்ந்திருந்தான். அவனது அருகில் பெக்கிலின்டாக் என்ற பணக்கார விதவை ஒருத்தி இருந்தாள். குதிரைப் பைத்தியம் நிரம்ப கொண்டவள். எந்த பந்தயத்துக்கும் அவள் வருவது தவருது. ரூபர்ட் ஆஷ்லியின் பார்வைக்கு பிறகும் அவள், அவன் உள்ளத்தில் இருந்து வந்தாள் என்ருல் அதன் காரணம், அந்த பணக்கார விதவை மறுமணம் செய்து கொள்ள தகுந்த கணவனை தேடிக் கொண்டிருந்ததேயாகும்.

மூன்ருவது பந்தயத்தில் புஸ்புஸ் ப்ளவர் வெற்றியடைந்ததும் ரூபர்ட் ஆஷ்லியின் கணக்கில் 12,000 பௌன் ஏறியிருந்தது. இன்னும் மூன்று பந்தயங்களிலும், அவன் குறிப்பிட்டிருந்த குதிரைகள் வெற்றி கண்டால், ரூபர்ட் ஆஷ்லி, 84,000 பௌனிற்குச் சொந்தக்காரனுகை ஆகிவிடுவான். அப்போது பெக்கி லின்டாக், அவனது ஆசை மனேவியாக ஆனலும் அதில் வியப்பில்லை, இம்மாதிரி எண்ணச் சுழலில் திக்கித் திணறியபடி இருந்த போதே, நான்காவது ரேஸும் நடந்து முடிந்துவிட்டது. ரூபர்ட் ஆஷ்லி தேர்ந்தெடுத்த ரெட் லேடி தான் 'ஜம்' மென்று முன்னல் வந்து நின்று விட்டிருந்தது.

'இந்த ஐந்துபந்தயங்களிலும் ஜெயித்து கடைசிப் பந்தயத்தில் கோட்டை விட்டு விட்டால்' என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் படர்ந்ததும்; அவன் உடல் வேர்த்து விறு விறுத்தது. இப்போது அவன் கணக்கில் இருக்கும் பணம் உள்ள கடன்களை எல்லாம் கொடுத்தாலும் ஏகப்பட்ட பணம் மிச்சப்படும். அப்போது பெக்கி லின்டாக், வலிய வந்து 'தன்னை மனேவியாக' ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று வேண்டுவாள், ஆனல் ஆருவது பந்தயத்தில் டைரன்பவர் மோசம் செய்து விட்டால், இவ்வளவுபணமும், போட்ட திட்டங்களும் அதோகதிதான் என்ற உணர்வு அவனே உலுக்கியது.

ஐந்தாவது பந்தயத்தில் எஸ்தர் வில்லியம்ஸ் கன ஜோராக ஜெயித்து, ரூபர்ட் ஆஷ்லியை குஷிப் படுத்தியது. ஆனல் ஆருவது பந்தயம் என்ற நினைப்பே, ஆஷ்லியை அதிர வைத்தது! ஆருவது பந்தயம் $2\frac{1}{2}$ மைல் தூரம் ஓட வேண்டியதாகும். இந்தப் பந்தயத்தில் எந்த வித நிபுணனும், திட்ட வட்டமாக 'இந்த குதிரைதான் ஜெயிக்கும்' என்று சொல்ல முடியாது. அவ்வளவு சிக்கலும், குழப்பமும் கொண்ட பந்தயம் அது. மேலும் அன்றைய தினம் தான் டப்ளின் குதிரைப் பந்தயத்தின் கடைசி நாள். ரூபர்ட் ஆஷ்லி நிலைகொள்ளாமல், பெக்கி லின் டாக்குடன், குதிரைகள் நிற்குமிடத்தை நோக்கி சென்ருன். ஆனல் பெக்கி லின்டாக்கோ, எந்தவித கவலையுமில்லாமல். சிரிப்பும் கும்மாளமுமாக தென்பட்டாள்.

"என்ன, இந்த பந்தயத்தில் ஒரு விசேஷம் இருக்கிறது உனக்குத் தெரியுமா அது?" என்று பெக்கி லின்டாக், ரூபர்ட் ஆஷ்லியைக் கேட்டாள்.

ரூபர்ட் ஆஷ்லிக்கு அப்போது எந்தவித வேடிக்கையிலும் மனம் ஈடுபடவில்லை. அவன் உள்ளமெல்லாம் அவன் குதிரை 'டைரன் பவரை'க் குறித்தே வட்டமிட்டபடி இருந்தது.

"மிஸ்டர் ஆஷ்லி, இதைப் பார்த்தீரா, இவ்வளவு பெரிய பந்தயத்தில் இந்தக் கழுதையையும் சேர்த்திருக்கிருர்களே, இதுதான் பெரிய வேடிக்கை" என்று கூறி விலா எலும்பு நொறுங்கிப் போகும் அளவுக்கு 'இடி இடி' யென்று சிரித்தாள்.

ரூபர்ட் ஆஷ்லிக்குத் தூக்கி வாரிப் போட்டது. காரணம், பெக்கி லின்டாக் காட்டியது,

இவன் தேர்ந்தெடுத்த 'டைரன் பவரைத்தான் ?

'ஏன்? என்ன சமாசாரம். இது ஜெயிக்காதா?'

"ஜெயிப்பதா! நன்ருகச் சொன்னீர்கள். மற்றக் குதிரைகளை இது வெற்றிகரமாக விரட்டி அடிக்கத்தான் போகிறது" என்று கூறி சிரித்தாள்.

"ஆமாம்! இது பல பந்தயங்களில் வெற்றி கண்டிருக்கிறதே!" என்ருன் ரூபர்ட் ஆஷ்லி சற்றே சந்தேகமாக. "அது பழைய சங்கதி. இப்போதெல்லாம் இது துரத்தத்தான் பயன் படும்" என்ருள் பெக்கி லின்டாக்.

"அவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறீர்களே! அது எப்படி?" தன் சந்தேகத்தை கேட்டே விட்டான் ரூபர்ட் ஆஷ்லி.

"அப்படிக் கேளுங்கள். இதன் சொந்தக்காரர் பிக்கில்ஸ் வில்லின்பரோ எனக்கு மிகவும் நண்பர். கடந்த நான்கு மாத காலமாக இந்தக் குதிரையின் கால்கள் பழுதடைந்துள்ளதாம். பார்வைக்கு ஒன்றும் தெரியா விட்டாலும் அரை மைல் தூரம் ஓடியதும், அந்தக் காலின் ஸ்மரணை அற்று விடுகிறதாம். அப்படியாளுல் அது எப்படி ஜெயிக்கும்' என்ருள் பெக்கி லின்டாக்.

இதைக் கேட்டதும், மூர்ச்சை அடையும் நிலைக்கு வந்து விட்டான் ரூபர்ட் ஆஷ்லி. கண் இமைக்கும் நேரத்தில் 84,000 பௌனிற்குச் சொந்தக்காரனுக இருந்து, மறுபடியும் ஒட்டாண்டியாக ஆவது என்ருல் எவருக்குத்தான் மூர்ச்சை வராது. ஆனல் அடுத்து நடந்த அந்த சம்பவம், அவனை மூர்ச்சையடையாமல் செய்தது.

"இதோ, அவரே வந்துவிட்டார். இப்போதுதான் உங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தேன்" என்று புதிதாக அங்கு வந்த ஒருவரிடம் பெக்கி லின்டாக் கூறிக்கொண்டிருந்தாள். "இவர்தான் பிக்கில் வில்லின்பரோ. 'டைரன் பவரி'ன் சொந்தக்காரர்" என்று, ரூபர்ட் ஆஷ்லிக்கு அறிமுகப்படுத்தினுள்.

"வணக்கம். நீங்கள் 'டைரன் பவரை' வாங்கிக் கொள்ளப் போகிறீர்களா? நான் ஆஸ்ட்ரேலியாவில் மூவாயிரம் பவுன் தருவதை வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் என்ன விலை தருவீர்கள்?" என்று கேட்டார் வில்லின்பரோ.

ரூபர்ட் ஆஷ்லியின் மூளை ஒரு கணம் தீவிரமாக வேலை செய்தது.

அடுத்த நிமிஷம்—

"ஐயாயிரம் பௌன் நான் தருகிறேன், 'டைரன் பவரை' கொடுத்து விடுங்கள். அதுவும் இப்போதே, இங்கேயே!" என்ருன் ஆஷ்லி.

பிக்கில் வில்லின் பரோவின் மறு வார்த்தைக்குக் கூட எதிர்பாராமல், தன் செக்குப் புத்தகத்தை எடுத்து, அவர் பெயருக்கு ஐயாயிரம் பௌன் எழுதி கொடுத்தான். டைரன் பவர், இனி ரூபர்ட் ஆஷ்லியினுடையது. வரவிருக்கும் பெருஞ்செல்வத்தை கனவாக ஆக்கிவிடக் கூடிய சக்திவாய்ந்த 'டைரன் பவரை' அந்த பந்தயத்திலிருந்து நீக்கிவிட அவனுக்கு உரிமை உண்டு. அடுத்த நிமிஷம், அவன் ஓடோடியும் சென்ருன்.

ஆருவது பந்தயம், டைரன் பவர் இல்லாமலேயே நடைபெற்றது.

ரூபர்ட் ஆஷ்லி பெரும் பணத்தையும் ஸ்ரீமதி பெக்கிலின்டாக்கையும் ஒரு விஞடியில் தட்டிவிட்டான் என்பதைக் கூறவும் வேண்டுமா?

உங்களால் மகிழ்ச்சியுடன்

நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக வாழ விரும்புகிறோம். ஆனால் நம் வாழ்க்கையில் துன்பமே அதிக இடம் பெற்று விடுகிறது. கவலையிருளை அகற்றி ஆனந்த ஒளியைப் பெற ஏதாவது வழி இருக்கிறதா? பணம், புகழ், அதிகாரம் ஆகியவற்றை பெற்றுவிட்டாலே நாம் மகிழ்ச்சியாக இருந்துவிட முடியாது, இவை அத்தனையும் பெற்றுள்ளதாக நாம் கருதும் பெரியார்களை அணுகிப் பார்த்தால் அவர்களும் எவ்வளவோ கவலைப்படுவதைத் தெரிந்து கொள்ளுவோம். மகிழ்ச்சியாக இருப்பதும், கவலையாக இருப்பதும் நம் மனோபாவத்தைப் பொறுத்தவை. வல்லூறுக்கு, வேண்டிய அளவு இறை கிடைத்தாலும் கூட அது வானம்பாடியைப் போல இனிமையாகப் பாடிக் கொண்டிருப்பதில்லை. சந்தோஷமாக வாழ்க்கை நடத்திய ஆண்டிகளைப் பார்த்து அரசர்கள் பொறாமைப்பட்ட பல கதைகளை நம் சிறு வயதில் படித்திருக்கிறோம். அவையெல்லாம் வெறும் கற்பனைகளென்று நாம் ஒதுக்கிவிட முடியாது. மனோதத்துவ ரீதியான பல உண்மைகள் அவற்றில் பொதிந்துக் கிடக்கின்றன. இதனால் தான் புலவர் ஒருவர்.

‘எண்ணத்தில் இன்பமே,
எண்ணமே இன்பமே!’

என்று பாடியிருக்கிறார்.

‘நான் கவலைகளில்லாமல் இருக்கிறேனா?’ என்ற எண்ணமே நாம் கவலைப் படுவதற்கு மூல காரணமாக அமைந்து விடுகிறது. ‘நாம் இனிமேல் கவலைப்படக் கூடாது!’ என்று எண்ணுவதும் தவறானது. ஒருவருக்கு மருந்து கொடுத்த டாக்டர் நோயாளியைப் பார்த்து ‘இந்த மருந்தை சாப்பிடும் போது குரங்கை நினைக்கக் கூடாது’ என்று கூறிய கதை நம் எல்லோருக்கும் தெரியும். இப்படி கூறப்பட்டால் மருந்து குடிக்க சிசாவை எடுக்கும்போதெல்லாம் நோயாளிக்கு குரங்கின் ஞாபகம்வருவது இயற்கை. இதைப் போன்றே, ‘இனி நாம் கவலைப்படக் கூடாது’ என்று எண்ணினால் பல கவலைகள் நம் மனத் திரையில் ஓடஆரம்பித்து விடும். நம்மைப் பற்றிய எண்ணமே ஏற்படாமல் இருக்கும்படி ஏதாவது ஒன்றில் ஈடுபடுவதுதான் கவலைகளில்லாமல் இருக்க சரியான வழியாகும். நம்மைப்பற்றி அனாவசியமான கவலைகளில் ஈடுபட நேரமே இருக்கக் கூடாது. ‘நீங்கள், மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா’? என்று பிரபல நாடகாசிரியர் பெர்னாட்ஷாவை ஒருவர் கேட்ட போது “தெரியாது; அதைப் பற்றி நினைக்கவே எனக்கு நேரமில்லை” என்று பதில் சொன்னாராம்.

ஒவ்வொரு நாளும், முதல் நாளைப் போல் இருப்பதில்லை. ஒவ்வொருநாளும்எத்தனையோ, புது விஷயங்களையும் நபர்களையும் சந்திக்கிறோம். அந்தந்த சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தது போன்று நம்மை மாற்றிக் கொள்ளாவிட்டால் நாம் மகிழ்ச்சியாக வாழ முடியாததோடு பல இடுக்கண்ணும் ஏற்பட்டு விடுகின்றன.

சந்தர்ப்ப சூழ் நிலைக்கும், மனிதர்களுக்கும் தகுந்தவாறு மாறிப் போகக் கற்றுக்கொண்டவர்களே மகிழ்ச்சியாக வாழ முடியும். காலம், இடம், சந்தர்ப்

எழுதியது: ஜி. சுவாமிநாதன்

இருக்க முடிகிறதா?

பம் ஆகியவற்றிற்குத் தகுந்த வண்ணம் நம்மை மாற்றிக் கொள்வதை ஆங்கிலத்தில் (Adjustment) திருந்துகை என்று குறிப்பிடுவார்கள்.

நம்முடைய வாழ்க்கை முழுவதும் நிகழ்காலத்தால் உருவானது. இறந்த காலத்திலேயோ, எதிர்காலத்திலேயோ நாம் வாழ முடியாது. 'நாளை' என்ற எதிர்காலத்தில் நாம் வாழும் போது அதுவும் நிகழ்காலமாகத்தான் இருக்கும். எனவே 'தற்சமயத்தில்தான்' நாம் மகிழ்ச்சியாக வாழ முடியும். 'இந்த கவலை போய்விட்டால் நான் மகிழ்ச்சியாக இருப்பேன்' என்று எண்ணுவது தவறானது. கவலையெல்லாம் தீர்ந்து மகிழ்ச்சியுடன் வாழ்வதென்பது அலை ஓய்ந்தபின், கடலில் குளிப்பது போன்றது. அலைகளினூடே நாம் கடலில் குளிப்பது போன்று, கவலைகளுக்கிடையே நாம் மகிழ்ச்சியாக இருக்கப் பழக வேண்டும்.

சிலர் தாங்கள் மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமன்றி, ஏதாவது வேடிக்கையாகப் பேசி மற்றவர்களையும் மகிழ வைக்கிறார்கள். தங்கள் பேச்சின் மூலம் மற்றவர்களைச் சிரிக்கவைக்கும் ஆற்றல் மிகச் சிலரிடமே இருக்கிறது. இந்த ஆற்றல் இயற்கையாக வரவேண்டுமேயன்றி பயில முடியாதது என்று நாம் எண்ணி விடுகிறோம். மற்ற எல்லாத்திறமைகளையும்போன்றே நகைச்சுவையையும் பழக்கத்தால் நாம் பெற முடியும். நாம் சந்தோஷமாக வாழ நகைச்சுவை உணர்வு மிகவும் இன்றியமையாதது.

நகைச்சுவைக் கலை படைத்தவர்களைக் கவனித்தால் அவர்கள் ஓரளவு விளையாட்டு சுபாவம் படைத்தவர்களாக இருக்கக் காண்போம். விளையாட்டு புத்தி இருப்பது சிறு பிள்ளைகளுக்கு அடையாளம் என்று நாம் எண்ணி விடுகிறோம். ஒவ்வொருவருக்கும், அவர்கள் எவ்வளவு வயதானவர்களாக இருந்தபோதிலும் இந்த சுபாவம் ஓரளவு தேவை. விளையாட்டு சுபாவம் என்றால் நமது காரியங்களைக் கவனிக்காமல் ஏதாவது விளையாடிக் கொண்டிருப்பது என்பது அர்த்தமல்ல. எந்தக் காரியத்திலும் ஆர்வங் காட்டுவதுதான் அதற்குச் சரியான விளக்கமாகும். நமக்கு வயதாக ஆக, உலகிலுள்ள பல விஷயங்களில் நாம் ஆர்வத்தை இழந்து விடுகிறோம். நமது வேலையுண்டு, நாமுண்டு என்ற முறையில் ஒதுங்கிப் போவதால் மகிழ்வுக்குறிய பல சந்தர்ப்பங்களை இழந்துவிடுவது மட்டுமின்றி, நமது உணர்வுகளும் மழுங்கி விடுகின்றன. சுரணையற்ற உணர்வுகளால் வாழ்க்கையின் நுண்மையை அனுபவிக்க முடியாதவாறு துன்பப் படுகிறோம். இளமையுணர்ச்சியை விரும்பும் ஒவ்வொருவரும் விளையாட்டு சுபாவத்தை கொண்டிருப்பது மிகவும் அவசியம்.

பிறர் குறைபாடுகளை மட்டுமின்றி நம் குறைகளைப் பற்றியும் எண்ணி நகைக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். தங்களைப் பற்றி, மற்றவர்கள் கூறும் வேடிக்கைப் பேச்சையெல்லாம், வீணாக எடுத்துக் கொள்பவர்கள் இவ்வுலகில் மகிழ்ச்சியாக வாழ முடியாது. நம் குறைகளைக்கண்டு நாம் நகைக்கும் போதே, மற்றவர்களது குறைகளைப்பற்றி குற்றஞ் சொல்

லாத மனப்பான்மையும், மற்றவர்கள் நம் குற்றங்களைக் கூறும்போது கோபப்படாத மனப்பண்பும் ஏற்படும்.

விளையாட்டு சுபாவத்தோடு, எதிர்பாராதவற்றைக் கூறுகிறபோது அவை நகைச் சுவையாக மாறிவிடுகின்றன.

நாடகாசிரியர் பெர்னாட் ஷாவை ஒரு அழகான சினிமா நடிகை தன் நண்பர்களுடன் பார்க்க வந்திருந்தாள். "அன்புள்ள ஷா அவர்களே அழகு மிக்க நானும், அறிவாளியான தாங்களும் திருமணம் செய்து கொண்டால், என்னுடைய அழகோடும், உங்கள் அறிவோடும் மைந்தன் பிறப்பானல்லவா?" என்று அவள் மிடுக்காகக் கேட்டாள். உடனே ஷா 'ஆனால் என்னுடைய அழகோடும், உன்னுடைய அறிவோடும் அவன் பிறந்து விட்டால்?' என்று கூறி மற்றவர்களை சிரிக்க வைத்து அவளுடைய அகம்பாவத்தை அடக்கினாராம்.

உங்களுக்கு நகைச்சுவையுணர்ச்சி இருக்கிறதா? அது வாழ்க்கைக் கேற்ப வளர்ச்சியடைந்திருக்கிறதா? என்பதை கீழ்க்கண்ட கேள்விகளுக்கு, 'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதிலளிப்பதன் மூலம் தெரிந்து கொள்ளுங்கள்.

1. நகைச்சுவைப் புத்தகங்களையும், படங்களையும் உங்களால் அனுபவிக்க முடிகிறதா?

2. சினிமாப் படத்தில் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டும், திட்டிக் கொண்டும் காமிக் செய்தால் ரசிக்கிறீர்களா?

3. யாராவது தெருவில் வேடிக்கை காட்டினால் சிரிக்கிறீர்களா?

4. மற்றவர்கள், வார்த்தைகளை விசித்திரமாக உச்சரிப்பதைக் கேட்டால் சிரிப்பு வருகிறதா?

5. யாராவது கீழே விழுந்தால் சிரிக்க ஆசை ஏற்படுகிறதா?

6. குழந்தைகள் முகத்தைச் சுளுக்கி அழகு காட்டினால் ரசிக்கிறீர்களா?

7. மிருகங்கள் விளையாடுவது உங்களுக்கு வேடிக்கையாயிருக்கிறதா?

8. ஹாஸ்ய சங்கீத நாடகங்களை உங்களால் ரசிக்க முடிகிறதா?

9. அரசியல் கார்டூன்களைக் கண்டு சிரிக்கிறீர்களா?

10. நாவல்களில் வருகிற ஹாஸ்ய பாத்திரங்களை ரசிக்கிறீர்களா?

ஒன்றிலிருந்து ஐந்து வரையிலுள்ள கேள்விகளுக்கு 'இல்லை' விடைகளும், 6லிருந்து 10வரை 'ஆம்' விடைகளும் முதிர்ந்த ஹாஸ்ய உணர்வைக் குறிப்பிடுகின்றன.

OSLER
INDIA'S
Quality Lamp
Manufactured by :
THE OSLER ELECTRIC-LAMP MFG. CO. LTD.
BOMBAY-10.
Sole Distributors :
F. & C. OSLER (India) LTD.
Bombay, Calcutta, Madras, Delhi, Kanpur, Gauhati

“உங்கள் இல்லாளின் பக்கம் வாதமிட்டு நான் வடித்த கண்ணீர் உங்கள் மனதை வெற்றி வழிக்கு மாற்றியது போல அதே என் கண்ணீர் என் மனச்சாட்சியை வெற்றி கொண்டுவிட்டது..............”

வாழ்வின் தளிர்

பூவை. எஸ். ஆறுமுகம்

உண்டு முடிந்தது; தாம்பூலம் தரித்துக்கொண்டு, கடைசிக் குழந்தையைக் கையுடன் அழைத்துக் கொண்ட செட்டியார்—உரிமையாளர், புறப்பட்டார். தயாராகக் காத்து நின்றது கார். கைகூப்பியவாறு அவர்களுக்கெல்லாம் நன்றி சொன்னார் செட்டியார். அவர்களுக்குக் கங்கு கரையற்ற சந்தோஷம்.

கார் புறப்பட்டது.

அவர்கள் என்கிறேனே—அந்த அவர்கள், அந்தச்செட்டியாரின் கம்பெனியில் வேலை பார்ப்பவர்கள். மாதவன், சிதம்பரம், ராமனுதன், தியாகராஜன்—இது அவர்களது பெயர் ஜாபிதா. பொறுப்பு வாய்ந்த உத்தியோகங்கள்; பொறுப்புடன் நிர்வகித்தார்கள்.

நாளெல்லாம் ஹோட்டலில் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்கொள்ளக் கூடாதே என்ற அனுதாப மேலிட்டால் ஒரு யோசனை சொன்னார் செட்டியார், ‘மெஸ்’ ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று. உரிமையாளரின் பூரண ஒத்துழைப்பில்—அதாவது பண உதவியினால் அடுத்த வாரமே ‘மெஸ்’ ஒன்று ஜாம் ஜாம் என்று ஆரம்பமாயிற்று. அடுத்த சில நாளில் ஆபீஸில் வேலை பார்த்த அந்த நால்வர்களும் செட்டியாருக்கு ‘படே’ விருந்தொன்று வைத்தார்கள். செட்டியாரின் பெருந்தன்மைக்கு நன்றி சொல்ல வேண்டுமல்லவா! முறை என்று வேறு உண்டல்லவா! செட்டியார் விருந்து முடிந்து காரில் புறப்பட்ட தருணம் அந்நால்வர்களுக்கும் புன்னகை மெட்டிசைக்கக் கூறிய நன்றி மொழிகள் அவர்களுக்கு அமிர்த தாரையாகச் சிந்தினதில் வியப்பேது?

“உங்களுக்கெல்லாம், ஊஹூம், நமக்கெல்லாம் அடுத்த மாதம் ஒண்ணும் நம்பர் டின்னர் ஒன்று கைமேல் காத்திருக்கிறது. நம் நண்பர் தியாகு தன் பிரமச்சாரிய வாழ்வுக்கு முற்றுப் புள்ளி போடத் தீர்மானித்துவிட்டார். அதாவது அவருக்குக் கல்யாணம்; ஒன்ருக இருக்கும் அவர் இரண்டாகப் போகின்ருர்....” என்ருன் மாதவன்.

“நண்பருக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்! அவரது தாம்பத்தியம் புதுமையுடன் திகழப் பிரார்த்திக்கிறேன்.”

இப்படி ஒன்று போல மற்றவர்கள் மூவரும் தங்கள் தங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தியாகராஜன் அப்பொழுது தன் எதிர்கால மனைவி பற்றிய இன்ப நினைவில் லயித்திருந்தானே, என்னவோ? அவனுடைய புன்னகை முகத்தில் வியர்வைத் துளிகளின் புள்ளிக்

கோலத்துடன், இன்பக் கனவின் எழிற் கோலமும் கைலாகு கொடுத்துச் சேர்ந்து கொண்டன.

"தியாகுவின் திருமண வைபவத்துக்கு அடியேன் தம்பதி சமேதராக ஒரு வாரம் முன் கூட்டியே வந்திருந்து கல்யாணத்தைச் சிறப்பாக நடத்தி வைக்கச் சித்தமாக இருக்கிறேன். நண்பர் ராமனுதனும் தன் மனைவியைக் கூட்டி வந்து விடுவார்...." என்று சொல்லி விட்டு, நண்பர் குழாமைப் பார்த்தான் மாதவன்.

"ஆஹா! நானும் என் திருமதியைக் கட்டாயம் அழைத்து வந்துவிடுகிறேன்" என்முன் ராமனுதன் வெற்றிப் புன்னகை வசந்தம் பாட.

ராமனுதனும் மாதவனும் ஒரு முகமாக சிதம்பரத்தை நோக்கினார்கள். அவர்களது முகங்களில் கேள்விக் குறி தொக்கி நின்றது. சிதம்பரத்தின் முக மண்டலம் எந்தப் பதிலையும் தெரிவிக்கக்காணோமே! அவன் ஏனோ தலையைக் கீழே தாழ்த்திக் கொண்டவாறு, தாம்பூலத் தட்டில் கிடந்த கிராம்பொன்றை எடுத்து உதட்டில் சுவைத்துக் கொண்டிருந்தான்.

"சிதம்பரம், நீங்களும் தான் என் கல்யாணத்துக்கு உங்கள் மனைவி சகிதம், தம்பதி சமேதராக எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்" என்முன் தியாகராஜன். உரிமையுடன் அன்பில் பிறந்த பாந்தவ்யமும் அவன் குரலில் உறவாடின.

"மன்னியுங்கள், தியாகு. இந்த ஜன்மத்தில் உங்கள் ஆசை வேண்டுகோளை என்னால் நிறைவேற்ற முடியாததற்கு ரொம்பவும் வருந்துகிறேன். அது என்னுடைய மறந்த கனவாகிவிட்ட பழங்கதை!...."

சிதம்பரத்தின் பேச்சில் அளவிட முடியாத ஆருத்துயர் இழைபாய்ந்திருந்தது. ஏன் இத்தனை ஏக்கம்? ஏன் இவ்வளவு விரக்தி மனப்பான்மை? காரணம்....!

"காரணம் என்ன? ஏன் அப்படி நீங்கள் கரம் பற்றிய உயிர்த் துணைவியை உதாசீனம் செய்து ஒதுக்குகிறீர்கள்......." என்முன் தியாகராஜன் மறுபடியும் இடைமறித்து.

சிதம்பரத்தின் இதழ்களில் பசை பாய்ந்திருந்திருக்குமோ? ஏன் அவன் அப்படி வாய்மூடி மௌனியாகிவிட்டான்?

"சிதம்பரம்! பெண்ணின் வாழ்வு தன் கணவனின் இன்ப அரவணைப்பில், அன்புப் பராமரிப்பில் தான் பரிபூரணம் அடைகிறது. அவள்—உங்கள்



மனைவி உங்களுக்குரியவள்; உங்கள் வாழ்வுதான் அவளுக்கு வையம்; உங்கள் நினைவுதான் அவளுக்கு உயிர். அவள் வாழ்வும் வளமும் தானே உங்கள் மூச்சு! நீங்கள் அறியாததல்லவே சிதம்பரம், இவை யனைத்தையும் கடந்தது கண்ணீருடன் கழிந்தொழியட்டும். உங்கள் மனைவியின் வருங் காலத்தை—நாளைப் பிறக்கவிருக்கும் நாளைத் திருநாளாக்குங்கள்....இது உங்கள் கடமை; அக்கினி சாட்சியாக உங்கள் 'மறுபாதி'க்கு நீங்கள் அளித்த வாக்குறுதியுங்கூட....'' என்ருன் ராமனுதன், குரலில் உணர்ச்சி சுழித்தோட.

''ராமனுதன், என் கடமையை நினைவு படுத்துகிறீர்கள். ஆனல் அவள் கடமை? கொண்ட கணவனின் கவலையைப் போக்கக் கவலையில்லாமல், வெறும் நகைப் பைத்தியமாக அலைவது தானு? இப்போது நினைத்தால் கூட நெஞ்சு குமுறுகிறது. அப்பொழுது வேலைபார்த்து வந்த கம்பெனியில் நான் பொறுப்பேற்றிருந்த காஷியர் வேலையில் அன்று இருபது ரூபாய் திட்டக் குறைச்சல் ஏற்பட்டது. அடுத்த நாள் ஆடிட்டிங் நடப்பதாக இருந்தது. விஷயத்தை ஒருமட்டாக அவளிடம் சொல்லி அவள் அப்பா செய்துபோட்ட ஒற்றை வடச் சங்கிலியை அடகுவைத்து இருபது ரூபாய் பெற்று கணக்கை நிரவல் செய்துவிட்டால் விரைவிலேயே எப்படியும் நகையை மீட்டுத் தருவதாகக் கெஞ்சினேன். அவள் பெண்ணுகை இருந்தும் இவ்விஷயத்தில் பேயாளுள். என் வேண்டுகோளையும் மறுத்து விட்டாள். கடைசியில் எப்படியோ ஒருமாதிரி பணத்தைக் கட்டிக் கணக்குப் பார்த்ததில் நான் தான் வரவு செலவுப் புள்ளிகளை மாற்றி எழுதி விட்டது புரிந்தது. அன்று வைத்த வைராக்கியம் இன்றுவரை மாறவில்லை. மாதங்கள் இருபது ஆகின்றன. இனியுமா அவளை அழைத்து நான் வாழ்க்கை தொடங்குவது? என்னை உதாசினம் செய்தவளின் முகத்தை மீண்டும் நான் திரும்பிப் பார்க்கவா? ஊஹூம், ஒரு கணம்கூட எண்ணவும் மனம் ஒப்பவில்லையே அவளைப்பற்றி. மன்னியுங்கள் நண்பரே....''

கணவன் என்னும் கடமை மறந்து பேசிய சிதம்பரத்தின் வார்த்தைகளுக்கு மீளவும் ராமனுதன் மறுமொழி சொல்லத் தொடங்கினுன். ''திருமணம் வெறும் ஐந்து நிமிஷச் சடங்கில்லை, அதைப் புரிந்துகொள்ள ஒரு வாழ்க்கை போதாது, தெரியுமா? உங்கள் மனத்திலுள்ள குரோதத்தை—அசட்டுப் பிடிவாதத்தை அலக்காக மூட்டை

கட்டி வைத்து விட்டு, உங்கள் துணைவியை மறுவாழ்வு பெறச் செய்யுங்கள். அதுவே உங்கள் கடமை; அக்கினி சாட்சியாக அவளைக் கைபிடித்த தருணம் நீங்கள் செய்து கொடுத்த வாக்குறுதி? தவறு செய்வது மனித இயல்பு. அதை மன்னிப்பது தானே தெய்வீகம்....?''

விம்மி வந்த கண்ணீர் ராமனுதனைப் பேசவொட்டாமல் நாவடைக்கச் செய்து விட்டது.

சிதம்பரம் ஒரு கணம் அதிர்ச்சியுற்றான். ராமனுதனின் கண்கள் சிந்தின நீர்மணிகள் அவனை அப்படிச் செய்தது. தன் விஷயத்தில் அவன் கொண்டுள்ள அன்பும் ஈடுபாடும் அவனைத் தன்னிலைமறக்கச்செய்தன.

''ராமனுதன், உங்கள் அன்பும் அக்கறையும் மகத்தானது. உங்களுக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன். ரேணுகாவை அழைத்து வரும்படி நாளைக்கே என் மாமனுருக்குக் கடிதம் எழுதிவிடுகிறேன். சரிதானே....? என் கடமையை நினைவுபடுத்தி, உணரச் செய்ததற்கு மிக்க நன்றி....'' என்றான் சிதம்பரம். குனிந்த தலை நிமிர்ந்து. முகத்தில் அன்று வரை நிலவியிராத அழகான புதுக்களை மெருகு பூசப்பட்டிருந்தது. புது வெள்ளத்தின் மிதப்பும் பூரிப்புமல்லவா அது!

''ஆஹா! ரொம்ப தாங்க்ஸ் மிஸ்டர் சிதம்பரம்! ஒரு பெண்ணின் வாழ்வில் புது மலர்ச்சி தோன்றச் செய்த புண்ணியத்தில் அடியேனுக்கும் உள்ள பங்கில் பெருமைப் படுகிறேன்; பெருமிதம் கொள்ளுகிறேன். நம் தோழர் தியாகுவின் திருமண முகூர்த்தத்துக்கு நாம் மூவரும் கட்டாயம் தம்பதி சகிதம் போய் வருவோம். அப்படியென்றால், நாம் நால்வருமே பெரிய வீடு பிடித்து குடும்பங்களை இங்கேயே செட்டில் செய்துவிடுவோமே. ஆனால் நம் அருமை 'மெஸ்' ஸுக்குத்தான் 'குட்பை' போடவேண்டும்........ எப்படி...'' என்றான் ராமனுதன் பொங்கும் குதூகலத்தில்.

* * *

விடிந்தது........

''இனி நாமெல்லாம் நண்பர் சிதம்பரத்தைத் தரிசிக்கக் கூட முடியாது. அதற்குக்கூட திருமதி சிதம்பரம் அவர்களின் அனுமதி தேவையாக்கும்......'' என்று கலாட்டாக் குரலை முன்னேடை விட்ட வண்ணம் உள்ளே நுழைந்தார்கள் தியாகராஜனும் மாதவனும்.

அங்கு சிதம்பரம் மட்டுமே இருந்தான். அவர்களை வரவேற்றான். தன் மனைவியை அழைத்து வந்து விடுமாறு தனது மாமனுருக்கு தபால் எழுதிய விபரத்தை நண்பர்களிடம் காட்டி விட்டுத்தான் 'போஸ்ட்' செய்தான் சிதம்பரம். அதற்குத்தான் அவனை நண்பர்கள் உரிமையுடன கேலி பண்ணினார்கள்.

தங்கள் குழுவில்ராமனுதனைக் காணாத அவர்களுக்குத் திகில் பரவிற்று. அவன் அறையை நாடிச் சென்றார்கள். மாலையில் சிதம்பரத்தின் புது வாழ்வுக்கு அடித்தளமிட்டுப் பிரிந்தவர்கள் தாம், அப்புறம் ஒருவரையொருவர் சந்திக்க முடியவில்லை.

ராமனுதனின் அறை திறந்தது திறந்தவாறு கிடந்தது. சாமான்களெல்லாம் போட்டது போட்டபடி சிதறிக் கிடந்தன மூலைக்கொன்றாக. இரவு போடப்பட்ட விளக்குப் போலும், அதுகூட இன்னும் அணைக்கப்படாது எரிந்து கொண்டிருந்தது. சிகரெட் துண்டுகள் பல பல சிதறிக் கிடந்தன.

அவர்கள் மூன்று பேரும் ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்த வண்ணம் இருந்தார்

கள்; பேசவில்லை. ராமனுதன் அறையில் காணப்படாததும், அறையின் அலங்கோலமும் அவர்களுக்கு ஏதோ ஒரு புதிராகத்தான் பட்டது.

"இதோ ஒரு போட்டோ இருக்கிறதே..." என்று சொல்லியவாறு கீழே கிடந்த புகைப் படத்தை எடுத்து நீட்டினன் தியாகராஜன்.

"இது ராமனுதனின் மனைவியின் போட்டோ. முன்பு இவர்கள் திருமணப் படம் தினத்தாள் ஒன்றில் வெளி வந்தது நினைவிருக்கிறது........" என்ருன் சிதம்பரம்.

"இங்கே பாருங்கள் எத்தனை கடிதங்கள்..." என்று சொல்லிய மாதவன் மூலைக் கொன்ருய் கிடந்த அத்தனை கடிதங்களையும் ஒன்று திரட்டினன். அவை ஒவ்வொன்றும் 'பிரியமுள்ள கணவரவர்களுக்கு' என்று ஆரம்பித்து கடைசியில் 'தங்கள் அடியாள் மீனு' என்று ஒரே வாசகமாக முடிந்திருந்தது.

"மீனு என்பது ராமனுதனின் மனைவியாயிற்றே. ஒன்றும் புரியவில்லையே. எங்கே ஒரு கடிதத்தைப் படியுங்கள் பார்க்கலாம்."

சிதம்பரம் கடிதத்தைப் படிக்கலானன்:

"பிரியமுள்ள கணவரவர்களுக்கு,

அடியாள், உங்கள் மனைவி மீனு, வணக்கம். என்னுடைய முந்திய கடிதங்கள் அத்தனையும் உங்களுக்குக் கிடைத்திருக்கலாம். ஆருக வடிந்த என் ரத்தக் கண்ணீரினல் எழுதப்பட்ட அத்தனை கடிதங்களுமா இன்னமும் உங்களுக்கு ஒரு பொட்டுக் கண்ணீரைக் கூட, ஒரு துளி இரக்கத்தைக் கூட உற்பத்தி பண்ணவில்லை. ஐயோ...! உங்கள் கைப்பிடித்தவள் நான். என்ருே ஒரு நாள்தான் தங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை சொன்னேன். சினிமாவுக்குப் போக வேண்டுமென்றேன். நீங்கள் கூடாதென்றீர்கள். நான் மறுத்துப்போய்விட்டேன் படம் பார்க்க வேண்டுமென்ற குஷியில், வந்திருந்த தோழிகளுடன். தவறுதான். அதற்குத்தான் எனக்கு இந்த பன்னிரெண்டு மாசம் கடுங்காவல் தண்டனையா? ஐயையோ. நான் அடைபட்டுச் சாகாமல் செத்துக் கொண்டிருக்கும் என் வாழ்வுச் சிறையில் எப்பக்கம் நோக்கினுலும் உங்கள் ஆசை முகமும், அன்பு விழிகளும், சிரிக்கும் உதடுகளும் தான் என் அகக் கண்களின் முன் தோன்றுகின்றன. அதனல் தான் நானும் இந்த உயிரைப் பிடித்துக் கொண்டு சாகாமல் இருக்கிறேன். பெண் பரிபூரணமடைவது கணவனின் ஆதரவுப் பெருக்கினுல் என்பதாக நீங்

புது ரக ஆயுதம்!

இரண்டாவது உலக யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த காலம். இரண்டு ஜெர்மனியர்கள் ஒரு ஷெல்டருக்குள் புகுந்து உட்கார்ந்து கொண்டு ரகஸியமாக உரையாடிக் கொண்டிருந்தனர். ஒருவன் சொன்னன் "இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர ஒரு வழிதான் இருக்கிறது"

"என்ன அது?"

"வி. 5-ஐ, பிரயோகித்தால் போதும்...."

"வி. 5. என்பது என்ன? புது ரக வெடி குண்டா?"

"இல்லை. இல்லை. அதை விளக்குகிறேன் கேள். ஒரு உயரமான கோலை எடுத்து அதன் ஒரு முனையில் பிரம்மாண்டமான வெள்ளைக் கொடியைக் கட்டி அதை ஆகாயத்தில் உயரமாகத் தூக்கிப் பிடிப்பது....இதுதான் வி. 5...."

கள் எவ்வளவு முறை என்னிடமே சொல்லியிருக்கிறீர்களே...! கணவன் மனைவியரிடையே ஊடலும் பிணக்கும் ஏற்பட்டால் தான் வாழ்வு ரசனை பெறும் என்ற கொள்கை கொண்ட 'தாம்பத்தியக்' கதைகள் பலவற்றை என்னிடம் கொடுத்துப் படிக்கச் செய்திருக்கின்றீர்களே....!

அத்தான், எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களா? முன்பெல்லாம் இரண்டு மாதத்துக்கு ஒரு முறை பட்டணத்திலிருந்து எனக்காக 'டாண்' என்று ஓடி வந்து பூவைமாநகரில் குதித்து விடுவீர்களே.... இப்போது வருஷம் ஒன்றாகப் போகிறதே....! எனக்கென துளி இடமாகிலும் அளியுங்கள். துளி இடம்! இனியும் என்னைச் சோதிக்காதீர்கள். பட்டதெல்லாம் போதும். நான் கணத்துக்குக் கணம் இறந்து கொண்டிருக்கிறேன். ஒரு முறை தங்களது தேவ தரிசனம் இம்முறையாகிலும் கிடைக்கச் செய்வீர்களென்று நம்புகிறேன். சருகாகி விட்ட என்னைத் தளிராக்குவீர்களா? ...அத்தான்....!

தங்கள் அடியாள்,
அபலை மீனா''

சிதம்பரம் துளிர்த்திருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

''என் சிரழிந்து போயிருந்த வாழ்வைச் செம்மைப் படுத்தியவர் ராமனாதன். ஆனால் அதே ராமனாதன் தன்னுடைய அபலை மனைவியின் இத்தனை கடிதங்களுக்கும் இரக்கங் காட்டினதாகத் தெரியவில்லையே. எனக்கு எத்தனை எத்தனை உரிமை மொழிகளைச் சொன்னார். என் பொருட்டு அவர் வடித்த கண்ணீர் தானே என் திரையிட்ட கண்களைத் திறந்து விட்டது. ஆனால் காலமெல்லாம் கண்ணீர் வடித்துக்கதறிக் கொண்டிருக்கும் தன் அபலை மனைவி மீனாவின் வாழ்வுக்குப் புத்துயிர் அளிக்க உணர்வில்லையே. இதயமற்ற பாவி அவர்! ஆம்; அவரை இப்போதே கண்டு, எப்படியும் அவர் மனைவியை ஏற்றுத் திரும்ப ஆவன செய்ய வேண்டும். அப்புறம் தான் ஆபீசெல்லாம். அப்பப்பா, இத்தனை நாட்களாக இந்த ரகசியத்தை மூடி மறைத்து விட்டாரே....'' என்று வீறுடன் மொழிந்த சிதம்பரம் மேலே தொடர்ந்து பேசத் தொடங்கின சமயத்தில், அவன் கையில் உறையிட்ட கடிதமொன்றைத் தபால்காரன் கொணர்ந்து நீட்டிச் சென்றான்.

''அன்புள்ள நண்பர் சிதம்பரத்திற்கு,

இந்தக் கடிதம் உங்களை—நம் நண்பர்களைக் கட்டாயம் வியப்பிற்குள்ளாக்குமென்பதை நான் அறிவேன். என்னை விசித்திரப் பிறவி என்றும் விடுவிக்கப்பட முடியாத, புரியாத புதிர் என்றும் கூடத் தூற்றுவீர்கள்.

அன்று நான் தங்களிடம் நீங்கள் உங்கள் மனைவியைப் புத்துயிர் பெறச் செய்ய வேண்டுமென்று எவ்வளவோ மன்றாடிக் கடைசியாக வெற்றியும் பெற்றேன். ஆனால் அதே சமயம் என் உள்ளம் எரிமலையாக, சூறாவளியாக மாறியதை யாரும் அறிந்திருக்க முடியாது. நான் என் மனைவியைக் கடந்த சில மாதங்களாக 'விலக்கி' வைத்திருந்த புதிரை யாரும் அறிய மாட்டார்கள். அவள் செய்த சிறு பிழை என்னுள் இமாலயப் பிழையாகத் தோன்றியது; நான் பேயாகிப் போனேன். அவளை ஒதுக்கினேன். எங்களிடைப் பெரும் பிளவு சுவரெழுப்பி நின்றது. அவளை—அவள் பெயரைக்கூட எண்ணிப் பார்க்க என் நெஞ்சம் சம்மதம் சொல்ல மறுத்து விட்டது. மனத்தின் புதிருக்கு உவமையே கிடையாதோ? ஆகையால்தானே நானே ஓர் புதி

ராகிப் போக நேர்ந்தது. என் மனைவியை அபலையாக்கிய அந்தரங்கத்தை என் மனதிலேயே புதை பொருளாக்கி விட்டேன். என் வினையா? அவள் வினையா? அவ்வப்பொழுது நீங்களெல்லாம் என் மனைவியைப் பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு ஏதேதோ பொய் சொல்லி தப்பித்து விட்டேன். அவள் செய்த ஓர் சிறு தவறு என்னுள் அப்போது பேயாகச் சுற்றி இதுவரை எப்படியோ என் வைராக்கிய வெறியைக் கெட்டிப்படுத்தி விட்டது. அவள் உயிரைப் பணயம்வைத்து எழுதிய கண்ணீர்க் கடிதங்கள் அத்தனையும்கூட என்னை மனித இதயம் கொண்டவனுக்க — மனிதப் பண்பு கொண்டவனுக்க வழி விடவில்லை. ஆனால் அன்று தாங்கள் தங்கள் துணைவி செய்த சிறு குற்றத்தை மன்னித்துவிட வேண்டுமென்றும் தங்கள் மனைவி ரேணுகாவை நீங்கள் மீண்டும் ஏற்றுப் புதுவாழ்வு தொடங்க வேண்டுமென்றும் உங்கள் மனைவியின் சார்பில் நான் கூறிய வாதங்கள் இதோ என் கண்களைத் திறந்துவிட்டன; என்னை அவை மனித மனம் படைத்தவனாக ஆக்கி விட்டன; மனிதனாகி விட்டேன்!

நான் அன்று உங்களிடம் உங்கள் இல்லாளின் பக்கம் வாதமிட்டு வடித்த அதே கண்ணீர் உங்கள் மனதை வெற்றி வழிக்கு மாற்றியது போல, அதே என் கண்ணீர் இந்த க்ஷணத்தில் என் மனைவியின் தரப்பில் தர்க்கம் செய்து என் மனச்சாட்சியை வெற்றி கொண்டு, என்னையும் என் பிரிய மீனாவுக்குரியவனாக்கி விட்டது! மரத்துப் போய்க் கிடந்த என் தார்மீக உணர்ச்சியும், அசட்டுக் கௌரவத்தினாலும் ஆத்திரத்தினாலும் அஸ்தமித்து விட்டிருந்த மனிதத் தன்மையும் அந்த சந்தர்ப்ப வேகத்தில் நான் பேசிய பேச்சினால் உதயமாகி என் வாழ்வையே ஒளி பெறச் செய்து, என் இதயத்தின் குரல் என்னைத் திருத்தி விட்டது. விந்தைதான்! அதுவே எங்கள் எதிர்கால வாழ்வுக்குரிய புது வளத்திற்கும் வனப்பிற்கும் ஆசிகூறட்டும். இனி என் மீனா பசுந்தளிர்! இதோ, இரவோடு இரவாக 'இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸி'ல் புறப்படுகிறேன். புனர் வாழ்வு பெற்ற மீனாவுடன் புது வாழ்வு பெற்ற நான் புத்தம் புதிய உலகிலே புதுயுகம் தொடங்க அங்கு ஓடி வருகின்றேன்!

மறந்து விட்டேன், பார்த்தீர்களா? வரும் போது என் மீனா, தங்கள் அன்பு ரேணுகாவையும் கையுடன் கையாகக் கைகோர்த்துக் கொண்டு தங்கள் முன் சமர்ப்பித்து விடப் போகிறுளாம்!

நண்பர் தியாகுவின் மண விழா என்றும் நம் இருவர் நினைவுகளிலும் பசுந்துளிராகக் காட்சியளிக்கும். ஆம்; அதுதானே நம் இருவரது விசித்திர மனங்களையும் மாற்றியமைத்து சருகாகிப் பட்டுப்போன நம் இருவரது மனைவியரையும் தளிராக்கிவிட ஏதுவாக அமைந்தது!

தங்கள் அன்பன்,
ராமநாதன்''

''ராமநாதன் இப்போதுதான் மனிதனாகியிருக்கிறார்; மீனா பாக்கியவதி!'' என்றான் சிதம்பரம் புதுப் பூரிப்புடன்.

பக்கத்துத் தெருக் கல்யாண வைபவத்தில் நாதஸ்வரக்காரன் பொழிந்து கொண்டிருந்த ஆனந்த பைரவியின் இன்பப் பண் காற்றில் தவழ்ந்து நண்பர்களிடையே அமுதச் சூழ்நிலையைப் பரிணமிக்கச் செய்து கொண்டிருந்தது!

★ பிச்சைக்காரர்கள் தொல்லையை ஒழித்துக்கட்ட பிச்சையிடாமல் இருந்தால் மட்டும் போதுமா? அந்தக் குரல் ஒரு புதிய தத்துவத்தைக் கற்றுத்தந்தது.................!

பரதேசிக் குரல்!

கி. கவிதை நேசன்

என்ன உலக மடா—இது
ஏழைக்கு நரகமடா

என்ற இசையின் ஒலி கேட்டு திரும்பிப்பார்த்தேன். அப்பாட்டுக் கருத்தின் பிரதிநிதியாய் அவன் வந்துக் கொண்டிருந்தான். அது மட்டுமல்ல "கற்றறிந்து பாடுபவனுக காணப்படவில்லையே, அவன் வாழ்வின் வரலாறு அவனை வாய் விட்டுக் கதற வைக்கிறதோ" என்று நம்புமளவிற்கு பாவத்தோடும், உணர்ச்சியோடும் உருக்கமாகப் பாடிக் கொண்டிருந்தான். அவன் சோற்றுக்காகப் படும் அல்லலை சோகச் சித்திரமாக்கிக் கொண்டிருந்தது அவனது உடலும், உருவமும். மருத்துவ அலுவலகங்களில் மாட்டப்பட்டிருக்குமே எலும்புக் கூட்டின் படம்; அதற்கும் அவனுக்கும் அதிக வித்தியாசம் இருக்க முடியாது. ஜீவனற்றுப் போன அவன் கண்கள் ஒளியிழந்தக் காரணத்தாலோ என்னமோ பார்வை குறைந்தவன் போல் தட்டுத் தடுமாறி தளர் நடை போட்டுக் கொண்டிருந்தான். உயிரற்ற விதிச் சுவர்கள் சினிமா விளம்பரங்களையேனும் உடையாகப் பெற்றிருக்கும். ஆனால் அவன் உயிரை சுமந்து கொண்டிருந்த அந்த உடலை கந்தலும், கருப்புமான சிறு துண்டு ஒன்றுத்தான் காப்பாற்றிக் கொண்டிருந்தது. அவனும் இந்நாட்டு பிரஜை தான்!

பலருடைய நல்ல மதிப்புரையை சம்பாதித்துக் கொண்ட அப்பாட்டு, உண்மையிலேயே அவன் பசிக்குப் பயன்படாது போயிற்று. அப்பாட்டை ரசித்துக் கொண்டு தான் போய்க்கொண்டிருந்தார்களே யொழிய, ரசித்தவர்கள் காலணுவால் கூட அவன்பசிக்கு கருணை காட்டவில்லை! போய்க் கொண்டே இருந்தார்கள்!

கல்லூரிக்கு நேரமாகிவிட்டபடியால் வேகமாக நடந்து சென்றேன். அவன் என் அருகில் வந்துவிட்டான். ஆம், கல்லூரிக்குச் செல்ல நான் அமர்ந்திருந்த மோட்டாரின் அருகேதான் வந்து நின்றுன்.

நான் விரும்பிய தமிழகத்தை எவ்வாறு உருவாக்குவது? எவ்வாறெல்லாம் மக்களை ஒன்று திரட்டுவது? என்றெல்லாம் திட்டம் தீட்டி சிந்தனை உலகிலே, பேராசைப் பெருமாளிகை எழுப்பி உலவிக் கொண்டிருந்த என்னை, எதிர்காலத் தமிழகத்தின் நடுவிலே நடமாடிக் கொண்டிருந்த என்னை, அப்பாவி, படுபாவி இப்பாழான தமிழகத்திலே கொணர்ந்து நிறுத்திவிட்டான், என்றெல்லாம் அவனை கோபித்துக் கொண்டேன். என்றாலும் அவன் மீது அனுதாபம் காட்டாமல் இருக்க முடியவில்லை.

உயிரற்று பேச்சற்று ஆடாமல் அசையாமல் நின்றிருந்தால் அவனை எல்லோரும் 'பிண ஓவியம்' என்றுதான் நம்பிவிடுவார்கள். ஆனால் அவனுக்கு உயிரும் வயிறும் இருக்கிறதே!

"ஐயாமாரே கஷ்டப்பட முடியாதவனுங்க, காலணா கொடுங்கையா"

எந்த ஒரு எண்ணத்தை என் உயிரனைய 'இலட்சியமென' போற்றி வந்தேனோ அந்த இலட்சியத்திற்கு சமாதிக்கட்ட வந்த யமனாக இருந்தது அவனது குரல்! பெற்றத்தாய்—அருமைத் தங்கை—அன்புத் துணைவி ஆகியோரின் ஆதரவாலும், அன்பாலும் வாழ்கின்ற என்னையே, எதன் பொருட்டேனும் இன்னலும், கவலையும் அலட்டிவிடுகிறதே! ஊரற்ற—உறவற்ற, அநாதையை, துன்பமும், துயரமும் துவண்டிடச் செய்து விடுமல்லவா; பாவம்!

என் இலட்சியத்தையும் மீறி கரம் காலணாவை கைப்பற்ற ஜோபியை துளாவிற்று. அன்பு 'இலட்சியத்தை'யும் மறந்துவிடச் செய்தது. ஆனால், தளர்ந்துவிடாதே என்று நினைப்பூட்டியது அறிவு. அன்புக்கும் அறிவுக்கும் பகைமையோ? எனவே ஜோபியிலிருந்து கரத்தை வெடுக்கென்று எடுத்துக்கொண்டு, அவனைப்பாராதவன் போல் பாராமுகமாய் இருந்துவிட்டேன். எனினும் அவன் என் அருகே வந்து கையேந்தினான். 'காலணாவும் இல்லை, காசும் இல்லை போடா' என்று நரசிம்ம அவதாரத்தை அவன்முன் காட்டினேன்: அவன் நடுங்கிவிட்டான். ஏமாற்றம் அவன் முகத்தில் ததும்பி நின்றது. பொறுமை இழந்த போலீஸ்காரர்கள் அவனை சில வினாடிகளில் அவ்விடத்தை விட்டு அகற்றிவிட்டார்கள்.

மற்றொரு நாள் எங்களூர் நகரசபைப் பூங்காவில் உட்கார்ந்திருந்தேன். அச்சமயம், 'கஷ்டப்பட முடியாதவனுங்க, தருமம் செய்யுங்கையா' என்ற குரல் கேட்டு என் 'இலட்சியத்திற்கு கல்லறை கட்ட அப்பையன் இங்கும் வந்துவிட்டானே என்று அதிர்ச்சியடைந்தேன். அங்கு கூடியிருந்தோரில் ஒருவர் கூட அவனிடம் ஒரு காசும் கொடுக்கவில்லை. அடுத்தபடியாக என்னை அடையப் போகிறானே என்ற அச்சம் அவ்விடத்தை விட்டு அகலத் தூண்டிற்று. எனினும் தைரியமாக உட்கார்ந்துகொண்டேன், கேவலம் ஒரு பிச்சைக்காரப் பையனுக்கா பயந்து விடுவது என்ற வீரத்தால்!

அவனைப் பற்றி சிந்திக்க வைத்தது அவன் திருஉருவம். அவன் வரலாறு? அதை யார் கேட்கிறார்கள். ஏன், நான் கூடத்தான். அப்படிக்கேட்டால் கூட கேட்பவர்க் கெல்லாம் அவன், பதில் கூறாமல் மௌனத்தை பதிலாகத் தந்ததை பல முறை நான் பார்த்திருக்கிறேன்.

"ரெண்டு நாளா சாப்பாடு இல்லிங்க, தருமம் செய்யுங்கைய்யா"

அவனது இலட்சிய கீதத்தை என்னிடம் வந்து இசைத்து நின்றான். நான் நிமிர்ந்தேன். என் பார்வையில் அலட்சியமும், அருவெறுப்பும் கலந்திருந்ததை அவன் கண்டதால் என்னமோ, "எல்லோரும் இல்லை என்னுட்டா எனக்கும் பசி இல்லாமே போகுமா" என்றான் துணிந்து. "பசி மனிதனை மிருகமாக்குகிறது" என்று எப்பொழுதோ படித்த நினைவு! ஆனால் பசி, அவனை மிருகமாக்கவில்லை! துடுக்குக்காரனாக்கி விட்டதே என்றுதான் எண்ணினேன்.

அவன் பேச்சால் என் 'இலட்சியம்' ஆட்டம் கண்டுவிட்டது. அடுத்த நிமிடம் புத்துணர்ச்சிப் பெற்றுவிட்ட புது மனிதனாகி விட்டேன். என் இலட்சியம் முட்டாள்தனமானது. முழு அறிவால் உருவாகாதது என்ற

முடிவுக்கு வந்துவிட்டேன். இருந்தாலும் பிச்சைக்காரனிடமிருந்தா இத்துடுக்கானச் சொல்லை கேட்பது, என்ற 'கௌரவம்' சினத்தை மூட்டி விட்டது. ஓங்கி ஓர் அறை கொடுத்தேன், அவன் கன்னத்தில். மறுகணம் அந்த எலும்புக் கூடு கீழே சாய்ந்துவிட்டது.

"பிச்சைக் கொடுப்போர் வாழும் வரை, பிச்சை எடுப்போர் வளர்ந்து கொண்டே இருப்பார்கள்" என்பதே எனது இலட்சியமாக இதுவரை இருந்து வந்தது! அந்த இலட்சியத்தை நிறைவேற்றினால் தான் பரதேசிக் குரல் சமுதாயத்திலே எழும்பாது, என்று உறுதி கொண்டிருந்தேன்! ஆகவே தான், பிச்சைக்காரர்களுக்கு காலணாவும் போடுவதில்லை—கருணையும் காட்டுவதில்லை நான்; இதயத்தில் கருணை எழும்பினாலும் 'இலட்சியம்' அதைக் கொன்று விடும்.

"எல்லோரும் இல்லை என்னுட்டா எனக்கும் பசி இல்லாமே போகுமா?" என்ற அந்த ஏழைச் சிறுவனின் சொல், என் இதயத்திற்கு மட்டுமல்ல, இந்த உலகிற்கே ஓர் அறிவுரையாக இருக்கிறதல்லவா?

பிச்சைக்காரர்கள் இல்லாமல் செய்ய பிச்சையிடாமல் இருந்தால் மட்டும் போதுமா? திருடர்கள் இல்லாமல் செய்ய தண்டனைகளை உருவாக்கிவிட்டால் மட்டும் போதுமா? பிச்சைக்காரர்கள்—திருடர்கள் ஆகியோரின் பசிக்குப் பரிகாரம், அவர்களது ஏழ்மையைப் போக்க ஏற்றதொரு திட்டம் உருவாக்காவிட்டால் உலகம் உருப்படுமா? இக்கருத்துத் தானே அப் "பரதேசியின் குரலிலே" ஆழ்ந்திருந்த அறிவுரை, தெளிவுரை எல்லாம்!

இந்த உண்மையை உணராததாலன்றோ, அந்தப் பரதேசியை—நிரபராதியை, கன்னத்தில் அறைந்தேன். என் செயலுக்கு வருந்தினேன். என்னை புது மனிதனாக்கிய அறிவு, பரதேசிக்கும் இருக்கிறதே என்று வெட்கமடைந்தேன். என் வருத்தமும், வெட்கமும் அனுதாபமாக உருவெடுத்தது. அவன் அருகே சென்று உட்காரவைத்தேன். காண முடியாத வெற்றியை கண்டுவிட்டவன் போன்ற மலர்ந்த முகத்தோடு காணப்பட்டான். என்னை நோக்கி அவன் இரு கரங்களும் கூப்பி நின்றன.

"பிச்சை எடுத்தே பொளைக்கனும் இன்னு. என்னைப் போல வங்க தலையிலே எழுதிட்ட ஆண்டவனே, நீ அழிஞ்சி போகக் கூடாதா, இன்னு ஆண்டவனிடம் நேரிலே சொல்லலாமுன்னு நினைச்சிருந்தேன். அந்த நினைப்பெ இன்னிக்கி தான் நீங்க ஈடேத்தினிங்க; உங்களுக்கு எனது நன்றிங்க" என்ற சொற்கள் அவன் உதடுகளிலிருந்து உதிர்ந்தன. அச்சொற்களோடு அவனது கண் இமைகள் மூடிக்கொண்டன. வாய் முணகவில்லை; மரக்கட்டையானான். தலை சாய்ந்துவிட்டது. வேதனையாலும், வியப்பாலும், ஆச்சரியமும் அதிர்ச்சியும் பெற்றேன். என் வீட்டு வாயிலை நான் அடைந்தபோது.

இனியொரு விதி செய்வோம் அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக்கு உணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

என்ற வானொலிப் பெட்டியின் குரல் எனக்கு வரவேற்புக் கொடுத்தது.

அழகும் அநுதாபமும்!

தோ. ந. வீரராகவன்

பக்கத்தில் படுத்திருந்த சாரதா தூங்கிக் கொண்டிருந்தாள். உண்மையில் அவள் தூங்கவில்லை என்பது ரமணிக்குத் தெரியாது. சற்று நேரம் அவள் முகத்தையே உற்றுப் பார்த்தான். அவனுடைய வாழ்வில் அவள் கலந்து மூன்று வருஷங்கள் ஆகி இருந்தன. இந்த மூன்று வருஷத்தில் அவளும் அவனும் ஒன்று கலந்து அன்றில் பறவைகளைப்போல அழகாக ஆடிப்பாடி அகமகிழ்ந்து வாழ்ந்து வந்தனர்.

அடிக்கடி சாரதா "இன்றுதான் உங்கள் கையைப் பிடித்தது போல இருக்கிறது. ஆனால் வருஷம் மூன்று ஆகிவிட்டது" என்பாள். அப்போது அவள் இதழில் மலரும் புன்னகை புது மலரைப்போல பூத்துப் பொலிவு தரும். அவன் அவளை ஆசையோடு பற்றி இழுத்து அவள் அதரங்களில் அன்பு முத்தம் தருவான்.

இது மூன்று ஆண்டுகளில் நடந்த ஒரு நிகழ்ச்சி.

இந்த நினைவு அவன் மனத்திரையில் லேசாக நிழலிட்டுக் காட்டின. அவளுடைய முகத்தை மறுபடியும் பார்த்தான். முத்து முத்தாக வியர்வைத் துளிகள் முகத்தில் அரும்பி இருந்தன. பக்கத்தில் மூடியிருந்த ஜன்னல் கதவை ஓசை படாதபடி மெல்லத் திறந்தான். மெல்லிய காற்று லேசாக உட்புகுந்தது. அந்த காற்றோடு காற்றாக ஒரு பெண்ணின் தேம்பி அழும் ஒலி அவன் காதில் வந்து விழுந்தது. அவன் மனம் சஞ்சலத்தால் குழம்பியது. பரபரப்பாக ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். தேய்ந்த பிறை நிலவின் ஒளியில் அங்கு மிங்கும் சில ஒளித்துண்டுகள் விழுந்து கிடந்தன. அவன் கண்கள் அழுகை வந்த திக்கைத் தேடின.

அது பக்கத்து வீட்டுக் கொல்லைப் புறம். ஒரு பழய பாழுங் கிணறு. அதற்கருகே நீண்டு வளர்ந்த ஒரு கருவேப்பிலைமரம். அதன் பக்கத்தில் துணி துவைக்கும் ஒரு மேடை. அதன் மேல் ஒரு பெண் உருவம் முகத்தை இரு கைகளாலும் மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தது. அவன் கண்கள் நிலைத்து நின்று அவளையே உற்று பார்த்தன. நிலவின் ஒளியில் அவள் மேனி முழுவதும் தெரியவில்லை. அவள் விசித்து விசித்து அழுவது மட்டும் அவன் காதுகளில் நன்றாக விழுந்தன. அவனால் மேலும் அங்கு நின்று கொண்டிருக்க முடியவில்லை. திரும்பி அவன் மனைவியைப் பார்த்தான். ஒரே பக்கத்தில் படுத்திருந்தவள் அப்போதுதான் புரண்டு படுத்தாள்.

அவன், அவள் எங்கு விழித்துக் கொள்வாளோ எனபயந்து பக்கத்துக் கட்டிலில் படுத்து உறங்குவது போல் பாசாங்கு செய்தான்.

பக்கத்து வீட்டிலிருந்து அழுகை ஒலி லேசாக தேய்ந்து மெல்ல இழைந்தபடி இருந்தது. அவன் நெஞ்சு வேதனையால் உருகி இளகியது.

படுத்திருந்த சாரதாவுக்கு அவனுடைய செய்கை சொல்ல முடியாத வேதனையை அளித்தது. அவன் அவளுக்காக ஏங்கித் தவிப்பதைக் கண்டு அவள் உள்ளம் சாம்பியது. பெண்ணாய் பிறந்து உற்ற கணவனின் உள்

என்பு வேறு பெண்ணிடம் இருக்க அவள் நெஞ்சம் புண்ணுகி புலம்புவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? அவன் உள்ளத்தை நிறப்பி உற்சாகமூட்டி என்றும் மாரு அன்புடன்தான் அவனை வைத்திருந்தாள்; அப்படி இருந்தும் அவள் வாழ்க்கையில் ஏன் இந்த விபரீதம்? சாரதா அழகில்லாதவளா? ரமணிதான் என்ன கண்ட கண்ட பெண்களையெல்லாம் பார்த்து காமுறும் ஒழுக்கங் கெட்ட காமுகனு? அப்படியும் சொல்ல முடியாதே! பின் ஏன் இந்த திடீர்க் குழப்பம்? மலரா முல்லையும், மடல் அவிழும் ரோஜாவும் வாங்கி அவள் கூந்தலில் சூடி மகிழும் ரமணியின் நெஞ்சம் கல்லா? ஐயோ! அந்தப் பூவின் மென்மை பெண்களுக்குத்தான் இருக்க வேண்டுமா? ஆண்களுக்கு மட்டும்....?'' அவள் உள்ளம் புலம்பியது.

* * *

ரமணியின் நெஞ்சில் எண்ண அலைகள் ஒன்றன் பின் ஒன்ருய் எழுந்து அலை பாய்ந்தபடி இருந்தன. ''சாரதாவுக்கு ஏன் என் மேல் இத்தனைக் கோபம்? அவள் விஷயத்தில் நான் கொஞ்சமாவது குறை படும்படி எந்த விதத்திலாவது நடந்து கொள்கிறேனு? என்னுடைய பார்வை மட்டும் கொஞ்சம் பக்கத்து வீட்டுப் பக்கம் திரும்பினுல் அவள் முகத்தில் கோபத்தின் சாயை எவ்வளவு பயங்கரமாகப் படர்கிறது. அவள் அழகான முகம் பார்க்க பயங்கரமாக சிவந்து விடுகிறதே! நான் அடுத்த வீட்டுப் பெண்ணைப் பார்த்து ஆசைகொண்டு அவள் அழகில் மூழ்கி கண்களால் காதல் மொழி பேசுகிறேனு? ஐயோ பாவம்! வாழவந்தவிடத்தில் அந்தப் பேதைப் பெண்ணுக்கு எத்தனைக் கொடுமை! மலரும் மணமும், பாலும் சுவையும் போல் சூழும் அன்பு தனக்குண்டு என்ற எண்ணத்தின் நினைப்பிலே மகிழ்ந்து மணக்கோலத்துடன் குதூகலமாக வீடு புகுந்த அந்த குடும்ப விளக்கிற்கு கிடைத்த பரிசு, குத்தும் அடியும், சூடும் சுடுசொல்லும் தானு?''

''நேற்றுமுன்தினம் வெளியே போய்விட்டு வீட்டிற்கு வந்தேன். சாரதா கீழே வேலையாக இருந்தாள். நான் சட்டையைக் கழற்றி கோட் ஸ்டாண்டில் மாட்டிவிட்டு ஒரு துண்டை எடுத்து வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு மாடிப்படி ஏறினேன். ''வீல்'' என்ற ஒரு பயங்கரமான சப்தம் கேட்டது. தடதடவென்று மாடிப்படியைத் தாண்டி மேலேறி அடுத்த வீட்டைப் பார்த்தேன். என்ன பயங்கரம்! அவளுடைய மாமி அவளைத் தூணில் கட்டிவிட்டு பழுக்கக் காய்ந்த கோலால் அவளுக்கு சூடு போட்டுக்கொண்டிருந்தாள். அவள் துடியாய் துடித்து புழுவாய் நெளிந்தாள். நான் செய்வதறியாது நிற்கதியாக நின்று கொண்டிருந்தேன். சற்றைக்கெல்லாம் அந்த பெண் பேய் கட்டை அவிழ்த்துவிட்டது. மூர்ச்சித்துக் கிடந்த அந்த அபலைப் பெண் மூர்ச்சை தெளிந்து அவிழ்ந்து கிடந்த ஆடைகளை சரி செய்துகொண்டிருந்தாள். கன்னத்தில் சிலுவை அடையாளமிட்டது போல் சூடு பட்டிருந்தது. என் கண்கள் கலங்கின.

இவ்வளவையும் எனக்குப் பின்னுல் நின்று சாரதா கவனித்துக் கொண்டிருந்தாள். என் கையை விசுக்கென்று பற்றி இழுத்து என் முகத்தைத் திருப்பி ''போதும் அவள் அழகைப் பார்த்து ரசித்தது. என்னைப் பாருங்கள். நான்தானே உங்கள் மனைவி'' என்று சொல்லி என்னைப் பிடித்திழுத்துக்கொண்டுகீழே இறங்கினுள். அதோடு அவள் என்னை விடவில்லை. என் மார்பில் சாய்ந்து கொண்டு தேம்பித் தேம்பி அழு

தாள். "ஏன் உங்கள் மனசு இப்படி சலனமடைகிறது? என்னைவிட அவள் எந்த விதத்தில் உயர்ந்தவள், எதற்காக அவளைக் கண்டு இப்படி உருகுகிறீர்கள்...."

என் கையால் அவள் வாயைப் பொத்தினேன். ஐயோ பெண் ஜென்மமே! பூவின் மென்மையும் புது மலரின் வாசமும் உங்கள் மேனிக்குத்தான் உவமைகளா? உங்கள் நெஞ்சத்தில் கொஞ்சங்கூட இரக்க மனோ பாவம் இல்லையா? அவளும் உன்னைப் போன்ற பெண் தானே! அவள் படும் அவதிக்கு ஒரு விடிவு வேண்டாமா?" இப்படி அவன் உள்ளம் ஏங்கித் தவித்தது.

2

திருமருகல் ஒரு அழகான ஊர். அந்த ஊரை வளைத்து அணைத்துச் செல்லும் ஆற்றின் அழகை, ஓடும் பஸ்ஸிலிருந்தே பார்த்து அனுபவிக்கலாம். அந்த ஆற்றின் மடியில் செல்வங் கொழிக்கும் செழிப்பான நிலங்கள் நிறைந்திருந்ததோடு அதை ஆண்டு அனுபவித்து வந்த பெருநிலக் கிழார்கள் பலர் இருந்தனர். அதில் பெரும் போக்கான நிலங்களை ஆண்டு அனுபவித்து வந்த குடும்பத்தில் பிறந்தவன்தான் ரமணி. சின்ன வயதிலேயே தகப்பனை இழந்து தாயின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தவன்; தந்தை இல்லாத காரணத்தால் தறுதலையாக ஊரைச் சுற்றாமல் படித்து பட்டம் பெற்று முன்னேற வேண்டுமென்ற ஆசையில் கும்பகோணத்தில் காலேஜில் சேர்ந்து படித்தான்.

அப்போது ஒருநாள் ஜல் ஜல் என்ற மாட்டின் சங்கை ஒலி குலுங்க ஒரு அழகிய வண்டி அவனைத் தாண்டிச் சென்றது. அதில் ஒரு அழகிய இளம் பெண் ஒயிலாக சாய்ந்தபடி அமர்ந்திருந்தாள். வயது பதினெட்டுக்குள்தான் இருக்கும். நல்ல வாளிப்பான தேகம். மாலைக் கதிரோனின் பொற் கதிர்கள் அவள் பளிங்கு மேனியில் பட்டு அவளை ஸ்வர்ணப் பதுமையாக்கியது. ரமணி அப்போதுதான் அவள் கண்களைப் பார்த்தான். அவளும் அவனையே கவனிப்பதை அறிந்து வெட்கத்தால் முகத்தை தாழ்த்திக் கொண்டாள். இது ஒரு நாள் நடந்த நிகழ்ச்சியாக இருந்தால் அவளை அவன் மறந்திருப்பான். மறுநாள் காலை கல்லூரி வாசலில் நுழையும்போது கட்டு புஸ்தகங்களை மார்போடு அணைத்தபடி அவனைத் தாண்டிச் சென்றாள். அப்போதுதான் அவளும் தன்னுடன் கல்லூரியில் படிக்கும் ஒரு பெண்ணழகி என்பதை தெரிந்து கொண்டான். அதற்குப்பிறகு சந்திப்பு வலுத்தது. காதல் மொழிகள் பேசி அவள் இதயத்தை இன்பத்தால் நிறப்பி அவளை தன்னவள் ஆக்கிக் கொண்டான். அவள்தான் சாரதா. அவன் அன்பு மனைவி, பக்கத்தில் படுத்து தூங்காமல் துவளும் அழகு மனைவி.

சாரதாவுக்கு இந்த நிலை ஏற்பட காரணம் என்ன? இது யார் செய்த குற்றம்? ஒன்றும் அறியாத அடுத்த வீட்டு அப்பாவிப் பெண்தான் காரணமா? ஐயோ பாவம்! புழுவாய் பிறந்தாலும் சுதந்திரத்துடன் பிறந்து மண்ணில் இஷ்டம் போல் ஊர்ந்து நெளிய உரிமையுண்டு. அவள் பிறந்த இடமோ ஏழமையின் குடியிருப்பு. "இவள் பிறந்த வேளை தர்த்திரியம் பிடிங்கித் தின்கிறது" என்று அவளை சிருஷ்டித்த தாயும் தந்தையுமே இடித்துப் பேசினார்கள். வாய் இருந்தும் ஊமையாய் கலங்கும் கண்களுடன் "நமக்கு நல்ல நாள் வராதா" என்று ஏங்கி இருந்தாள்.

அவளுடைய அழகுக்கு எவ்வளவோ பேர் காத்திருந்தது

உண்மைதான். மாற்றுக்குக் கூட புடவையில்லாமல் ஓட்டைக் குடிசையில் வாழ்ந்து வரும் அவளுடைய இளம் நலத்தை ஒரே இரவில் பருகிவிட பல இளைஞர்கள் முன் நின்றனர். தவறிப்போய் என்றோ ஒரு நாள் அவளுடைய முழுமதி போன்ற முகம் வாசல் படிக்கு வெளியே தெரிந்தால் போகும் ஊர் காலிகள் தங்கள் விஷக் கண்களால் அந்தப் பேரழகியின் பொங்கும் அழகைப் பருகி நெஞ்சில் போதையை ஏற்றிச் செல்வார்கள். இந்தப் பாவிகளுக்கு பயந்தே அவள் தலை காட்டாமல் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருந்து வந்தாள். அவள் தலையில் ஒரு நாள் ஒரு பெரிய பாராங்கல்லைத் தூக்கிப் போட்டான் அவ்வூர் காரியஸ்தன். கூண்டில் வளரும் பச்சைக் கிளியை எப்படியும் பிடித்து விடுவது என்று தீர்மானம் செய்து கொண்டு அபிராமி அம்மாளிடம் போனான் அவன். அவள் விதவை. புருஷனை இழந்து வெகு காலம் தன் இச்சைப்படி வாழ்ந்தவள். அவளுக்கு ஒரே பிள்ளை, பார்த்தால் வாந்தி வரும். வேலை தவறாமல் சாப்பிடுவது, வயல் வெளிகளில் நடக்கும் காரியங்களை பார்ப்பது, மாடுகளை கவனித்துக் கொள்வது, இதுதான் அவன் வேலை. அவனுக்கு வயது நாற்பதாகிவிட்டது. எங்கெங்கோ பெண் தேடினாள். யாரும் கொடுக்கவில்லை. ஐந்து வேலி நிலமிருந்து என்ன பிரயோஜனம்? அவனுடைய யானைக் காலையும், தொங்கிப் போன உதடுகள் வழியாக வெளியே எட்டிப் பார்க்கும் பற்களையும் பார்த்தால் யார்தான் பெண் கொடுப்பார்கள். அதிலும் அபிராமி அம்மாளின் நடத்தை ஊர் அறிந்ததாயிற்றே.

காரியஸ்தன் வந்து அவளிடம் நன்றாக தூபம் போட்டான். "அபிராமி உன் பிள்ளைக்கோ வயசு நாற்பதாகிவிட்டது. அவனுக்கு பெண்களின் மேலும் ஆசையில்லை. ஏதோ பெயருக்குத்தான் அவனுக்கு கல்யாணம் செய்ய வேண்டும். உனக்கோ வயசாகி விட்டது. உனக்குப் பிறகு அவனை கவனிக்க யார் இருக்கிறார்கள்? எப்படியாவது

கட்டையோ நெட்டையோ ஒரு பெண்ணைப் பார்த்து அவன் காலில் கட்டி விட்டால் அவனுக்கும் கல்யாணம் செய்தது போல் இருக்கும் உனக்கும் மருமகள் கிடைத்தது போலாகும்'' என்றான்.

அபிராமி அம்மாள் கண்ணை கசக்கியபடி ''நான் என்னடா செய்வேன். வயசான காலத்திலே ஏதோ பொங்கி வடிக்கிறேன். என் கண் இருக்கும் போதே அவனுக்கு ஒரு கட்டையை கட்டிப் போடலாமுனு தான் நெனைச்சேன். என்ன செய்றது, என் தலையெழுத்து'' என்றாள்.

''அபிராமி நீ இதற்கெல்லாம் கவலைப்படாதே! நான் இருக்கிறேன் பார்த்துக் கொள்கிறேன். நம்ப சுப்புவை உனக்குத் தெரியமா?''

''ஓ நன்றாகத் தெரியுமே! எப்படி வாழ்ந்தவர்கள் இன்றைக்கு சோற்றுக்கே வழியில்லாமல் கஷ்டப் படுகிறார்கள்''

''அபிராமி....அப்படி போனதினால் தான் அவன் சம்பந்தம் உனக்குக் கிடைக்கப் போகிறது''.

''என்ன?''

''ஆச்சரியப்படாதே. அவன் மகள் மூத்தவளை உன் பையனுக்கு பேசி முடிவு செய்துவிடுகிறேன். என்ன சொல்கிறாய்?''

''அடப்பாவி....ராஜாத்தியாட்டமா இருக்கும் அவளை நம் பிள்ளைக்கு கல்யாணம் செய்து வைக்கலாமா? அப்படி செய்தால் அவள் ஒரு நாள் வாழ்வாளா? ஒன்னு ஆற்றிலே விழுந்துடுவாள் அல்லது எவன் கூடவாவது ஓடிவிடுவாள்!''

''அபிராமி உனக்கு இவ்வளவு வயசாகியும் உலகந் தெரியலே! சோத்துக்கும் மானத்தை மூட துணிக்கும் வழியில்லாமல் கஷ்டப்படும் குடும்பத்தில் பெண் கேட்டால் அவர்கள் எப்படியும் கொடுத்துவிடுவார்கள். அதிலும் உனக்கு ஐந்து வேலி நிலமிருக்கிறது. அது ஒன்றே போதும், உன் பையனுக்கு பெண் கிடைத்துவிடுவாள். உனக்கு வீட்டுக்கு துணையும் கிடைத்துவிடும்.'' என்றான்.

* * *

அவள் மனசில் ஆசை முளையிட்டது. அது துளிர்த்துப் படர்வதற்குள் காரியஸ்தன் காரியத்தை முடித்து விட்டான்.

கல்யாணம் முடிந்து புக்ககம்வந்தாள். அவளை படாத பாடு படுத்தினாள் அவள் மாமி. சிலையாக இருந்தாலும் அதை கலையாகக் கருதி காட்சியில் வைத்து விடலாம். அவள் உயிரும் உணர்வும் நிறம்பிய இளம் பெண். எவன் கண்ணிலாவது பட்டு அவன் கருத்தைக்

நீரிழிவு

ஏழு நாட்களில்

குணமாகும்

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் நீரிழிவு (DIABETES) என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள் சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். அதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறு நீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்கு பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் **இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.**

50 வில்லைகள் கொண்ட

புட்டி 1-க்கு ரூ. 6-12-0

[பாக்கிங் தபாற் செலவும் இனம்]

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (U. M.)

தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா.

வீட்டிலேயே அச்சிடக்கூடிய பாக்கெட் பிரஸ் :— பெயர்கள், விலாசம், கடிதங்கள்

லேபில்கள், நிகழ்ச்சிகள் முதலியவைகளை வீட்டிலேயே வெகு அழகாக அச்சிடலாம். ஒவ்வொரு வீட்டிற்கும் அவசியமானது. நெ. 1 ரூ. 1-4-0 நெ. 2 ரூ. 2-4-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0, உயர்ந்த ரகம் ரூ. 3-8-0.

Big Size High Class Rs. 4-4 0.

தபால் செலவு அணு 1-8-0

உயர்தர கடிகாரங்கள்

ஸ்விஸ் மேக் 10 வருஷ உத்திரவாதம் 5 ஜுவல் க்ரோமியம் கேஸ் ரவுண்டு ஷேப் ரூ. 16. சிறந்தது ரூ. 16|8. நீண்ட சதுரம் க்ரோமியம் கேஸ், 7 ஜுவல் ரூ. 24. ரோல்டுகோல்டு 15 வருஷ உத்திரவாதம் 9 ஜுவல் ரூ. 28. சிறந்தது ரூ. 30. ஸ்பெஷல் 15 ஜுவல் ரூ. 27. அலாரம் டைம்பீஸ் ரூ. 10. சிறந்தது ரூ. 17.

தபால் செலவு அணு 1-8-0.

French Commercial Stores, (B-S-B.)

P. B. No. 12216. CALCUTTA. (5)

உமா

சந்தா விபரம்

வருட சந்தா

இந்தியா, இலங்கை ரூ. 3

வெளி நாடுகள் ரூ. 4

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

★

உமா

4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.

கவர்ந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம் அவளைப் பிடித்து ஆட்டியது. பெற்ற பிள்ளையோ ஒன்றுக்கும் உதவாத மூடமாக இருக்கிறது. இந்த சூழ்நிலையில் அவள் அழகின்மேல் ஒரு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது. எப்போது பார்த்தாலும் எதற்கெடுத்தாலும் "உன் அழகிலே கொள்ளி வைக்க" என்று திட்டுவாள். ஏதாவது சாமான்களை சற்று சப்தம் படும்படி வைத்துவிட்டால் ஓடிவந்து அவள் கன்னத்தில் இடிப்பாள். வேலை செய்துவிட்டு அயர்வு நீங்க முகத்தில் வழியும் வியர்வையை துடைத்துக் கொண்டு சரிந்து விழும் கூந்தலை கோதி முடிக்கும் போது "என்னடி சிங்காரிப்பு வேண்டியிருக்கு" என்று கூந்தலை கைகளால் பிடித்துக் குலுக்கி அவள் முதுகிலே பலமாக குத்துவாள். இத்தனை கொடுமைகளுக்கும் இலக்கான அப்பேதைப் பெண்ணின் அநுதாபத்திற்கு ரமணி இலக்கானான். இந்த அநுதாபம் அவனுடைய மனைவியை சஞ்சலத்தில் ஆழ்த்தியது.

3

அவனால் படுத்திருக்க முடியவில்லை. எழுந்தான். சற்று நின்று சிந்தித்தான். அவள் தேம்பித் தேம்பி அழுவது அவன் இதயத்தைப் பிழிந்தெடுப்பது போல இருந்தது. சாரதாவைப் பார்த்தான். அவள் முகத்தில் சொல்லொணாத சோகத்தின் சாயை படர்ந்திருந்தது.

மாடிப் படியை விட்டு இறங்கினான். தோட்டத்துக் கதவைத் திறந்தான். பக்கத்து வேலியைத் தாண்டினால் அடுத்த வீட்டுக் கொல்லைப்புறம். அவளுக்கும் அவனுக்கும் இடையில் இருப்பது ஒரு முள் வேலிதான். அதை மெல்ல அசைத்து அப்புறப்படுத்தினான்.

அழுகை ஒலி நின்றது, பயத்தால் அவள் உடல் நடுங்கியது. வார்த்தை வெளி வராததினால் அவள் வாய் குழறியது. அவளுக்குப் பக்கத்தில் அவன் நின்றான். மிகுந்த அநுதாபத்தோடு ஏதோ பேச வாய் எடுத்தான். அவள் உதடுகளை குவித்து விரலை வைத்தபடி ஜாடைகாட்டி, பேச வேண்டாமென்றாள். எங்கும் நிசப்தம் நிலவி இருந்தது.

அவள் கிணற்றுக்குள் இருந்து பேசுவது போல் மிக மெல்ல பேசினாள். "ஐயோ......நீங்கள் போய் விடுங்களேன்" என்றாள்.

"அப்படிச் சொல்லாதே! நீ ஒவ்வொருநாளும் படும் துன்பத்தை என்னால் பார்க்க சகிக்கவில்லை. எப்படியும் உன்னை இங்கிருந்து காப்பாற்றி உனக்கு விடுதலை அளிக்கிறேன்."

"ஐயோ....வேண்டாம், வேண்டாம். எனக்கு வாழ்க்கையிலேயே விடுதலை கிடையாது. எனக்கு ஒரே ஒரு விடுதலைதான் இருக்கிறது. அது சாவுதான். அதைத் தவிர எனக்கு வெறு வழியில்லை" என்றாள். அவள் கண்கள் நீரைப் பொழிந்து கொண்டிருந்தன.

அவன் மிக அநுதாபத்துடன் உள்ளங் குழைந்து அவள் கண்களைத் துடைத்தான்.

அவள் தீயை மிதித்தவள் போல துள்ளி நகர்ந்தாள்.

இரண்டு வீட்டுக் கொல்லைப் புறக்கதவுகளும் திறந்தன.

அபிராமி அம்மாள் பத்திரகாளிபோல ஓடிவந்தாள். "அடி பாவி மவளே—உனக்கு இந்தப் பழக்கம் எத்தனை நாளாய்! என் குடியை கெடுத்த சண்டாளி. பாசாங்கு செய்துப் பயந்தவள் போல நடந்து பக்கத்து வீட்டுக் காரனை கைக்குள் போட்டுக் கொண்டு........"

"ஐயோ......அத்தை...... நான் ஒன்றும் அவரை......"

"என்னடி அவரை துவரை" என்று சீறினாள். கிணற்றோரம் நின்றவளை தனது வலிவான கைகளால் பிடித்துக் கண்டபடி அடித்துப் புடைத்தாள்.

சாரதா அவளுக்கு முன்னால் வந்து நின்று கொண்டாள். "என்னடி.... உனக்கு வெறி பிடித்தால் அதற்கு எங்கள் வீட்டில்தான் கைவைக்க வேண்டுமா? சண்டாளி.... இப்படி மானங்கெட்டு அலைவதை விட உயிரை விட்டு விடலாமே!" என்று ஆத்திரம் பொங்க சீறினாள்.

"சாரதா நீ பெண்ணா பேயா?" என்று அலறினான் ரமணி.

"நான் பெண்ணுமல்ல, பேயுமல்ல; உங்கள் மனைவி. உங்களுடன் வாழ்க்கைப் பட்டதற்காக நான் செய்ய வேண்டிய கடமையைத்தான் செய்கிறேன். என்னை நன்றாக திட்டுங்கள். அடியுங்கள். ஆனால் நான் இருக்கும் வரை உங்கள் உள்ளத்தில் ஒரு சிறு இடத்தைக் கூட வேறு பெண்ணுக்காக கொடுக்க மாட்டேன்..." அவள் பெண் சிங்கம் போல கர்ஜனை செய்து கொண்டிருந்தாள்.

"அப்படியானால் உன் நெஞ்சில் கொஞ்சங் கூட இரக்கமில்லையா?"

"இருக்கிறது.... ஆனால் உங்களைப் போல ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக மட்டும் நான் இரக்கங் காட்ட விரும்பவில்லை. நேற்று நடந்ததை நீங்கள் நன்றாகப் பார்த்தீர்கள். அடுத்த வீட்டுக்காரன் தன் வயலில் வேலை செய்யும் ஒரு உழத்தியை மரத்தில் கட்டி வைத்து சாட்டையால் அடித்தான். அவளுடைய மார்பிலே தார்க் குச்சியால் குத்தி ரத்தக் கறை படுத்தினான். நீங்கள் அப்போது என்ன செய்தீர்கள். இது சகஜம் என்று சாதாரணமாய் இருந்து விட்டீர்கள். என் கலங்கிய கண்ணீரைத் துடைக்க நான் அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன். ஏன் உங்கள் உள்ளம் அப்போது கொஞ்சங்கூட இரக்கம் காட்டவில்லை? நீங்களே யோசித்துப் பாருங்கள். அப்போது அந்த உழத்தியிடம் நீங்கள் ஏன் அனுதாபம் காட்டவில்லை? அவள் உங்கள் நெஞ்சைக் கவரவில்லை! அதனால் தானே! நான் இப்படி எல்லாம் சொல்வதால் நீங்கள் தவறு செய்தீர்கள் என்ற காரணத்தை கற்பிக்கவில்லை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் மனிதனை தவறு செய்ய வைத்து விடும். அதிலிருந்து உங்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் நான் விழிப்போடிருந்தேன். ஆண்களெல்லாம் அழகிய மலரைத் தேடும் வண்ணத்திப் பூச்சியைப் போன்றவர்கள் தானா? அவர்கள் அறிவுக்கு என்றுமே விழிப்பு கிடையாதா...."

"சாரதா........போதும்........ போதும்" என்று அவன் பலமாகக் கத்தினான்.

திடீரென கிணற்றினுள் 'களுக்'கென்று ஏற்பட்ட ஒரு பெரும் சப்தம் எல்லோரையும் திகைக்கவைத்தது.

அந்தப் பெண் நின்றிருந்த இடம் சூனியமாக இருந்தது. அவள் இந்த உலகத் தொல்லைகளிலிருந்து விடுபட கிணற்றுள் கங்கா தேவியை அரவணைத்துக் கொண்டாள்.

"அடி பாவி...." என்று அபிராமி கத்தினாள்.

"ஐயய்யோ....என்ன இது...." என்று சாரதா அலறினாள்.

அந்த ஒரு வினாடியில் அவர்கள் இருவரும் மனிதத் தன்மை பெற்று விட்டனர்.

கிணற்றில் விழுந்தவளைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வையே இழந்து தன்னையே மறந்து பித்துப் பிடித்தவன் போல ஆகாயத்தைப் பார்த்தான் ரமணி.

ஞாபகச் சின்னம்

கோடங்குடி பாலு

அன்று ஞாயிற்றுக்கிழமை. நானும் ராஜுவும் வெளியே செல்வதற்கு பல திட்டங்கள் போட்டோம். நான் சினிமாவிற்குப் போகலாம் என்று யோசனை கூறினேன். எங்கள் இருவர் சகதர்மிணிகளும் வருவதாக போட்டியிட்டனர். முடிவில் செலவில்லாமல் கடற்கரைக்குச் சென்றோம்.

"என்னடா? எங்கேயாவது சினிமாவிற்காவது சென்றிருக்கலாம். அதுவுமில்லாமல் செய்துவிட்டாய்" என்று என் மேல் பழி சுமத்தினன் ராஜு.

"அதோ பார்! நம் டாக்டர் சேகர் வருகிறார். அவருடன் கொஞ்ச நேரம் பேசினேமேயானல், பொழுது போவதே தெரியாது" என்றேன்.

"ஏண்டா பசங்களா! சின்னஞ்சிறு வயதில் மனைவிமார்களை அழைத்துக் கொண்டு சினிமா கினிமா போவதுண்டு. நீங்கள் என்னடா வென்றால், கடற்கரையில் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களே என்று, கேட்டுக் கொண்டே வந்துசேர்ந்தார் டாக்டர் சேகர். அவர் எங்கள் குடும்ப டாக்டர். குடும்பத்தில் ஒருவராகவே எங்களுடன் நெருங்கிப் பழகுபவர்.

"என்ன செய்யறது டாக்டர், மாதக் கடைசி, பணம் வேண்டாமா? அது கிடக்கட்டும் இன்று ஒரு நல்ல கதை சொல்லுங்கள். கதை என்று சொல்லிவிட்டேனே, உண்மைச் சம்பவம், ஏதாவது சொல்லுங்கள். ஏன் என்றால் கதை ராஜுவுக்கு பிடிக்கவில்லையாம்" என்றேன்.

"ஆமாம். அவனுக்கு கதை எப்படிப் பிடிக்கும்? அவன் ஹாய்யா சகதர்மிணியுடன் சல்லாபம் செய்து கொண்டிருப்பான். அதை நீ கெடுத்து கதை கேள் என்றால் அவனுக்குப் பிடிக்குமா" என்றார் டாக்டர் கேலியுடன்.

"டாக்டர்! நீங்கள் சொல்லும் கதையை யாராவது நம்புவார்களா? நம்பும்படியாக ஏதாவது கதை சொல்லுங்கள்" என்றான் ராஜு.

"ராஜு! நீ நம்பினலும் நம்பு, நம்பாவிட்டாலும் போ; என் வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவத்தை சொல்லப் போகிறேன்." என்று கூற ஆரம்பித்தார்........

"சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்பு நடந்தது. அப்பொழுது நீங்கள் பிறந்திருக்க கூடமாட்டீர்கள். எனக்கு வயது இருபத்தைந்து. மெடிகல் காலேஜில் பட்டம் பெற்று வைத்திய தொழிலை ஆரம்பித்த புதிது. என் தந்தை ஏராளமான சொத்துக்களை வைத்துவிட்டு இறந்து விட்டார். என் தாயாரின் பராமரிப்பில் வளர்ந்து வந்தேன். என் தாயார் என் மீது சொல்லொணுத அன்பைப் பொழிந்தாள். ஒரே பிள்ளை என்பதற்காக அல்ல. என் அண்ணன் மணஞ் செய்து கொண்ட ஒரு வருடத்திற்குள் இறந்தார். அதே ஏக்கத்திலே என் தகப்பனும் உயிரை விட்டார். என்னை பராமரிப்பதற்காக அல்லது வேறு எதற்காகவோ என் தாயார் உயிரை வைத்துக் கொண்டிருந்தாள். பணக்காரன் வீட்டுப்பிள்ளை, என் இஷ்டத்தை தடுப்பதற்கு யாரும் கிடையாது. என் மீது உள்ள அன்பினல் என் தாயாரும் என்

போக்கிலேயே என்னை விட்டு வைத்தாள். எனக்கு எப்பொழுதும் புத்திமதி கூறுவதும், என்னை நேர்மையான வழியில் நடக்கச் செய்வதும், பாடங்களை படிக்க உதவியாய் இருப்பதும் என் ஆருயிர் நண்பன் ஹரிதான்.....''

''டாக்டர், உங்கள் நண்பன் ஹரி எங்கே இருக்கிறார்'' என்றான், ராஜு.

''போடா! நடுவிலே குறுக்கு கேள்வி கேட்காதே'' என்று கூறிவிட்டு மேலும் தொடர்ந்தார்....''என் தாயார் எனக்கு மணம் செய்விக்க ஆசை கொண்டாள். அது எல்லா தாயாருக்கும் ஏற்படும் சகஜமான ஆசை தான். ஆனால் இந்த விஷயத்தில் நான் என் தாயாருக்கு நேர் எதிராக இருந்தேன். கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்பதற்காக அல்ல, என் தாயார் நிச்சயித்த என் மாமனின் மகள் ரேவதியை மணம் செய்து கொள்ளமாட்டேன், என்றேன்.

ஒரு நாள் ''சேகர்! என் எண்ணத்தை நிராசையாக்காதே. நீ எப்படியும் ரேவதியை கல்யாணம் பண்ணிக் கொண்டு தான், ஆகவேண்டும்'' என்று கூறினாள் என் தாயார்.

''அம்மா! நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன். ஆனால் இந்த விஷயத்தை மட்டும் கட்டுப்படுத்தாதே நான் மாலதியைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன். அண்ணிக்கு வாக்கு கொடுத்து விட்டேன்.''

''சேகர் உன் மதனி ஒரு தொடைகாலி ஆயிற்றே—அவள் வம்சத்தில் போய் வேறு கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயா. அவள் நம் வீட்டிற்கு வந்தாள்; உன் அண்ணனை விழுங்கினாள். உன் அப்பாவை உருட்டினாள். அவள் வழியில் கல்யாணம் செய்து கொண்டால் நம் குடும்பமே அழிந்து போய் விடும்'' என்றாள் என் தாயார்.

''அம்மா! வீண் பழியை யார் பேரிலும் சுமத்தாதே, மதனி நம் வீட்டுக்கு வந்து என்ன சுகத்தைக் கண்டாள். வீணாக அவள் மனத்தை புண்படுத்தாதே. நான் மதனிக்கு கொடுத்த வாக்கு கொடுத்ததுதான். நான் மாலதியைத்தான் மணம் செய்துக் கொள்ளப் போகிறேன்'' என்றேன்.

''டாக்டர் உங்கள் மனைவியின் பெயர் மாலதி இல்லையே.



இது கதை தானே'' என்றேன் நான்.

''ஏய்! சும்மா இரு நடுவில் குறுக்கு கேள்வி கேட்காதே'' என்று தொடர்ந்து ஆரம்பித்தார்.

''கடைசியில் என் இஷ்டப்படி மாலதியை மணம் செய்து கொண்டேன்.''

''இது தான் உண்மை சம்பவமா டாக்டர். இது கதை கூட இல்லையே எல்லோர் வாழ்க்கையில் நடக்கும் சாதாரண சம்பவம்தானே! கல்யாணமாகி நீங்கள் சினிமா பீச்சுக்கு போவதை ஒரு கதை என்று சொல்லி பொழுதை வீணுக்கி விட்டீரே'' என்ருன் ராஜு.

''ஏண்டா! இன்னும் உன் அவசரக் குடுக்கைத்தனம் போகவில்லையே. இனிதாண்டா சம்பவம் ஆரம்பிக்கப் போகிறது'' என்ருர் டாக்டர்.

''என் மாமாவின் பெண் ரேவதிக்கு கல்யாணமாகி சிறிது காலத்திற்குள் விதவையாகி, யாரும் ஆதரிக்க வழியில்லாமல் எங்கள் வீட்டில் வந்து தஞ்சம் புகுந்தாள்.

என் மனைவி மாலதி வெகுளி, வெளுத்ததெல்லாம் பால் என எண்ணுபவள். கபடு சூது இல்லாதவள். நான் என் மாமாவின் பெண் ரேவதியுடன் சாதாரணமாக பேசுவதில்லை. அதுவும் நான் மணம் செய்து கொள்ள மறுத்த பிறகு பேசவா போகிறேன். ஆனுல் என் மனைவி, ரேவதியை மிகவும் நேசித்தாள். அவள் எப்பொழுதும் என் மனைவியுடன் இருக்க ஆரம்பித்தாள். என் மனைவி என்னை ''ரேவதியை கண்டு மிரளுகிறீர்களே அவள் என்ன புலியா-சிங்கமா'' என்று பரிகசிக்க ஆரம்பிக்கவே நான் ரேவதியுடன் சகஜமாக பேச ஆரம்பித்தேன்.

என் நண்பன் ஹரிக்கு ரேவதியின் மீது ஒரு பச்சாதாபம் ஏற்பட்டது. அவன் தீவிர தேசியவாதி. காந்தி மஹானின் கொள்கைகளை பின்பற்றுபவன். அடிக்கடி ''ஒவ்வொரு மாணவனும் ஒரு விதவையை மணம் செய்து கொள்ள வேண்டும்'' என்ற காந்தி மஹானின் கொள்கைப்படி தான் நடக்கப் போவதாக கூறுவது வழக்கம். அவன் ரேவதியுடன் பழகிய விதமும் அவள் அவனுடன் அன்பு கூர்ந்ததை பார்த்த போதும் ரேவதியின் வாழ்வு மறுபடியும் மலரும் என்று நானும் என் மனைவியும் சந்தோஷம் அடைந்தோம்.

ரேவதி என்னுடைய டிஸ்பென்ஸரி அறைக்கு அடிக்கடி வருவாள். ஏதாவது விளையாட்டாக—வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுச் செல்வாள்; இதைப் பற்றி என் மனைவியோ, ஹரியோ எந்த வித சந்தேகமும் படுவதில்லை. ரேவதியின் குழந்தையுள்ளம் அவர்களுக்கு நன்ருகத் தெரியும்.

இப்படி ஒரு நாள் ரேவதி என் டிஸ்பென்ஸரி அறையில் என்னுடன் பேசிக் கொண்டிருந்த போது திடீரென மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். இந்த எதிர்பாராத நிகழ்ச்சியில் ஒரு கணம் பிரமிப்படைந்த நான் சமாளித்துக் கொண்டு தரையில் கிடந்த ரேவதியை வாரி யெடுத்து மடியில் கிடத்திக் கொண்டு சிகிச்சை செய்தேன்.

சற்று நேரத்திற்குப் பிறகு அவளுக்கு நினைவு வந்தது. என்றாலும் உடனடியாக எழுந்து நிற்க முடியாத பலஹீனமாக இருந்ததால் அவள் என் மடியிலேயே கிடந்தாள். நானும் அவளுக்குச் சற்று தெளிவு வரட்டும் என்று பேசாமல் இருந்தேன்.

இந்த சமயத்தில் பின்புறம் ஏதோ சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தேன். அறையின் வாசற்படியில் என் மனைவியும், ஹரியும் நின்று என்னை விழுங்கி விடுபவர்கள் போல பார்த்துக் கொண்டிருந்தனர். இருவர் முகத்திலும் ஆத்திரக்கனல் வீசுவதைக் கண்டு நான் திகைப் படைந்தேன்.

''ரேவதிக்கு திடீரென்று மயக்கம் வந்துவிட்டது....'' என்று நான் சொல்ல ஆரம்பித்த போது ''மயக்கம் யாருக்கு உங்களுக்கா அவளுக்கா?'' என்று இடைமறித்துக் கேட்டாள் மாலதி. பிறகு விர்ரெனத் திரும்பி உள்ளே போய்விட்டாள். ஹரி சிறிது நேரம் எதைப் பற்றியோ சிந்தித்தான். பிறகு என்னைப்பார்த்து ''சேகர்........ இதைப்பற்றி ஆத்திரப்பட எனக்கு என்ன உரிமையிருக்கிறது; ஆனால் ரேவதியை நீ விரும்புவதைப் பற்றி என்னிடம் கூறியிருந்தால் -- நானே ஒதுங்கிக் கொண்டிருந்திருப்பேனே'' என்று கூறிவிட்டு வேகமாக வெளியே போய் விட்டான்.

எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

வெண்ணை திரளும் போது தாழி உடைந்ததுபோல, ரேவதியின் வாழ்வு மலர்ந்துவிடும்; என்றெண்ணி எவ்வளவோ மகிழ்ந்து போயிருந்த என்னை இந்த நிகழ்ச்சி பேரிடியாக தாக்கியது.

ரேவதியை அப்படியே விட்டு விட்டு ஹரியிடம் உண்மையைக் கூறி சமாதானப்படுத்துவதற்காக அவனைத் தேடி ஓடினேன். வீட்டில் அவன் இல்லை. பெட்டி படுக்கையுடன் அவன் எங்கோ புறப்பட்டுப் போய்விட்டதாகக் கூறினார்கள்.

மனமுடைந்து வீடு திரும்பிய போது வீட்டில் ரேவதியும் இல்லை. ''துயரங்களை நான் அனுபவிக்க வேண்டும், என்று என் தலையில் எழுதியிருக்கும் போது நீங்கள் அதை ஏன் மாற்ற முயற்சிக்க வேண்டும்? என்னைப் பற்றி மறந்துவிடுங்கள். நான் போகிறேன். ஆனால் எங்கே, என்று எனக்கே தெரியாது'' என்று அவள் எழுதிய கடிதம் மட்டுந்தான் அங்கேயிருந்தது....''

பிறகு அவர்கள் இருவரும் என்ன ஆனார்கள் என்றே எனக்குப் புரியவில்லை. என் வாழ்வில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி விட்டுச் சென்ற அவர்களது நினைவாகத்தான் என் இருகுழந்தைகளுக்கும் ''ஹரி—ரேவதி'' என்று பெயர் வைத்திருக்கிறேன்....'' என்று கதையை முடித்தார் டாக்டர்.

''உண்மையோ— பொய்யோ கதை பரவாயில்லை'' என்று எழுந்தேன் நான். சிரித்துக் கொண்டே மற்ற எல்லோரும் எழுந்தனர்.

நிலவே நீ வா!

நாமக்கல் ரா. பாலசுப்ரமணியன்

★

வாலிபத்தில் ருதுவான மலர்கள் எல்லாம்
வாசனையை அள்ளியள்ளி வீச, நானும்
நூலெடுத்துச் சரம் கோத்து மாலை யாக்கி
நேயருக்குப் பத்திரமாய் எடுத்து வைத்துக்
காலெடுத்து வாசலுக்குச் சென்றேன் வெய்யில்
கரையவில்லை. எப்பொழுது மறைந்து போகும்?
பாலதனின் வெண்மைநிற முகத்தைக் காட்டிப்
பளபளக்கும் ஒளிசேர்க்கும் நிலவே நீவா!

இரைதேடச் சென்றபெரும் பறவை யெல்லாம்
இருப்பிடத்திற் கேகும்நிலை கண்டேன். மற்றும்
இறைவாழும் கோயில்களில் மணி யடித்தார்
ஏற்றிவிட்டார் கோபுரத்தில் தீபம் தன்னை
கரைகாணுச் சோர்வெனினும் களிப்பு மல்கக்
காலைமுதல் உழைத்தவர்கள் இல்லம் செல்வார்.
"வருகின்றேன் செல்மீனே" என்ற அத்தான்
வந்திடுவார் வருவதற்குள் நிலவே நீவா.

இரத்தநிற நாக்கைப்போல் மனைவிளக்கின்
திரிச்சுடரும் நெளிந்தது என் உள்ளம் போல
உறியிலுள பசும்பாலை எடுத்து அடுப்பில்
உடன்வைத்தேன் காய்ச்சுதற்கு சீனி போட்டேன்
மரத்தட்டைக் கழுவிவைத்து மனையும் போட்டேன்
மறுபடியும் 'கறிவகை'யில் உப்புப் பார்த்தேன்.
"வரத்தவறேன் வெண்ணிலவு முளைக்கும் வேளை".
என்றுரைத்த தருணமிது நிலவே நீவா.

ஆங்கிலக் கல்வி

தமிழ் மட்டும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு ஆங்கில ஆரம்ப எழுத்து முதற் தொடங்கி ஒரே வருடத்தில் நான்காம் பாரத்திற்கொப்பான ஆங்கில அறிவையும், இடையில் கல்வியை நிறுத்தியவர்களுக்கு அது முதலும், தத்தம் இல்லத்திலிருந்து பிறர் உதவியின்றி பெறலாம். தொடர்ந்து கற்ருல் 2 வருடங்களில் மதராஸ் மெட்ரிகுலேஷன் பரீட்சையும் தேறலாம்.

S. S. L. C. Matriculation, இவைகளுக்கு ஒப்பான இதர பரீட்சைகளில் தேறியவர்களுக்கு பிரைவேட்டாகவே Intermediate தேறலாம். வயது கல்வி முதலிய குறிப்புகளுடன் விண்ணப்பிக்கவும்.

கேம்பிரிட்ஜ் காலேஜ் (U) திருவனந்தபுரம்—1

பாரிஸ் அழகிகள்

அழகிற் சிறந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை அப்படியே தத்ரூபமாகப் பலவகைப் படுக்கையறைக் கோலத்துடன் காண பிரமிக்க தக்கது,

24 வகை (Bromide) போட்டோ படங்கள் ரூ. 7.

36 கொண்ட முழுசெட் ரூ. 10.

தபாற் செலவு இலவசம். ஒவ்வொரு ஆர்டருடன் "பெண் இன்பம்" என்னும் புத்தகம் இனமாக அனுப்பப் படும்.

கர்ப்பத் தடை

ரப்பர் பாதுகாப்புக் கருவிகள்
(நீடித்து உழைப்பவை)

		ரூ.	அ.
ஆண்களுக்கு:—			
	ஒன்று	1	6
,,	மூன்று	3	12
பெண்களுக்கு:—	ஒன்று	1	12

(உபயோகிக்கும் முறையுடன்) தபாற் செலவு 1-2-0 தனி. ஐந்து ரூபாய்க்கும் குறைந்த ஆர்டருக்கு முன் பணம் தேவை.

வீனஸ் டிரேடிங் கம்பனி (U) P.B.No 1693, சென்னை-1

கிளிக்கூண்டு

ஜேசு

"ஐயா! நான் தச்சு வேலை செய்றவன். கிராமத்துல சரியான பொழைப்பு இல்லை. அதனாலே, இப்படி டவுனுக்கு வந்திருக்கேன். உங்க கடைக்கு பெட்டி, ராக்கை ஏதேனும் தேவையாயிருந்தா சொல்லுங்க. சுத்தமா வேலை செஞ்சி தர்ரேன்".

"அட ஏம்பா? இருக்கிற பெட்டி ராக்கைக்கும், அதுல இருக்கிற சாமானுக்குமே வியாபாரம் இல்ல. புதுசு என்ன வேண்டியிருக்கு? போய் வேற கடைகளைப் பாரு".

"சரியா சாப்பிட்டு ரெண்டு நாளாச்சுதுங்க".

"ஒனக்காவது சாப்பிடனுமேங்கிற நினைப்பு இருக்கு. எனக்கு அதுகூடக் கிடையாது. இந்தா, இந்த வெத்திலைசீவலை வேணுமின்னு போட்டுகிட்டு போ."

கண்ணீரை வெளியே விடுவோமா வேண்டாமா என்று யோசித்த தங்கப்பன், கடைக்காரன் தந்த வெற்றிலை சீவலை வாயில் போட்டுக் கொண்டு நகர்ந்தான்.

கிழக்கில் கிளம்பிய சூரியன், மேற்கில் விழுகிற வரையிலும் தங்கப்பன் அதனுடன் அலைந்து பார்த்தான். அவனுடைய ரம்பமும் உளியும், அந்தப் பழைய சாக்கு மூட்டையிலிருந்து வெளியே வரவேயில்லை. அன்று அவன் முழு பட்டினி!

சாயங்காலமாகிவிட்டது. சந்தைப் பேட்டைப் பக்கம் போனான். உலகம், வாழ்க்கை, நாகரிகம் எதைப் பற்றியுமே கவலைப்படாத மனிதர்கள் இருக்கிறார்களே, அவர்கள் அங்கே வழக்கம்போல கூடியிருந்தார்கள். ஊரிலுள்ள பிச்சைக்காரர்கள், முடிச்சு அவிழ்க்கிகள், மூட்டைத் தூக்கிகள், மட்டரகக் கூலிக்காரர்கள் எல்லோருக்கும் இரவு அடைக்கலம் தரும் இடங்களுள் சந்தைப் பேட்டையும் ஒன்றல்லவா! இதைத் தெரிந்துகொண்டு தானோ என்னவோ, தங்கப்பன் அங்கே போனான். அவன் அங்கே போகவேண்டிய அவசியமே இல்லை. ஆனால் எப்படியோ எதற்காகவோ போய் விட்டான்.

ஒரு பக்கம் பிச்சைக்காரக் கூட்டம். மறுபக்கம் கூலிக்காரக் கூட்டம். வேறொரு பக்கம் நரிக்குறவர்கள், தொம்பர்கள் கூட்டம், இன்னொரு பக்கம் நாய்கள் கூட்டம். இவர்களுக்கிடையில்

தங்கப்பன் ஒரு தூங்கு மூஞ்சி மரத்தடியில் தலைக்கு சாக்கு மூட்டையை வைத்து படுத்துக் கொண்டான்.

இருட்டிவிட்டது. பலரக பாஷையில் ஒரே சப்தம், ரகளை! கொழுந்து விட்டெரியும் தீயின் ஜுவாலை தெரிந்தது. குழம்பு வாசனையும் வந்தது. சாலை முக்குட்டில் இருந்த 'மெர்குரி' விளக்கின் வெளிச்சம் சந்தைப் பேட்டையில் லேசாக அங்கேயும் இங்கேயுமாக விழுந்து கிடந்தது. தங்கப்பன் படுத்திருந்த தூங்குமூஞ்சி மரத்தடி மட்டும் நல்ல வெளிச்சமாகவே இருந்தது.

தங்கப்பன் தன் இடது கையால் வயிற்றைத் தடவிப்பார்த்தான். வலது கையால் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். கண்களை மூடினான். நித்திரை அவனுடைய நினைவுக்கு அப்பால் வெகு தொலைவிலிருந்தது. ஆகவே, அது வரவில்லை. தங்கப்பன் சலித்துக்கொண்டு இமைகளைப் பிரித்தான். மீண்டும் 'மெர்குரி' வெளிச்சம்! தீ ஜுவாலை! மனிதர்களின் உருவங்கள்! அவைகளின் நிழலாட்டம்!

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, ஒரு குறவனும், அவனுடைய மனைவியும் அங்கே வந்தார்கள். அவன் தன் தோளில் வைத்திருந்த குருவிக் கூட்டைக் கீழே இறக்கினான். அவள் முந்தானைத் துணியால் மார்போடு வைத்துக் கட்டியிருந்த தன் குழந்தையை அவிழ்த்து வெளியே எடுத்தாள்,

"போ, இன்னைக்கு பொயப்பு நம்ப வவுத்திலே மண்ணை வாரி போட்டுட்டு. என்ன பண்றது? எம்புட்டு கயிடப்பட்டு இம்மாங் குருவிகளையும் புடிச்சோம். காலம்பறேந்து தெருத் தெருவாத் திரிஞ்சு கத்தியும் ஒருகாசு கெடைக்கல. உம், புள்ளைக்கு பாலக் கொடுத்துபுட்டு படு, நாளைக்குப் பாக்கலாம்."

குறவனுடைய பேச்சு தங்கப்பனின் காதில் விழுந்தது. அவனுடைய வாய் மூடித்தானிருந்தது. ஆனால் மனசுமட்டும் சிரிக்கத்தான் செய்தது.

'குருவிகளைப் பிடித்து, விற்று, தாய் வேறு குஞ்சு வேறாகப் பிரிக்கின்ற பாவியும் பட்டினி! கிளிக்கூண்டு செய்து அறியாத ஆசாரிக் குடும்பத்தில் பிறந்து அலைகின்ற அப்பாவியும் பட்டினி!. ஜீவஹிம்சை செய்கின்றவனும் பட்டினி! ஜீவகாருண்யக் கொள்கை கொண்டவனும் பட்டினி!. என்ன உலகம்?' என்று தங்கப்பன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

கூட்டுக்குள்ளிருந்த குருவிகள் 'கிச் மூச்'சென்று கத்தின. அந்த சப்தம், மரணதண்டனை விதிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்படும் நேரத்துக்காகக் காத்துக் கொண்டு, சிறைக்குள் கதறுகின்ற கைதிகளின் அழுகை போலிருந்தது தங்கப்பனுக்கு. விழித்துக் கொண்டேயிருந்த, குறவன் குறட்டை விட்டபிறகு, கூட்டிலிருந்த குருவிகளையெல்லாம் விடுதலைசெய்து வெளியே அனுப்பிவிடுவோமா என்று தங்கப்பன் ஒரு நிமிஷம் நினைத்தான். அதே நிமிஷம், அதே நினைப்பு மாறிவிட்டது. நாளைக்கும் அந்தக் குறக் குடும்பம் பட்டினி கிடக்க வேண்டுமே! குருவிகளின் விடுதலை பெரிதா? குறக் குடும்பத்தின் பசி பெரிதா? எது பெரிது? என்று யோசித்தான். எவ்வளவோ சிந்தனைச் சிக்கல்களுக்குப் பிறகு, அவர்களின் பசிதான் பெரிது என்ற தெளிவான தீர்மானத்துக்கு வந்தான். அந்தத் தீர்மானத்துக்கு அவனைக் கொண்டு வந்து நிறுத்தியது, குறத்தியின் எலும்பு மார்பில் ஒட்டிக் கிடந்த அந்தத் தோல் குழந்தைதான்.

'பறவைகளையும் மனிதர்களையும் படைத்த ஆண்டவனே இந்

தக் கொடுமையைப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கும் போது, நமக்கேன் இவ்வளவு அனுவசியமான அக்கரை' என்று இருந்து விட்டான். அப்படியே தூங்கியும் விட்டான்.

விடிந்தது, தங்கப்பன் விழித்தான். பக்கத்தில் படுத்திருந்த குறக்குடும்பம் புறப்பட்டது. நேற்று இரவு குருவிகளை விடுவித்திருந்தால், இன்று இவர்கள் எவ்வளவு துடித்துப்போவார்கள். தங்கப்பன் இப்படி நினைத்ததும், வழக்கம் போல அவனுக்கு கண்ணீர் வழிந்தது. சந்தைப் பேட்டைக் கூட்டம் சற்று நேரத்திற்குள் கலைந்து விட்டது. இனிமேல் இரவில் தானே அங்கு கும்மாளமும், கூத்தும், கொட்டமும். தங்கப்பன் சூரியனோடு சுற்றுவதற்காக நடைபோட்டான்.

சூரியன் உச்சியிலிருந்த ஒரு மணி! தங்கப்பன் தகிக்கின்ற அந்த வெய்யிலில் வீதியில் போய்க்கொண்டிருந்தான். அப்போது, ஒரு வீட்டில் அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. முதல் நாள் இரவு, சந்தைப் பேட்டையில் சந்தித்தானே, அதே குறவன் ஒரு அழகான கிளியை அதைவிட அழகான ஒரு பெண்ணிடம் கொடுத்துவிட்டு காசு வாங்கிக் கொண்டிருந்தான். தங்கப்பன் சூட்டைக் கூடப் பொருட் படுத்தாமல் அப்படியே சொரணையிழந்து நின்றுகொண்டிருந்தான்.

குறவனும் குறத்தியும் போய்விட்டார்கள். அந்தப்பெண் அழகிய கிளியை முத்தமிட்டாள். அது தங்கப்பனைப் பார்த்து 'கீச் கீச்'சென்று கத்திற்று. தங்கப்பன் அந்த வீட்டைப்பார்த்தான். அலங்காரமான இரட்டை மாடி வீடு! ஆனால் ஒரு மொட்டை மரத்துப் பொந்து தரும் இன்பம் இந்தக் கிளிக்கு இங்கே கிடைக்குமா? கிடைக்காது என்று தங்கப்பன் முடிவு செய்து கொண்டான். அப்போது அந்தப் பெண் அவனைப் பார்த்து, ''ஏன் இப்படி பார்த்துக்கொண்டு நிக்கிறே? நீ யார்?'' என்று கேட்டாள்.

''நான் ஆசாரி!''

''ஆ!, ஆசாரியா! அப்படின்னா உனக்குக் கிளிக்கூண்டு செய்யத் தெரியுமா?''

''செய்யத் தெரியும், ஆனால் செய்யமாட்டேன்''.

''ஏன்?''

''இது என் குடும்பத்துக் கொள்கை!''

''வேடிக்கையான கொள்கை! உம், அப்புறம்?''

''வேற வேலை ஏதாவது இருக்கா?''

''இதைத் தவிர வேறு இல்லை. இதைக் கேள், கிளிக்கூண்டு செய்தால் உனக்கு நிறைய காசு கிடைக்கும்''

''காசுக்காக என் கொள்கையை வித்துட மாட்டேன். எனக்கு வேண்டியது என் கொள்கைதான். காசை விட, காஞ்சி போன வயித்தைவிட, எதையுமேவிட எனக்கு என் கொள்கைதான் பெரிசு. அதை அழிக்கக் கூடிய வேலை எனக்கு வேண்டாம். நான் வர்ரேன்'' என்று சொல்லிவிட்டு தங்கப்பன் போய்விட்டான்.

அன்றும் அவன் அசல் பட்டினி! வழக்கம் போல இருட்டு வந்தது. தங்கப்பன் அதே சந்தைப் பேட்டைக்கு, அதே தூங்கு மூஞ்சி மரத்தடிக்குப் போனான். அங்கே அதேகுறத்தி அடுப்புமூட்டி பொங்கிக்கொண்டிருந்தாள். அதே குறவன் குழம்புக்காக ஒரு கபடமில்லாத புருவின் கழுத்தை அறுத்து அதன் தோலை உரித்துக் கொண்டிருந்தான்.

தங்கப்பனுல் தாங்க முடியவில்லை. இன்னும் சிறிது நேரம் அந்தக் கொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தால் அவனுடைய இருதயம் செதிள் செதிளாகி விடும் போலிருந்தது. ஆகவே, அங்கிருந்து புறப்பட்டு, ரயிலடிக்குப் போய் விட்டான்.

'கூட்ஸ் ஷெட்'டின் ஓரமாக இருந்த ஒரு ஆலமரத்தடியில் படுத்தான். அவனுக்குத் தூக்கம் வந்தது. ஆனல் அது அவனுக்குப் பிடிக்க வில்லை. கிளி, குருவிக்கூடு, குறவர்கள், புருக் கொலை, பொங்கல், தன்பட்டினி



மாடிவீட்டுப்பெண் கிளிக்கூண்டு செய்யச் சொன்னது, இவைகளைப் பற்றிய எண்ணங்களே அவன் மனசில் மண்டிக்கிடந்தன.

எப்போதோ எப்படியோ அவன் தூங்கி விட்டான்.

ஆலமரத்தடியிலிருந்து எழுந்தான். ஆகாயத்தின் கால்பகுதியில் சூரியன் இருந்தான். அப்போது மணி எட்டரை. அதுவரையிலும் தூங்கி விட்டிருக்கிருன். அவ்வளவு அசதி, பசிக்களைப்பு! பக்கத்திலிருந்த 'கூட்ஸ் ஷெட்'டின் ஓரமாக ஓடிக்கொண்டிருந்த பாதை வழியாக நடந்து வந்து கொண்டிருந்தான். அப்போது ஒரு கூட்ஸ் வண்டியில் மாடுகளும், குருவிக் கூடுகளும் ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தன. இதைத் தங்கப்பன் பார்த்ததும் கொஞ்ச நேரம் நிலை குலையாமல் அப்படியே நின்ருன். பிறகு என்ன நினைத்தானே, வெறிபிடித்தவன் போல வேகமாக நடந்தான்.

கிளி விலையாக்கப் பட்டதே, அந்த மாடி வீட்டுக்கு வந்தான். "அம்மா, அம்மா" என்று கூப்பிட்டான். உள்ளிருந்து ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் சட்டைப் பித்தானைப் போட்டுக் கொண்டு வந்தார். "என்னடா? என்ன வேணும்?" என்று கேட்டார். "கிளிக்கூண்டு செய்றவனுங்க, இங்க...." என்று தங்கப்பன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சர்க்கிள் இன்ஸ்பெக்டர், "வஸந்தா! வஸந்தா! இங்கே வா" என்று கூப்பிட்டார். கிளியைக் கொஞ்சிக் கொண்டு அழகி வஸந்தா வந்தாள். "கிளிக்கூண்டு கேட்டியே, இவன் அது செய்கிறவனும். அந்த சிவப்பு சட்டத்தைக் கொண்டு வந்து கொடு" என்ருர். வஸந்தா தங்கப்பனை ஏதோ கேட்க வாய் திறந்தாள். அதற்குள் அவள் அப்பா, "போம்மா, ஏன் நிக்கிறே?"

என்றார். வஸந்தா உள்ளே போய்விட்டாள்.

மணி ஒன்று !

கிளிக்கூண்டு உருவாகிக் கொண்டிருந்தது. தங்கப்பனின் நெற்றியில் வியர்வை அரும்பியிருந்தது. நெஞ்சத்தில் வேதனை மலர்ந்திருந்தது. வெறிகொண்டவன்போல கூண்டைச் செய்து கொண்டிருந்தான். அவன் குடலில் பசி கும்மாளமடித்துக் கொண்டிருந்தது. வஸந்தா தங்கப்பனையும் அவன் வேலையையும் கவனித்துக் கொண்டிருந்தாள். தங்கப்பன் வேலையை நிறுத்திவிட்டு நிமிர்ந்தான்.

"அம்மா! ரொம்பப் பசியாயிருக்கு. மயக்கம் வருது. முன்னடி ரெண்டணா கொடுங்க. பக்கத்துக்கடைத் தெருவிலே டீ குடிச்சுட்டு ஒரு நிமிஷத்துலே ஓடியாந்துடறேன்".

"டீ வேண்டாம். இரு நான் சாதம் போடுறேன்" என்று சொல்லிவிட்டு வஸந்தா உள்ளே போனாள். தங்கப்பன் அவளைப் பற்றியும் அவளிடம் இருக்கின்ற இரக்கத்தைப் பற்றியும் சிந்தித்து முடிக்கும் சிறிது நேரத்திற்குள் சாதம், குழம்பு இவற்றோடு வஸந்தா வந்தாள்.

மணி நான்கு !

கிளிக்கூண்டு முழு உருவம் பெற்றது. வஸந்தா அதைப் பார்த்து தன் பற்களை எல்லாம் காட்டி இளித்தாள். தங்கப்பனைப் பாராட்டிவிட்டு, கூலியாக ஒன்றரை ரூபாய் கொடுத்தாள். ரம்பத்தையும், உளியையும் சாக்கில் வைத்து கட்டிக் கொண்டு, கையில் ரூபாயோடு, மனசில் ரூபந்தெரியாத ஒரு நினைவின் நிழலோடு தங்கப்பன் படிகளைவிட்டு பாதத்தை பூமியில் பொருத்தினான். அப்போது 'கிரீச்கிரீச்'சென்று கிளி கத்திற்று. அந்த சப்தம், 'பாவி, பாவி' என்ற பொருளை தங்கப்பனின் செவிக்குள் புகுத்திற்று. அவன் அப்படியே தன் இரு கண்களையும் இருக மூடிக் கொண்டு போய்விட்டான்.

மணி ஆறு !

சந்தைப் பேட்டைக்கு தங்கப்பன் போனான். அங்கே அவன் தங்கு வானே, அந்தத் தூங்கு மூஞ்சி மரத்தடியில் ஒரே கூட்டமாக இருந்தது. அந்தக் கூட்டத்தின் உச்சியில் போலீஸ்காரர்களின் வர்ணத் தொப்பிகள் தெரிந்தன. தங்கப்பன் ஆவலோடு கூட்டத்துக்குள் நுழைந்தான். கிளி விற்றுனே குறவன், அவனே போலீஸ்காரர்கள் அடித்து, உதைத்து, குத்திக் கொண்டு கேட்டார்கள்,

''சொல்லமாட்டே? சொல்லமாட்டே? குழந்தை கழுத்திலே கிடந்த சங்கிலியை அறுத்தியா? அறுத்தியாடா?''

''ஆமாங்க, ஆமாங்க, அறுத்தேன், அய்யோ அறுத்தேன். என்னே அடிக்காதிங்க. செத்திடுவேன், செத்திடுவேன் ஐயையோ!''

''அப்படி வாடா வழிக்கு. அறுத்தியா? திருட்டுக் குறப் பயலே! முழியைப் பாரு. எங்கேடா சங்கிலி?''.

''இந்தக் குருவிக் கூட்டுலே இருக்குதுங்க.''

''எடுடா. எடுடா. திருட்டு ராஸ்கேல்! ஓங்களேயெல்லாம் ஒழித்துகட்டினுத்தான் பொம்புளேங்க கழுத்துல தாலியும் சங்கிலியும் தங்கும்.!''

குறவன் குருவிக் கூட்டிலிருந்து தங்கச்சங்கிலியை எடுத்துக் கொடுத்தான். மறு நிமிஷம், தங்கச் சங்கிலியை அறுத்த அவனுடைய கரங்களே இரும்பு விலங்கு இணைத்துப் பூட்டியது. போலீஸ்காரர்கள் அவனே ஜெயிலுக்கு இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

தங்கப்பனுக்கு யாரும் சொல்லாமலே விஷயம் விளங்கிவிட்டது. 'கிளி வியாபாரம் செய்யப்போன இடத்தில் குறவன் தன் குல வழக்கத்தைச் செய்திருக்கிருன்.' தங்கப்பன் தளர்ந்துபோன மனசோடு மரத்தடியில் உட்கார்ந்தான். பிறகு சாக்குமூட்டையின்மேல் சாய்ந்தான். அப்புறம் படுத்தே விட்டான்.

மணி பனிரெண்டு!

மாடிவீடு, கூண்டின் இடைவெளி வழியாக கிளி தன் கூர்மையான அலகை வெளியில் நீட்டிக் கொண்டு பேசிற்று.

''தங்கப்பா! எனக்கு சிறை அமைத்துத் தந்தவனே! கூண்டு செய்து கொடுத்தவனே! ஏன் என்னே அப்படிப்பார்க்கிருய்? கேவலம் ஒன்றரை ரூபாய்க்காக உயிரைவிட மேலான குடும்பக் கொள்கையைக் கொன்று விட்டோமே என்று நினைக்கிருய் அல்லவா! நினே, உன் நினைப்பு நியாயமானதுதான். உனக்கு தங்கப்பன் என பெயர் வைத்த உன் தந்தையின் ஆவி, உன் இருதயம் இரும்பாகிவிட்டதை அறிந்து அதோ அழுகிருர் பார். உன் பாட்டன், முப்பாட்டன், உன் வர்க்கத்தில் மடிந்த வயோதிகர்கள் எல்லாம் உன் ஈனச் செயலைக் கண்டு ஏங்கி ஏங்கி அழுகிருர்கள் பார்! கொள்கையைக் கொன்றுதான் பசியைப்போக்க முடியும் என்ற முடிவு உண்டான பிறகு, உயிர் உனக்கு எதற்கு? உன்னேயே சாகடித்துக் கொண்டு கொள்கையை சாஸ்வதமாக்கியிருக்கலாமே. சண்டாளா! ஒன்றரை ரூபாய் உன் பசியை எத்தனே நாட்களுக்குப் போக்கிவிடப் போகிறது என்பதைப் பார்த்து விடுகிறேன். அதோபார், என்னேப்பிடித்தவன் எதைப் பிடித்துக் கொண்டிருக்கிருன்? இரும்புக் கம்பிகளே; நான் பிடித்துக்கொண்டிருக்கிறேன் மரக்கட்டம், இதைச் செய்த நீகூட என்னுடைய நிலேமையையும், குறவனுடைய நிலேமையையும் சேர்த்து அடையப் போகிருய். என்னேச் சிறையில் தள்ளிய உன்னேயும் சிறையில் தள்ள ஒருவன் காத்துக் கொண்டிருக்

கிறான். அதுவரை நீயும் காத்திரு, கூண்டு செய்தவனே! கொள்கையைக்கொன்றவனே! கொடியவனே! காத்துக்கொண்டிரு, காத்துக்கொண்டிரு."

தங்கப்பன் துடித்தெழுந்து கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டான். எதிரே 'மெர்குரி' விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அது அவனை பார்த்து சிரிப்பது போலிருந்தது அவனுக்கு. ஏதோ ஒரு பயங்கர நினைவு அவனை ஆட்கொண்டது. எழுந்தான். சாக்கு மூட்டையைத் தலையில் வைத்துக் கொண்டு நடந்தான்.

'டங் டங்' கென்று இரண்டு முறைகள் மணிக்கூண்டு கடிகாரம் ஒலித்துவிட்டு ஓய்ந்தது.

சந்தைப் பேட்டையிலிருந்து புறப்பட்ட தங்கப்பன்எங்கெங்கோ சந்து வழியாகவோப் புகுந்து, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வீட்டிற்கு முன் வந்து நின்றான். வீதியில் நின்றுகொண்டு அண்ணாந்து மாடியைப் பார்த்தான். மாடி வராந்தாவின் உச்சியில் பச்சை விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அந்தப் பச்சைவிளக்குக்குப் பக்கத்தில் பச்சைக் கிளி அவன் அமைத்தானே சிகப்புச் சிறை, அதில் இருந்தது.

தங்கப்பனின் கண்கள் திரும்பின. வீட்டின் இடதுபுறச் சுவற்றில் கணுக்கள் அமைந்த ஒரு இரும்புக் குழாய் பதிந்திருந்தது. அது பூமியிலிருந்து மாடிக்குப் போயிற்று. தங்கப்பன் அதையே கொஞ்ச நேரம் கூர்ந்து பார்த்தான். பிறகு அதில் ஏறினான். கால் மணி நேரத்திற்குள் அவன் கால்மாடி வராந்தாவுக்கு வந்து விட்டது.

நடுங்கும் கரங்களைக் கிளிக் கூண்டின் அருகிலே போனான். கிளி அவனைப் பரிதாபத்தோடு பார்த்தது.

"கிளியே! என்னைக் கேவலமாக நினைத்துவிட்டாய், இப்பொழுது நான் செய்யப்போகும் காரியத்தால் எனக்கு வந்த கேவலம் போகப்போகிறது. அதே நிமிஷம், உன் சிறைவாசமும் நீங்கப்போகிறது. நீ சுதந்திரமாக சுற்றித் திரியப் போகிறாய். உன்னை விடுதலை செய்வதன் மூலம் உனக்கு நான் செய்த கொடுமை நீங்க வேண்டும். என் கொள்கை மீண்டும் நிலைபெறவேண்டும். இரண்டையும் ஏககாலத்தில் உன் விடுதலை ஒன்றினால்தான் முடிக்க முடியும். வா, வா, வர்ணக் கிளியே! என் வாழ்வின் லட்சியத்தைக் காப்பாற்றிய கண்ணே! வா."

தங்கப்பன் கூண்டைத் திறந்து கிளியைத் தொட்டான் அது 'கீச் கீச்' சென்று பலமாகக் கத்த ஆரம்பித்து விட்டது. அவன் அதை வெளியில் வீசினான். அது விடுதலை கீதம் பாடிக்கொண்டே வான வீதிக்குத் தாவிற்று. தங்கப்பன் ஒரு விநாடி நேரம் அதை வேடிக்கை பார்த்தான்.

அப்போது, பக்கத்து அறையில் படுத்திருந்த வஸந்தா விழித்துக்கொண்டாள். கிளியின் 'கீச் கீச்' சப்தம் விடுதலை! விடுதலை! என்ற சங்கீத முரசம் போலகேட்டது தங்கப்பனுக்கு. வஸந்தாவுக்கு திருடன்! திருடன்! என்ற அலறல் போல கேட்டது. வெளியில் வந்தாள். "ஐயோ! திருடன்! திருடன்" என்று கத்தினாள், வீடு முழுவதும் வெளிச்சமாகியது. சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் முரட்டுப் பிடியில் தங்கப்பனின் முடி சிக்கியது. "ஆ! நீயா?" என்றாள் வஸந்தா. தங்கப்பன் தலையைக் கவிழ்த்துக் கொண்டான். அந்தக் கவிழ்ந்த தலையை நிமிர்த்தி, கன்னங்களில் அறைந்தார் சர்க்கிள். "அடிக்காதிங்க அப்பா. அவன் கொள்ளைக்காரன் இல்லை, கொள்கை வெறி கொண்ட

வன்.'' என்று துடித்தாள் வஸந்தா. ''நீ பேசாம இரும்மா. கூண்டு செய்யும் சாக்கில் கொள்ளைத் திட்டத்தோடு வந்திருக்கான். பகலில் மாடியில் எதையடா பார்த்துட்டுப் போனே? ரௌடி ராஸ்கேல்!'' சர்க்கிள் அடித்தார். வஸந்தா துடித்தாள். கிளியை விடுவிப்பதற்குத்தான் தங்கப்பன் வந்திருக்கிறுன் என்பது அவளுக்கு நன்ருக விளங்கி விட்டது. அந்த விளக்கம் அவனை விடுவிக்க முடியவில்லை.

சிறைச்சாலை. குறவன் அடைபட்டுக் கிடந்த சிறை அறைக்கு எதிர்த்த அறையில் தங்கப்பன் தள்ளப்பட்டான். குறவனும், தங்கப்பனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். கிளியைப் பிடித்தவனும், அதற்கு கூண்டு செய்து கொடுத்தவனும் எதிரெதிரே சிறைச்சாலையில் இருந்தார்கள். அவர்களுடைய சிறை வாழ்வோடு சம்பந்தப்பட்ட பச்சைக்கிளி, சிறகடித்து பரந்த வானத்தில் பறந்து கொண்டிருந்தது.

'கீச் கீச்' சென்ற சப்தத்தைக் கேட்டு தங்கப்பன் திரும்பினுன். வராந்தாவின் வலது கோடியில், செயற்கை வர்ணம் பூசப்பட்ட சிகப்புக் கூண்டில், இயற்கையான பச்சை வர்ணம் படர்ந்திருந்த பசுங்கிளி அடைபட்டுக் கிடந்தது. 'சே! சிறைக்குள் சிறையா? எவ்வளவு கொடுமையான இருதயங் கொண்ட மனிதர் கூட்டம்! இன்பக்கிளியே! இரு! நான் விடுதலையாவதற்கு முன்பே உன்னை விடுதலை செய்து விடுகிறேன். ஒரு கிளியை விடுதலை செய்ததால் தான் எனக்கு இந்தச் சிறை. மறு கிளியை விடுதலை செய்வதால், எனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வேன்' என்று தங்கப்பன் தனக்குள் சொல்லிக் கொண்டு திரும்பினுன்.

'உமா'வின் மகிழ்ச்சி அறிவிப்பு!

அடுத்த (ஏப்ரல்) இதழோடு 'உமா'வுக்கு ஓராண்டு பூர்த்தியாகிறது. ஆகவே 'உமா' லட்சியப் பாதையில் ஒரு முக்கிய கட்டத்தைத் தாண்டுகிறுள்.

அழகிய மலர் உருவத்தில் எங்கள் மகிழ்ச்சி நிறைந்த நன்றியை தமிழ் மக்களுக்கு தெரிவித்துக் கொள்ள திட்டமிட்டிருக்கிறேம்.

அடுத்த இதழ் 'உமா'வின் வழக்கமான சம்பிரதாயப்படி, ஏராளமான பக்கங்களில் உயர்ந்த விஷயங்களைத் தேக்கி குறைந்த விலையில் ஆண்டு மலராக வெளியாகும்.

அதாவது **100 பக்கங்கள்** கொண்ட அழகு மலர்,

விலை நான்கு அணு தான்.

'உமா' மலர்களின் உயர்தரத்தைப்பற்றி அதிகம் கூறத் தேவையில்லை. அது உங்களுக்குப் புரிந்த விஷயம்.

விற்பனையாளர்கள் முந்திக் கொண்டு தேவைகளை அறிவிக்க வேண்டும்; தனிப்பட்டவர்கள் உடனடியாக சந்தாதாரராகச் சேர்ந்து நேரடியாக பிரதிகளைப் பெறலாம்.

'உமா' தபால் பெட்டி நெ. 1377. **சென்னை-1.**

வானொலிப் பேச்சு:

குறுக்கு வழியில் செல்வம்

ர. சண்முகம்

பொதுவாக மக்களுக்கு குறுக்கு வழியில் ஒருவிதப் பற்றும் பாசமும் இருப்பதுண்டு. இதற்குக் காரணம் உழைத்துப் பிழைப்பதில் உள்ள சோம்பலும், குருட்டு அதிர்ஷ்டத்தில் உள்ள மகத்தான நம்பிக்கையுமே. செல்வம் தேடும் பிரச்னையில் இந்தக் காரணங்கள் நூற்றுக்கு நூறு பொருந்தும்.

ஒரு சில அணுக்கள் செலவு செய்து அதன் மூலம் ஆயிரக் கணக்கில் பணம் பெற ஒரு குறுக்கு வழி இருக்கிறதென்றால் அந்த வழிப்பக்கம் கண்களை ஓட்ட யாருக்குத்தான் சபலம் ஏற்படாது? ஆனால் இதில் ஒரு வேடிக்கை; இந்தக் குறுக்கு வழி முயற்சியில் இறங்குபவர்கள் பிறகு அந்த வழியிலேயே ஆழ்ந்து, கையிலிருந்த அரை குறைப் பொருளையும் இழப்பதோடல்லாமல் அந்த வழியை விட்டு மீளவும் முடியாமல் திண்டாடுவது வேடிக்கையாக மட்டுமல்ல, பரிதாபமாகவும் இருக்கும்.

ஆனால் குறுக்கு வழியின் மீது வெறுப்போ, சலிப்போ அடைவதில் பயனில்லை. நாம் தெரிந்தோ தெரியாமலோ வாழ்வில் ஒவ்வொரு விநாடியும் குறுக்கு வழியில் தான் போய்க் கொண்டிருக்கிறோம். ஆயிரம் பேர் செய்யக் கூடிய வேலையை ஒரே ஒரு யந்திரம் இன்று செய்து விடுகிறது; எங்கோ ஒரு மூலையில் நின்று விசையை அழுத்தினால் ஊர் முழுவதும் விளக்கொளி பரவுகிறது. இப்படிப்பட்ட விஞ்ஞானக் கருவிகளெல்லாம் மனிதனின் குறுக்கு வழிச் சபலத்தின் உருவங்கள்தான். இவற்றை அடிக்கடி பார்ப்பதாலும், சிந்திப்பதாலும் குறுக்கு வழிகள் மீது இயற்கையாகவே மக்களுக்கு ஒரு கவர்ச்சி ஏற்படுவது இயல்புதானே.

குறுக்கு வழியில், பரிசுப் போட்டி போன்றவை மூலம், மற்றவர்களுக்கு செல்வத்தைத் தர தயாராக இருப்பவர்கள் அவர்களிடமிருந்தே குறுக்கு வழியில் பெரும் பொருளை திரட்டுகிறார்கள். இங்கே இரண்டு குறுக்கு வழிகள் இணைந்து வேலை செய்கின்றன.

இரண்டொரு நாட்களுக்கு முன்பு என்னுடைய பழைய நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். சுமார் பதினைந்து ஆண்டுகட்கு முன்பு பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள்.

பளப்பளப்பான மோட்டார் காரில் படாடோபமாக உடையணிந்து வந்து இறங்கிய நண்பரைப் பார்த்து நான் பிரமித்து விட்டேன்.

அந்தக் காலத்தில் இந்த நண்பர் பள்ளியில் எங்கள் வகுப்பில்

ஒரு காட்சிப் பொருளாக இருந்தார். உருப்பட முடியாத ஒரு மனிதனுக்கு உதாரணம் கூற வேண்டுமானல் ஆசிரியர்கள் நண்பர் பெயரைத்தான் குறிப்பிடுவார்கள். முன்னுக்கு வருவதற்கு வேண்டிய எந்தத் தகுதியும் அப்பொழுது அவரிடம் இல்லை.

அப்படிப்பட்டவர் அன்று உல்லாச புருஷனைக் காரில் இறங்கியபோது எனக்கு எப்படியிருக்கும்?

''அதிர்ஷ்டம்'' என்று தன் நிலைக்கு விளக்கம் கூறினர் நண்பர். இந்த நண்பருக்கும் குறுக்கு வழிதான் உதவி செய்திருக்கிறது. ஆனல் ஒரு விநோதம்; இவர் குறுக்கு வழியில் சென்று செல்வத்தை அடையவில்லை. செல்வந்தான் குறுக்கு வழியில் இவரை வந்தடைந்திருக்கிறது. யாரோ ஒரு உறவினரான செல்வந்தர் கடைசிக் காலத்தில் தன் சொத்துக்களை நண்பர் பெயருக்கு எழுதி வைத்து விட்டு இறந்துவிட்டாராம்.

நண்பரின் நிலையைக் கவனிப்பவர்களுக்கு செல்வத்தையடைய பிரமாத அறிவோ, திறமையோ தேவையில்லை என்றும், ஒன்று அதிர்ஷ்டம் இருக்க வேண்டும்; அல்லது ஏதாவது ஒரு குறுக்கு வழியைப் பற்ற வேண்டும் என்றும் எண்ணம் ஏற்படுவது இயற்கைதானே.

குறுக்கு வழிக் கவர்ச்சி குழந்தையாக இருக்கும்போதே தலை காட்டி விடுகிறது என்று கூறலாம்.

சாப்பிட மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கும் குழந்தையைப் பார்த்து. ''இப்போது நீ சாப்பிட்டால் உனக்கு மிட்டாய் வாங்கித் தருவேன்....'' என்று தாய் ஆசை காட்டுகிருள். மிட்டாயை அடைய குறுக்கு வழி, சாப்பிடுவது தான் என்று தீர்மானித்துக் கொண்டு குழந்தை சாப்பிடத் தொடங்குகிறது.

கொஞ்சம் வயது வந்த குழந்தைகளுக்கு குறுக்கு வழி நினைவு வேறு பாதையில் திரும்பும்.

தெரு வழியே போய்க் கொண்டிருக்கும்போது ''இப்பொழுது ஒரு மூட்டை நிறைய பணம் கிடைத்தால்.... அதை எப்படி எப்படி செலவிடலாம்....'' என்று சின்னஞ் சிறு வயதில் நானே எத்தனையோ முறை சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறேன். இப்படியே ''திடீரென்று ஒரு மோட்டார் கிடைத்தால்.... ஏரோப்பிளேன் கிடைத்தால்.... கப்பல் கிடைத்தால்....'' என்றெல்லாம் குழந்தைகளின் மனம் இனிய சிந்தனைகளில் லயித்து விடுவதுண்டு.

இம்மாதிரி சிந்தனைகள்தான் எதிர் காலத்தில் பெரியவர்களான பின்பு குறுக்கு வழியில் ஒரு பற்றுதல் வைக்கத் தூண்டுகிறது.

குறுக்கு வழியில் செல்வது தவரு? சரியா? என்பது ஒருபுறமிருக்கட்டும், இந்த வழி இன்று மனித வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட ஒரு கலை என்று திட்டமாகக் கூறலாம். மூன்று வயதுக் குழந்தை முதல், தம் அறுபதாம் வயதைக் கொண்டாடும் முதியோர் வரை இந்தக் குறுக்குவழிச் சிந்தனை இல்லாதவர்கள் கிடையவே கிடையாது.

ஏனெனில் செல்வத்துக்கு உலகத்தில் அவ்வளவு மதிப்பிருக்கிறது. கல்வி வேண்டுமா? புகழ் தேவையா? இதற்கு வேறு எந்தக் குறுக்கு வழியுமே தேவையில்லை. செல்வத்தை மட்டும் பெற்று விட்டால் போதுமானது. புகழும் கல்வியும் நம் காலடியில் வந்து விழுந்து கிடக்கும். இந்தக் காரணங்களால் தான் கல்வியையோ, புகழையோ அடைய வேண்டும் என்ற ஆர்வத்திற்கு இரட்டிப்பு மடங்கு வேகம் செல்வத்தை அடைவதில் மக்களுக்கு இருக்கிறது.

பரிசுப் போட்டிகள், பந்தயங்கள் மூலம் குறுக்கு வழியில் செல்வம் திரட்டுவது ஒரு புறமிருக்கட்டும். வேறு சில வழிகளிலும் சிலர் இறங்கிவிடுவர்.

ஒன்றும் புரியாத அப்பாவிகளை ஏமாற்றி அவர்களிடம் இருக்கும் செல்வங்களை கவருவது, பிறரை வஞ்சித்து, நம்பிக்கை மோசம் செய்து, பொருள் சேர்ப்பது, ஆகிய முறைகள் குறுக்கு வழியின் பயங்கரமான உருவங்களாகும். இந்தப் பயங்கர வழிகள் மனிதனுக்கு அறிவு தெரிந்த காலமுதற்கொண்டு இன்று வரை உலகில் நீங்காது நிலைபெற்று வருகிறது. இந்த வழியின் கொடிய தன்மையை மக்கள் உணர்ந்திருந்தாலும், இது தவறு என்று அடித்துக் கூற யாருக்கும் மனமிருப்பதில்லை. ஏனெனில் பெருஞ் செல்வம் குவிக்க வேண்டுமென்றால், அதற்கு இந்த முறைகள் மட்டுமே கை கண்ட மருந்து என்ற தவறான எண்ணம் எப்படியோ மக்களின் மனதில் நிலைபெற்று விட்டது.

தனிப்பட்ட முறையில் என்னுடைய அபிப்பிராயத்தைக் கூறுவதாயின் இந்தக் குறுக்கு வழிகள் மனிதரை பேராசைச் சிகரத்தின் உச்சிக்குக் கொண்டு போய், அங்கிருந்து அவர்களை அதள பாதாளத்தில் உருட்டித் தள்ளி விடும் அபாயகரமான வழி என்று தான் கூறுவேன். மனிதனது இயற்கையான உற்சாகத்தை இயல்பான முயற்சியை அடியோடு அழித்து, அவனை ஒன்றுக்கும் உதவாதவனாக ஆக்கும் ஒரு விஷ வித்துதான் இந்தக் குறுக்கு வழி. உழைக்க வேண்டும்; நாணயமாக, கண்ணியமாக வாழ வேண்டும்; நற்குணங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பன போன்ற மனித இனப் பண்பாட்டைக் குழி தோண்டிப் புதைத்து விட்டுக் கேவலம் பண வெறி பிடித்தலையும் பேயாக மனிதனை மாற்றும் விபரீத சக்தி தான் குறுக்கு வழி. மனிதனது நியாயமான தேவைகளை மீறி அனாவசியமும், ஆடம்பரமும் நிறைந்த சிக்கலான பாதையில் இழுத்துச் சென்று மனிதனை அலக்கழிக்கும் சக்தி தான் குறுக்கு வழிகள் என்றால் அது மிகையல்ல.

மனிதன் தன் வாழ்வுக்கு ஒரு சரியான வழி கிடைக்கவில்லை என்ற காரணத்தால் குறுக்கு வழியில் இறங்குகிறான் என்பது சோம்பேறி வேதாந்தமே தவிர வேறில்லை.

குறுக்கு வழியில் வெகு சுலபமாக, சீக்கிரத்தில் செல்வத்தைக் குவிப்பது ஒரு வேளை சாத்தியப்படலாம். ஆனால் அதற்காக எவ்வளவோ தவறான முறைகளைக் கையாள நேரிடும், பல தடவை மனச்சாட்சியை அடகு வைக்க வேண்டியிருக்கும்; நெருங்கிய நண்பர்களை வஞ்சிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். வீண் ஆசைகளும், சபல புத்திகளும் மனதில் குடிகொள்வதால் மனதில் அமைதியும் மகிழ்ச்சியும் குடி கொள்வது கடினம். இவ்வளவு எக்கச்சக்கமான சூழ்நிலையில் குவியல் குவியல்களாக செல்வத்தைச் சேர்த்து வைத்து என்ன பயன்?

நேர் வழியில் உழைக்கும் போது செல்வம் பெற காலதாமதம் ஏற்படலாம். தேவைக்கு மேற்பட்ட செல்வம் கிடைக்காமல் போகலாம். ஆனால் நேர்வழி நடப்பவர்களின் சூழ்நிலையில் அமைந்திருக்கும் நிம்மதி வேறு எங்குமே காண முடியாது.

குறுக்கு வழியில் செல்வம் தேட முயலும் எல்லோருடைய முயற்சியும் நிச்சயம் பலித்து விடுகிறதென்று சொல்லிவிட முடியாது. இம்மாதிரி முயற்சியில் நூற்றுக்கு ஒருவர்தான் வெற்றி பெறுகின்றனர். இந்த ஓரிருவருக்குக் கிடைக்கும்

குருட்டு அதிர்ஷ்டமும் அவர்களுடைய பெரு முயற்சியில் கிடைத்து விடுவதில்லை. எதிர்பாராமல் கிடைக்கும் ஒரு சந்தர்ப்பந்தான்.

இதைப் புரிந்துக் கொள்ளாத மக்கள் சிந்தனையிலும் செயலிலும் குறுக்கு வழி தாண்டவமாட, அதே வேலையாய் சுற்றியலைந்து வாழ்நாளை வீணுக்குகின்றனர்; கானல் நீரைப் பார்த்து ஏங்கும் இவர்களுடைய நிலை உண்மையாகவே அனுதாபத்துக் குரியதுதான்.

செல்வ பலத்தால் கல்வி, புகழ், செல்வாக்கு ஆகியவற்றைச் சுலபமாக தேடிக் கொள்ள வசதியிருக்கும்போது செல்வத்தைக் குறுக்கு வழியில் சம்பாதிப்பதில் தவறென்ன என்று ஒரு சந்தேகம் பொதுவாக ஏற்படலாம். நியாயமான முறையில் பாடுபட்டுச் சேர்த்த சிலருடைய செல்வம் மோசடிக்காரர்களின் சூழ்ச்சிகளால் கைமாறிப் போய்விடுவதும் உண்டு. இப்படி உண்மையாகப் பாடுபட்டுச் சேர்த்த செல்வமே நாசமாகும்போது செல்வத்தைப் பெற எந்த வழியைப் பிடித்தால்தான் என்ன? என்றும் கேள்வி எழும்.

செல்வத்தின் ஆதரவால் கல்விமான்என்றுபெயரெடுத்து விடலாம். ஆனால் கல்வி நம்மை வந்தடையும் என்று எதிர்பார்க்க முடியுமா? வேண்டுமானால் 'கல்விமான் - அறிவாளி' என்றெல்லாம் வேஷம் போடலாம். பணத்தின் துணையால் மட்டும் கல்வியையோ, அறிவையோ நிச்சயம் பெற முடியாது. பிறரது புகழ்ச்சியை சுலபமாகப் பெறலாம். அந்தப் புகழ்ச்சி வெறும் போலித்தனம் நிரம்பியதாகத்தான் இருக்கும். நம் கண் முன்னால் நம்மை புகழுகிறவர்கள், நமக்குப் பின்னால் தூற்ற மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? மேலும் அந்த புகழ்ச்சிக்கூட நம்மிடம் பணம் இருக்கும் வரைதானே! பிறர் விரும்பும்போதெல்லாம் பணத்தை வாரி வீசும்வரைதானே! செல்வத்தால் கிடைக்கும் இந்த ''நாடகராஜா''ப் பட்டத்தால் யாருக்கு என்ன பிரயோசனம்?

நியாய முறையில் பெற்ற செல்வம் குறுக்குவழி மோசடிக்காரர்களிடம் சிக்கி விடுகிறது என்பதும் இத்தகையதுதான். சில நல்ல செயல்களே சில சமயம் தீமையான பயனைத் தந்து விடுவதுண்டு. ஒரு தடவை ரயில் விபத்து நடந்து விட்டது என்ற காரணத்தால் ரயிலையே பகிஷ்காரம் பண்ணி விடுவது போன்றதுதான் இந்த விஷயமும். எப்பொழுதாவது நடைபெறும் சில விஷயங்களை வைத்துக் கொண்டு எந்த ஒரு தீர்மானத்திற்கும் வந்துவிடக் கூடாது.

மோசடியாகப் பிறர் செல்வத்தை அபகரிப்பவருக்கு செல்வம் கைமாறும் போது அது ஒரு பெரிய வெற்றி போலத் தென்படலாம். ஆனால் கை மாறிய உடனே அவனுக்கு கிலி பிடித்துப் போய்விடும். தான் கையாண்ட வழியையே பின்பற்றி வேறு யாராவது தன்னை ஏமாற்றிவிட்டால்....? ஆகவே கிடைத்த செல்வத்தைக் கொண்டு சுக வாழ்வு வாழ்வதை விட்டு அவன் ஒவ்வொரு வினாடியும் பயந்து பயந்து சாவான். உற்றார் உறவினர், நண்பர்கள்—ஏன், மனைவி மக்களைக் கூட நம்ப அவன் மனம் இடந்தராது. இப்படிப்பட்ட வாழ்வுதான் நமக்குத் தேவையா?

எந்த வழியில் பார்த்தாலும் குறுக்கு வழியில் செல்வம் பெற எடுத்துக் கொள்ளும் முயற்சி சரி என்றே படவில்லை.

[அகில இந்திய ரேடியோ சென்னை நிலைய அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டது.]

ச.செந்தில் வேலன்

கலை

அதிகாலையிலே அருணனின் வரவு கண்டு அழகுச் செந்தாமரை இதழ் விரித்து இன்முகங் காட்டுகிறது. அழகு கூத்தாடுகிறது அந்தப் பொழிலில். இயற்கைக் காட்சியின் எழிலை ஏட்டிலே தீட்ட முனைந்தான் ஒருவன். அதன் முடிவு, கண் முன் காட்சியளித்தது. உண்மையிலே அங்கே பொழிலும், செந்தாமரையும் இருப்பது போல்! அந்தக் காட்சியின் பிரதிபலிப்புக்குப் பெயர் கலை. ஏட்டிலே தீட்டியவன் கலைஞன்.

நதிக்கரையிலே, சிற்றிடைதனில் சிறுகுடம் ஏந்தி குறுநடை போட்டுச் சென்ற நங்கையினைக் கண்டான். அதை—அந்தக் காட்சியை ஏட்டிலே ஏந்தினான். அங்கே அவள் ஓவியமாக காட்சியளிக்கவில்லை; பேசும் பொற்பாவையாகக் காட்சியளித்தாள். அதை மக்கள் மன்றத்திலே, அவர்களின் மனத்தில் பதிய வைத்தான். அதற்குப் பரிசு, அவனுக்கு 'கலைஞன்' என்ற பட்டம்! இப்படியாக வளர்ந்தது கலை; வாழ்ந்தது கலை! இன்றல்ல; ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன், இறந்து போன நாட்களை எட்டிப் பிடித்தால், அதன் உண்மை தெள்ளிதின் விளங்கும். இன்று கலை மணம் கமழும் கோவில்கள் பண்டைய தமிழரின் எண்ணத்தை வண்ணக் காவியமாகக் காட்டுகின்றன. அவற்றின் சிற்பங்கள் நம்மோடு பேசுகின்றன. அந்தப் பேச்சிலே, சிரிப்பு, சிந்தனை, அழுகை, துக்கம், சோகம் அத்தனையும் தவழ்கின்றன. ஆகவே "கலை"யின் கதையை ஈண்டு காணுவோம்!

கலை, நாட்டின் எண்ணத்தை, செயலை, உயர்ச்சியை, முன்னேற்றத்தை, சரிதத்தை அத்தனையையும் எடுத்துக் காட்டும். பழந்தமிழ் மக்கள் கலையைத் தமது உயிரென மதித்து ஒழுகினர். அவர்கள் வாழ்வில் கலை மணம் பூத்துக் குலுங்கியது; அவர்கள் கலையில் உண்மையைக் காட்டும் உயிரும், ஒளிவிடும் உணர்ச்சியும் மிளிர்ந்தன. கன்னித் தமிழ் நாடெங்கும் கலை மணம் குளிரிளந் தென்றலைப் போன்று பரவியது; பரவச மூட்டியது. மதியுடை மன்னரும் மக்களும் கலையைக் காத்து வளர்த்தனர். அவர்கள் கலையில் இறைவளம் இலங்கக் கண்டார்கள். ஆனால் இன்று....! இன்பமூட்டும் இயற்கை தவழும் எழில் சித்திரங்களை நாம் காண முடியவில்லை. கண்டாலும் அங்கே ஒளி சிந்தும் எழிலைக் காண முடிவதில்லை. அவர்களின் கலைத் திறத்தை செல்லரித்த ஏடுகளிலும், பாழடைந்த கோயில்களிலும், மாசுபடிந்த மாடங்களிலும், நிலை குலைந்து நிராதரவாய் காட்சி தரும் கூடங்களிலும், வனத்திடையே

தோன்றிய வண்ணக் குகைகளிலும் காண்கின்றோம். இந்த நிலை ஏன்...? சிந்திக்க வேண்டாமா நாம்?

கலை வாழ்க்கையின் நிழல்; உண்மையின் பிரதிபலிப்பு! அரும்பு முல்லை அழகுக் கலை; காவியத்திலும் கவினுறு ஓவியத்திலும் இயல் கலை; யாழ் ஒலியிலும், குழல் ஒலியிலும் இன்பமூட்டும் இசைக் கலை; ஆட்டத்திலும் நடனத்திலும் களிப்பூட்டும் கூத்துக்கலை; இது மட்டுமா....?

இறைவனே ஒரு கலைஞன், இவ்வுலகம் அவன் படைத்த கலைக் கூடம்! படைப்புகள் யாவும் கலைமணம் கமழும் கருவிகள்....!

வானம்பாடிகள் உலவும் வானுயர் மலைகள், அவைகளில் வழிந்தோடும் வெண்ணருவிகள்! வனப்பு மிகுந்த வனம்—அவைகளிடையே "சல சல" என சலங்கை ஒலி கொட்டினாற் போலப் பாய்ந்தோடும் பாலாறுகள்! கோல வனப்பின் நீல வானம் – எழில் முகம் காட்டும் ஒளி நிலா! எழில் மிக்க பொழில்—இதழ் விரித்து இன்முகம் காட்டும் செந்தாமரை! மாலையில் மயக்கும் சோலை—மந்த மாருதத்தை அள்ளி வீசும் குளிர் இளந்தென்றல்! கலங்களைப் பாழ்படுத்தும் ஆழ்கடல் — அவை அள்ளித் தெளிக்கும் அழகு முத்துக்கள்! காலையில் களிப்பைத் தரும் கதிரவன் — அவன் வரவு கண்டு விரிந்து காணும் நம் இதயத் தாமரை, ஆகிய அனைத்தும் விதவித அழகு மிளிரும், அறிவு ஒளிரும் படைப்புகள். முடிவாக இந்த வையமே தென்றல் வீசும் இன்பப் பூங்கா — அதில் கலை மணம் காட்டும் மலர்கள் நாம்!

இன்று எங்கும் கலை; எதிலும் கலை! கலை மணம் கமழாத இட

மில்லை. இன்று வரவேற்பதில் கலை; வணக்கம் செலுத்துவதில் கலை; பேச்சிலும் மூச்சிலும் கலை; நடையிலும் உடையிலும் கலை; செயலிலும் துயிலிலும் கலை! எங்கெங்கு நோக்கினும் ஒரே கலைமயம். அதைச் சீர்தூக்கிப் பார்த்திடின் ஒரே தலை மயக்கம்!

பழந்தமிழர் கலையைத் தலையாகப் போற்றினர். ஆகவே தான் அவனியில் அறுபத்தி நான்கு கலைகள் உண்டென்று கலைத் துறையை வகுத்துள்ளனர். ஆனால் தமிழில் முதன்மை பெற்றவை மூன்று கலையேயாம் அவை இயல், இசை, கூத்து, என்பனவாம். 'முக்கலை சொல்லும் முத்தமிழ்' எனப்படுவதும் அதனால் தானே! தூய மனத்தில் பொங்கி வருவது இயல் கலை; தூய வாயின் முழக்கம் இசைக் கலை; தூய மெய்யின் இயக்கம் கூத்துக் கலை!

கலை என்னும் காந்தம் இதயம் என்னும் இரும்பினை ஒன்று கூட்டும் சக்தியுடைத்தா யுள்ளது. இன்னும் விரிவாக, விளக்கமாகக் கூற வேண்டும் எனில், சிதறிய இதயங்களைப் பற்றி இழுத்து, சிந்தையைச் சிதற விடாமல் ஒருமுகப் படுத்துவதே கலை. ஆட்டக் கலை, அதாவது நடனக்கலை மனித வர்க்கத்தின் முதற் கலை! நடனத்தை அபிநயம் மிளிர அழகுற ஆடும் பொழுது நாம் நம்மையே மறந்து விடுகிறோம். நாம் அவவளவு தூரம் அதில் சிந்தையை பறி கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. அப்போது நாம் இன்ப வெள்ளத்தில் நீந்துவது போல் இருக்கும். குமுறும் உள்ளத்தை குணப் படுத்துவது இசைக் கலை; கொந்தளிக்கும் மனத்திற்கு சாந்தியளிப்பது சங்கீதக் கலை. இசையின் இன்சுவையில் நாம் மெய்மறந்து தலையாட்டுவோம். அது அதன் ஆனந்தத்தைக் காட்டும்.

இயற்கை நடிப்பு நம் இன்னல்களை மறக்கச் செய்து; நம் மனத்தில் புத்தொளி பிறக்கச் செய்கிறது. காவியம், அழகு முத்துக்களை அள்ளித் தெளிக்கும் ஆழ்கடலைப் போன்று அரும் பெருங் கருத்துக்களை, அரிய பெரிய பொருட்களைத் தருகின்றது. உயிரும் உணர்ச்சியுமுள்ள அதாவது 'உயிரோட்டம்' நிறைந்த ஓவியம், நம் இன்ப வாழ்வின் சுக துக்கங்களை மறக்கச் செய்து, நம் மனம் அமைதியைக் காண நமக்கோர் சாந்தியளிக்கிறது.

இன்று விஞ்ஞானக் கலை வளர்பிறை மதி போல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றது. விஞ்ஞானம்—கல்வியின் சாரம்! விஞ்ஞானம் இன்று அருணனாய் அவனியெங்கும் அறிவொளி பரப்பி

வருகின்றது. மாநிலத்து மக்களின் மடமையை நீக்கி, மூட நம்பிக்கையைப் போக்கி அறிவுத் தென்றல் வீசுவதற்கு உதவுகிறது விஞ்ஞானம். இன்று விஞ்ஞானத்தால் அவனியை ஆக்கவும் அழிக்கவும் முடியும்.

மக்களாட்சியின் எதிரொலி எழுத்துக்கலை. இளம் எழுத்தாளனின் எழிலுறு கருத்துக்கள் மக்களின் இதயத்திலே பதிந்து விடுகின்றன. அதன் விளைவுகளும் பற்பல....!

உலகம் ஓர் இருட்டறை. அதில் பேச்சுக்கலை ஓர் ஒளி விளக்கு. அவ்விளக்கு எல்லோருக்கும் எளிதில் அமையாது. அவ்விளக்கால் அகிலமெங்கும் அறியாமையைப் போக்கலாம்; அழிவுப் பாதையை நீக்கலாம். சீரிய முறையில் கூரிய புத்தியால் நேரிய வழியில் சமுதாயத்தை சீர் திருத்தலாம். இன்று அரசியல் வாதிகள் பேச்சு என்னும் எழுதுகோலால், வல்லமை என்னும் வர்ணக் குழம்பில் தோய்த்து மக்களாலாகிய நாடென்னும் லிகிதத்தில் அரசியல் என்னும் அமைப்பை அமைக்க விரும்புகின்றனர். இங்கே அரசியல் கலையாக மாறுகிறது. ஆனால் இன்று அரசியல் கலை கொந்தளிக்கும் கடலின் அலையாக மாறியிருக்கின்றது. அங்கே அரசியல் கலைஞர்கள்—வல்லுநர்கள்; விற்பனர்கள்; தந்திரிகள் என்று கூறப்படுகின்றனர். இன்றைய உலகம் அரசியல் கலைஞர்களையும், மேதைகளையும் எதிர்நோக்கியுள்ளது.

வளர்க கலை!

சேலம் நகர தமிழரசுக் கழக மாநாடு ஜனவரி 30, 31 தேதிகளில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. முதல்நாள் நடைபெற்ற இலக்கிய மாநாட்டிற்கும், அடுத்த நாள் நடைபெற்ற அரசியல் மாநாட்டிற்கும் உள்ளூர், வெளியூர் தமிழரசுக் கழகத்தினரும் பொதுமக்களும் திரளாக கூடியிருந்தனர். மாநாட்டுக் காட்சிகள் சிலவற்றை மேலே காணலாம்.

1, 2. தலைவர் ம. பொ. சி, பிரம்மாண்டமான மலர் மாலைக்கு நடுவில் திண்டாடுவதைக் கண்டு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்.

3. கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் இலக்கியச் சொற்பொழிவாற்றுகிறார்.

4. ஊர்வலத்தில் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி, கவிஞர் கா. மு. ஷெரீப், வடக்கெல்லைப் பாதுகாப்புத் தளபதி கே. விநாயகம் எம். எல். ஏ. ஆகியோர்.

5. ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை நெருங்குகிறது. முன்னணியில் சின்ன அண்ணாமலை கம்பீர நடை போடுகிறார்.

6. 'உமா' ஆசிரியர் திரு. ஜி. உமாபதி எம். சி. மாநாட்டில் வீர உரையாற்றுகிறார்.

7. ஏழுவயதான குழந்தை மணிமேகலை சங்க இலக்கியங்களைப் பற்றி பிரமாதமாகப் பேசி மக்களை திகைக்க வைத்தாள்.

பட உலகம்

[எம்பிஎஸ்]

விடுதலை

நியூ ஈரா பிக்சர்ஸாரின் முதல் படமான விடுதலை, பொய் வெல்லாது என்ற உன்னத லக்ஷியத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பொய் சொன்னால் அதை மறைக்க எப்படி பல பொய்கள் சொல்ல வேண்டியிருக்கிறதென்றும் அப்படி சொன்னாலும் இறுதியில உண்மை எப்படியும் வெளிப்பட்டு விடும் என்பதையும் இப்படம் வெளிப்படுத்துகிறது.

உலகத்திற்கு பெரிய யோக்யனாகவும் உள்ளே பித்தலாட்டக்காரனாகவும் வேஷம் போடும் பப்ளிக் பிராஸிகூட்டர் பெரியசாமி தன் தம்பி செய்த ஒரு கொலை, தன் சுய கௌரவத்திற்காகவும், எதிர்பார்க்கும் ஜட்ஜ் பதவி வருவதற்கு தடங்களாக இருக்குமென்பதற்காகவும், மறைக்க பல தீவிர முயற்சிகள் செய்கிறான். கொலையுண்ட ஜதராபாத் அய்யாசாமி கடைசியாக தன் வண்டியில் வந்து மணி பர்ஸை மறந்து வண்டியில் விட்டு விட்டுப்போக அதை எடுத்து தன் கடனை அடைக்க முற்படும் வண்டிக்காரன் முருகன் கொலை குற்றத்திற்காளாகி கூண்டில் நிறுத்தப்படுகிறான். பெரியசாமி போலீஸ் கட்சிக்கு ஆஜராகி வண்டிக்காரனுக்கு எதிராகவும் வாதாடுகிறான், குற்றமற்ற வண்டிக்காரன் தன்னால் தண்டனை அடைவதை மனம் சகிக்காத பெரியசாமியின் தம்பி செல்லையா தானும் விஷம் அருந்தி, தன் காதலிக்கும் விஷத்தை கொடுத்து இருவரும் இறக்கின்றனர். இதனால் ஏற்பட்ட பல குழப்பங்களில் மன நிம்மதி இல்லாது வேதனைப்பட்டு வேதனைப்பட்டு இறுதியில் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு

ஏவி. எம். தயாரிப்பான 'பெண்'ணில் அழகிகள் அஞ்சலியும், வைஜயந்தியும்.

விடும் பெரியசாமி தக்க தண்டனை அடைகிருன். பெரியசாமியின் மகளும் தன் இஷ்டப்படி அத்தானை மணக்கிருள்.

கதையின் லட்சியம் உயர்ந்ததாக இருந்தாலும் பல இடங்களில் கதையில் குழப்பம் ஏற்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் பல அனுவசியமான பாத்திரங்கள் என்று சொல்லலாம். லாயர் பெரியசாமியின் மகளாக தோன்றும் புது முகம் ஒரு விதமான உற்சாகமும் இல்லாமல் பல காட்சிகளில் தோன்றி மறைகிருர். பெரியசாமியின் சமையல் காரனுக தோன்றும் பட்டும் நமக்கு சில சந்தர்ப்பங்களில் உற்சாகமளித்தாலும் பாத்திரம் அனுவசியம்தான்.

'மனேகரா' வில் டி. ஆர். ராஜகுமாரி

சித்தூர் வி. நகய்யாவும், மனேகரும் படத்திற்கு உயிர் அளித்திருக்கிருர்கள். வண்டிக்காரனுக தோன்றியுள்ள பீர் மகமது நன்ருக நடித்து பல இடங்களில் நம் உள்ளத்தை தொடுகிருர். படத்தை தயாரித்துள்ள கே. ராமனுத்தே டைரக்ட் செய்திருக்கும் இப்படத்தை ஒரு முழு வெற்றிப் படம் என்று சொல்ல முடியாது.

பொன் வயல்

ஆசிரியர் 'கல்கி'யின் 'பொய் மான் கரடு' என்ற கதையை ஆதாரமாகக் கொண்டு பொன் வயலை உருவாக்கி இருக்கின்றனர் ஜெயந்தி புரொடக்ஷன்ஸார். அருகில் வசித்து வந்த பெரிய பண்ணைக்காரன் செங்கோடானின் குடும்பக் கதை தான் இது. தமிழ் நாட்டின் பண்ணை வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு படம் எடுக்க முன் வந்தது பற்றி ஜெயந்தி புரொடக்ஷன்ஸாரைப் பாராட்ட கடமைபட்டிருக்கிருேம். 'கல்கி'யில் வெளியான கதையைவிட திரைக் கதையில் பல சிக்கல்களும் குழப்பங்களும் ஏற்படுகிறது. படத்தின் விருவிருப்பை பாதிக்கிறது இந்த குழப்பம்.

இப்படத்தில் பண்ணை சொந்தக்காரன் செங்கோடனுக தோன்றும் டி. ஆர். ராமசந்திரன் ஆரம்ப முதல் கடைசி வரை மிகவும் கச்சிதமாக நடிக்கிருர். செம்பவள வல்லியாக நடிக்கும் அஞ்சலி தேவியும் நன்ருகவே நடித்திருக்கிருர். வசனங்களை ஏ. டி. கே. மிகவும் எளிய நடையில் எழுதியிருக்கிருர்.

தமிழரின் வாழ்க்கையை முழுக்க முழுக்க பிரதிபலிக்கும் இப்படம் ஒருபாமர ரஞ்சகமான படம்.


SOAPS OF REPUTE
OK
PRODUCT OF THE EAST ASIATIC CO MADRAS
SOAP
MEDICATED
WASHING
PRODUCT OF THE EAST ASIATIC CO. (INDIA) LTD. MADRAS.
Manfacturers:
THE EAST ASIATIC CO. (INDIA) LTD.,
MADRAS.

19 72 05

மனோகரா

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் நாடகப் பூங்கா வில் ஒரு இனிய தென்றல் வீசத் தொடங்கியது. நாடகப் பேராசிரியர் ப. சம்பந்த முதலியாரின் பல நாடகங்களைத்தான் குறிப்பிடுகிறேன். அவைகளில் ஒன்று மனோகரா. பல ஆயிரக் கணக்கான மக்கள் நாடக மேடையில் கண்டு களித்த இந் நாடகத்தைத்தான் இப்பொழுது மனோகர் பிக்சர்ஸார் மனோகரா என்ற பெயரிலேயே படமாக்கி மார்ச் 3-ந் தேதி யன்று வெளியிடுகின்றனர்.

தமிழ், தெலுங்கு, ஹிந்தி மூன்று பாஷையில் உருவாக்கியுள்ள இப்படத்தில் பல பிரம்மாண்டமான ஸெட்டுகளைப் பார்க்கலாம். வஸந்த விழாக் காட்சிகள் கவர்ச்சிமிக்க முறையில் சேர்க்கப்பட்டுள்ளனவாம். மனோகரனாக சிவாஜி கணேசனும், விஜயாவாக கிரிஜாவும், வசந்த சேனாவாக டி. ஆர். ராஜகுமாரியும் நடிக்கின்றனர். மற்றும் ராணி பத்மாவதியாக கண்ணாம்பாவும் வஸந்தனாக ராதாகிருஷ்ணனும், நன் மந்திரியாக ஜாவர் சீதாராமனும் நடிக்கின்றனர். தமிழ்ப் படத்தின் வசனத்தை விருவிருப்பாக எழுதியிருக்கிறாராம் மு. கருணாநிதி. 3-ந் தேதி பார்த்துவிட்டால் போகிறது.

சொர்க்கவாசல்

வெகுநாட்களாக தயாராகி வரும் பரிமளா பிக்சர்ஸின் சொர்க்க வாசலின் இறுதி காட்சிகள் சுடப்பட்டுவருகிறது. அஞ்சலிதேவி, கே. ஆர். ராமசாமி. எஸ். எஸ். ராஜேந்திரன் தோன்றும் இப்படம் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கலாம். சி. என். அண்ணாதுரையால் கதை வசனம் எழுதப்பட்டுள்ள இப்படத்தை காசிலிங்கம் டைரக்ட் செய்து வருகிறார்.

கற்கோட்டை

கெம்ப்ராஜின் இப்படம் வாஹினி ஸ்டுடியோவில் முடியும் தருவாயில் இருக்கிறது. அநேகமாக மார்ச் 12-ந் தேதி வெளிவரலாம். கன்னட பாஷையிலும் படமாக்கப்பட்டு வரும் கற்கோட்டையை கெம்ப்ராஜே டைரெக்ட் செய்திருக்கிறார். கெம்ப்ராஜும் கிருஷ்ணகுமாரியும் பிரதம பாகத்தில் தோன்றுகின்றனர். மற்றும் கே. சாரங்கபாணி, டி. வி. சேதுராமன், கணபதி பட், புது முகம் வேதா முதலியவர்களும் நடிக்கின்றனர்.

ரத்தபாசம்

நெப்ட்யூனில் மும்முரமாக வளர்ந்துவரும் மற்றொரு படம் ரத்தபாசம். அஞ்சலிதேவி, வித்தியாவதி, டி. கே. ஷண்முகம் டி. கே. பகவதி, டி. எஸ். பாலையா முதலியவர்கள் தோன்றும் இப்படத்தை ஔவை புரொடக்ஷன்ஸாரும் ஜுபிடர் பிக்சர்ஸாரும் சேர்ந்து தயாரித்திருக்கின்றனர். ஸ்ரீதர் கதை-வசன பொறுப்பை ஏற்று இருக்கிறார். ஆர். எஸ். மணி டைரக்ஷனில் உருவாகிறது இப்படம்.

பணம் படுத்தும் பாடு

ரோஹிணியின் 'புரொடக்ஷன் 9' படத்திற்கு இந்த பெயரை வைத்திருக்கிறார்களாம். என். டி. ராம ராவ், தங்கவேலு, சௌகார் ஜானகி ஜமுனா முதலியோர் நடிக்கும் இப்படம் தமிழ் தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாராகிறது. ஒய். ஆர். ஸ்வாமி டைரக்ட் செய்கிறாராம் இந்தப் படத்தை.

போட்டி உலகிற்கோர் புது ஜோதி!

"11 குறிப்புகளில் இணையற்ற வெற்றி"

ஒலிம்பிக் (இந்தியா) கிராஸ் வேர்ட்ஸ்

பிரதி மாதம் சராசரி

ரூ. 70,000 க்கு மேல் பரிசளிக்கிறது

உங்கள் முயற்சியும் பலனளிக்கலாம்.

விபரங்களுக்கு:

ஒலிம்பிக் (இந்தியா) கிராஸ் வேர்ட்ஸ்

6, பெல்ஸ் ரோட், சென்னை-5.

மனோகராவில் சிவாஜி கணேசன் சங்கிலியை அறுக்க திமுருகிறார்.

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

பத்மினி, சிவாஜி கணேசன், ராகினி, டி. ஆர். ராமச்சந்திரன், பி. ஆர். பந்துலு, சாரதாம்பாள் மற்றும் பலரும் நடித்துள்ள இப்படம் ஒரு முழு நீள ஹாஸ்ய படமாக இருக்குமாம். பத்மினி பிக்சர்ஸாரின் இப்படத்தின் கதை டி. கே. கோவிந்தன் எழுதினது. இதற்கு வயிறு குலுங்கச் சிறிக்க வைக்கும் வசனத்தை அமைத்திருக்கிறார் ப. நீலகண்டன்.

வாழ்த்துகிறோம்

மாயவரம் ஸ்ரீ. T. கணேசய்யர் புத்திரன் சிரஞ். கோதண்டராமனுக்கும் (தி ஸ்டேஜ் கூட்டாளி) ஸ்டாண்டர்ட் வாக்கும் ஆயில் கம்பெனி ஸ்ரீ. N. S. நீலகண்டய்யரின் புத்திரி சௌ. லக்ஷ்மிக்கும் கோபாலபுரத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மறுதினம் ம்யூஸியம் தியேட்டரில் நடைபெற்ற வரவேற்புக்கு பல பிரபலஸ்தர்களும் வந்திருந்தனர்.

திருமதி எம். கே. செல்வமணியால் நடத்தப்பட்டு வரும் பரதகலா நிலயத்தில் இப்பொழுது அநேக மாணவிகள் நடனம் கற்று வருகின்றனர். அவரிடம் சிக்ஷை பெற்று வரும் ஒரு அமெரிக்க ஸ்திரீயான மிஸ் கர்லாப் ரீஸிற்கு அவர் பரதம் பயிலுவிக்கிறார்.

ஆண்மையுள்ள ஆண்களையே பெண்கள் விரும்புவார்கள்

மனோவலிமையை இழக்காதீர்கள்.

டிரிடோன் டிலாய் (ஆண்களுக்கு)

இது உயர்ந்த மூலிகைகளினால் தாயாரிக்கப்பட்ட ஓர் அரிய டானிக். ஆண்களுக்குண்டான சகலவிதமான நோய்களையும் முக்கியமாக ஆண் குறி வளராதிருத்தல். சம்போக இச்சையின்மை முதலியவைகளை நீக்கி உடனே குணமாகிறது ரூ. 5.

எண்டிமோ பில்ஸ்

(நரம்புச் சக்திக்கும், நரம்புத்தளர்ச்சிக்கும் உலகப் புகழ் பெற்ற மருந்து)

ஆண் குறி இளைத்து செயலற்றுப்போதல், நரம்புத் தளர்ச்சி, தாது நஷ்டம், சுக்கிலத்தில் ஜீவக்கிருமிகள் இல்லாமை, சம்போகத்தில் அயர்வு, பெண்கள்மேல் இச்சையில்லாதிருத்தல் இவைகளுக்குக் கைகண்ட மருந்து.

32 மாத்திரைகள் கொண்ட பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

V. P. STORES

(U. T. M.) P. B. 51, MEERUT

BIRTH CONTROL

Rubber goods for Ladies and Gents

GENTS.	Per Doz.	Rs.	As.
Filco F. L.	,, ,,	4	0
Silco U. S. A.	,, ,,	5	4
Washable F. L.	,, ,,	7	8
Lightex British	,, ,,	8	4
Premox U. S. A.	,, ,,	10	0
Crocodile F. L.	,, ,,	13	8
American Tips	,, ,,	5	8
LADIES.	**EACH**	**Rs.**	**As.**
Check Pessary	,,	2	0
Neeto Tablets (tube)	,,	3	0
Sponge Ball	,,	1	0
B. C. Jelly	,,	1	12

Woman's Most difficult problem solved. PULS CAPS (U. S. A.) is an unfailing cure for Female Irregularities and DELAYED MENSES for any reason, give desire result 3 to 4 days. **Rs. 6/.**

PULS CAPS (Special) Gives desired result within 24 hours.

Warning. On no account to be used during pregnancy as they cause abortion and miscarriage.

V. P. STORES

(U. T. M.) P. B. 51, MEERUT

ஆசிரியர், அச்சிட்டு வெளியிடுபவர் : ஜி. உமாபதி எம். சி., உமா பிரிண்டர்ஸ், 4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1: நிர்வாக ஆசிரியர் : ர. சண்முகம்.

பட்டணம் பொடித் தொழிற்சாலைகளில்

மிகப் பெரியது.



தந்தி : மூக்குத் தூள்

போன் : 4071

N. V. ஷண்முகம் கம்பெனியார்

த. பெ. 555. வண்ணாரப்பேட்டை

மதராஸ்-21.

Regd. No. M. 6309. UMA March 1954

Edited, Printed and Published by G. Umapathy, M.C. at Uma Printers,
4/32. Thathamuthiappan Street, Madras-1 Phone: 2200